நகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு + XII = 28

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 01 வியாழக்கிழமை (14.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 049

# கூட்டமைப்பின் தலைவர்கள் இன்று டில்லியில் முக்கிய பேச்சு

## நாடு திரும்பியதும் விரிவான அறிக்கை

கொழும்பு, ஜனவரி 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் நால்வர் இன்று புதுடில்லியில் இந்திய அரசுத் தலைவர்களையும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுகின்றனர்.

நாளை சென்னை செல்வர் என்று கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் மாலையும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று விடிகாலையும் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கைதிகளின் உண்ணாவிரதம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.சிறைச்சாலைக் கைதிகள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாக நேற்று இடைநிறுத்தப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)




## நீதி அமைச்சர் நேரில் உறுதிமொழி வழங்கினால் மட்டுமே உண்ணாவிரதத்தை நிறுத்த முடியும் என்கின்றனர் அரசியல் கைதிகள்

### தூதுக்குழுவினரிடம் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.14

மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகள், தமது கோரிக்கைகள் தொடர்பாக நீதி மற்றும் சட்டமறுசீரமைப்பு அமைச்சர் நேரடியாக தமது முடிவை தெரிவித்தால் மட்டுமே உண்ணாவிரதத்தை கைவிட முடியும் என அறிவித்துள்ளனர்.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவின் வேண்டுகோளின் பேரில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண இராஜப்பு ஜோசப், நீதியமைச்சின் ஆலோசகர் இராஜன் ஆசீர்வாதம், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் டி.ஆர். டி.சில்வா, புதிய மகஸீன் சிறைச்சாலை அத்தியட்சகர் ஷெல்ரன் பெத்தேயூ ஆகியோர் கொண்ட குழு உண்ணா விரதிகளுடன் நேற்றுப் பேச்சு நடத்தினர்.

கைதிகள் விடயத்தில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதியமைச்சர் உறுதி வழங்கியுள்ளார். எனவே உண்ணாவிரத்தைக் கைவிடவேண்டும் எனக் குழுவினர் உண்ணாவிரதிகளிடம் கேட்டுக் கொண்டனர்.

குழுவினரின் உறுதிமொழியை ஏற்க மறுத்த உண்ணாவிரதிகள், நீதியமைச்சரின் உறுதிமொழி நேரடியாக தெரிவிக்கப்பட வேண்டும். எமது கோரிக்கைகளான விடுதலை, பிணை ஆகியன நிறைவேற்றப்படும் என அவரது உறுதிமொழியில் (16ஆம் பக்கம் பார்க்க)



## இந்துக்களின் தைப்பொங்கல் காலத்து எதிர்பார்ப்புக்கள் எமது பிரதேசத்தின் பன்மைத்துவத்துக்கு எடுத்துக்காட்டு

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கொண்டாடப்படும் தைப்பொங்கல் பண்டிகையின்போது இந்துக்கள் தம் பாரம்பரிய கலாசார மரபுகளை அனுஷ்டித்து, அவற்றுக்குத் தம்மை அர்ப்பணித்து, எதிர்காலம் குறித்தும் எமது சமூகத்தில் அமைதி, சுபீட்சம், புரிந்துணர்வு ஏற்படவும் சாதகமான எதிர்பார்ப்புகளை வைக்கின்றனர். இது எமது சமூகத்தின் பன்மைத்துவத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

இந்துக்களின் பஞ்சாங்கத்தில் மிக விசேடமான ஒரு பண்டிகையான தைப்பொங்கல் மரபுகளையும், கிரியைகளையும் இந்துக்கள் தொடர்ந்தும் அனுஷ்டித்து வருகின்றனர். இரண்டு வகையில் புனிதமாகக் கருதப்படும் இத்தினம் சிறந்த அறுவடையை எதிர்பார்த்தும் விவசாயிகள் தமது கடின உழைப்புக்குப் பின்னர் பெற்ற அறுவடைகளுக்காகவும், அதை அளித்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும்.

இலங்கை வாழ் இந்துக்கள் உலகெங்கிலும் பரந்துவாழும் (16ஆம் பக்கம் பார்க்க)



## நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றாக வாழும் எதிர்காலத்தை உருவாக்கச் சக்தி கிடைக்கட்டும்

அனைத்துப் பேதங்களையும் மறந்து சகோதரத்துவம் கோலோச்சும் தாய் மண்ணில், அனைத்து மக்களும் ஒற்றுமையாக, ஒன்றாக வாழக்கூடிய எதிர் காலத்தை உருவாக்க உங்களுக்கு சக்தியும், துணிவும் கிடைக்கவேண்டுமென இத் தைப்பொங்கல் திருநாளில் மனமார வாழ்த்துகிறேன்.

எதிர்க் கட்சியின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகா தமது பொங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்; வழி பிறந்தால் ஒளி பிறக்கும்' என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் சிறந்த கலாசாரத்திற்கு உரித்துடையவர்களாக இருக்கின்றனர். இவர்களது கலாசாரப் பாரம்பரியங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன. மனித நேயமிக்க ஒத்துழைப்பைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்ச் சமூகம், வரலாறு தொட்டு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பக்கபலமாக (16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெய்ட்டியை உலுக்கியது பூகம்பம்; ஆயிரக்கணக்கில் மக்கள் பலியாகினர்!

போர்ட் - ஒவ் - பிரின்ஸ், ஜன. 14

ஆபிரிக்காவின் மிகவும் வறிய நாடுகளில் ஒன்றான ஹெய்ட்டியை நேற்றுப் புதன்கிழமை அதிகாலை உலுக்கிய பூகம்பம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஜனாதிபதி அலுவலகம், ஐ.நாவின் அமைதிப்படை அலுவலகம் உட்படப் பல முக்கிய அலுவலகங்கள் தரைமட்டமாகியுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வேட்டோசைகள் ஓய்ந்த எம் தேசத்தில் மகிழ்வுடன் தைத்திருநாளை கொண்டாடுவோம்

### அமைச்சர் டக்ளஸ் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம், ஜன. 14

வேட்டோசைகள் ஓய்ந்த எங்கள் தேசத்தில் கௌரவமான அரசியல் உரிமைகளோடு முகமுயர்த்தி வாழ்வோம்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள பொங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கை வாய்ப்பைத் தரும் பொங்கல் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் செய்தி



இருள் சூழ்ந்திருந்த காலம் முடிவடைந்து இறைவனின் ஒளிக்கீற்று புவியின் மீது பரவும் தினமே தைத்திருநாளாகும்.

இத்திருநாளைக் கொண்டாடும் இந்துமக்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

- இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தாம் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

நிறைந்த அறுவடையின் பின்னர் செஞ்சோற்றுக்கடன் (16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

நெல்லி கோடியல்

திருமண விழாக்கள் மற்றும் விசேட வைபவங்களுக்கும் இலகுவாகவும் நிறைவாகவும் அருந்திட வெஸ்ரா நெல்லிகிரஸ்

(சி/563666)

**வெஸ்ரா இன்டஸ்றீஸ்**

ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் தொ.பே : 0214591372



**TECHNOPARK**

INTERNET CAFFE

KOKUVIL JUNCTION - KOKUVIL-JAFFNA

Official VOIP& Ukash Resellers 1EURO -185

HIGH SPEED BROADBAND ACCESS
FEATURES PRICING
WEBCAM FACILITIES
PRINTING & SCANNING
FEATURESS STAFF
& VOLUNTEER OPPORTUNITIES

Sri Lanka Leading Prepaid Cards

Dialog - Mobital - Hutch - [illegible]untel - Reloads

முகம் பார்த்து கதைப்பதற்கு 1 மணித்தியாலத்திற்கு 50 மட்டுமே

இந்தியா உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு 3/=மட்டுமே

முற்றிலும் குளிருட்டபட்டது

127/2 kokuvil junction kokuvil- 0785030768


# அரசாங்க அறிவித்தல்

## நிவாரண விநியோகத்துக்குரிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்கான பின்வரும் பொருள்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

சிவப்பு நாட்டரசி, கோதுமை மா (கிறின் பிரான்ட்), சீனி

இப்பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன. இப்பொருள்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் மீளளிக்கக்கூடியதான வைப்பாக ரூபா 50000.00 உம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை புனர்வாழ்வுக் கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'நிவாரண விநியோகத்துக்குரிய பொருள்களுக்கான கூறுவிலை' எனக் குறிப்பிட்டு 20.01.2010 ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல்(Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். அத்துடன் பொருள்களுக்கான மாதிரியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பொருள்களை கொள்வனவு செய்வது தொடர்பான பொருள்களின் தரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்துடன் தொடர்பு கொண்டு 15.01.2010 முதல் பெற்றுக்கொள்ளமுடியும்.

கூறுவிலைகள் 20.01.2010 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்கமுடியும்.

பொருள்களை விநியோகிப்பவர் கோரப்படும் தொகையினை அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று தினங்களுக்குள் நாவற்குழி உணவுக் களஞ்சியத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது

க.கணேஷ்,
அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலரும்
யாழ். மாவட்டம்.

## விவேகானந்தர் விழா

யாழ்ப்பாணம், ஜன.14

சுவாமி விவேகானந்தர் விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மாணவிகளின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார். (04 - 16)

## பிரதி வெள்ளி தோறும் சைவ விரிவுரை

யாழ்ப்பாணம், ஜன.14

நாவலர் நோக்கில் சைவ வாழ்க்கை என்னும் தலைப்பில் சைவ வினாவிடையை அடிப்படையாகக் கொண்டு பிரதி வெள்ளி தோறும் நல்லை ஆதீனத்தில் பிற்பகல் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார்.

இதன் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. சமய ஆர்வலர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன் பெறுமாறு இந்த அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (50 - 9)

## மாவிட்டபுரத்தில் அபிராமிப்பட்டர் விழா

யாழ்ப்பாணம்,ஜன.14

மாவிட்டபுரம் வீணியவளை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 9மணிமுதல் பொங்கல் விழாவும் பிற்பகல் 3 மணிக்கு அபிராமிப் பட்டர் விழாவும் இடம்பெறவுள்ளன.

பக்தர்கள் தமது சொந்த வாகனங்களில் வந்து உற்சவத்தில் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது என ஆலய நிர்வாகத்தர் அ. துரைச்சாமி ஐயர் தெரிவித்தார்.

இடம் பெயர்வின் பின் முதல் தடவையாக இன்று இந்த உற்சவங்கள் ஆலயத்தில் நடைபெறுகின்றன என்றும் அவர் கூறினார். (ஒ-1)

## அளவெட்டியிலும்......

வண்ணை, ஜன ,14

அளவெட்டி தெற்கு,நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை தைப்பொங்கல் விழாவும் அபிராமிப்பட்டர் விழாவும் சிறப்பாக நடைபெற உள்ளன.

காலை 8 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். 9 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று ஸ்ரீமத்நாராயணர் சுவாமி பூமாதேவி ,ஸ்ரீதேவி புடைசூழ வீதியுலா எழுந்தருள்வார். (ஒ-1-160)

## அராலியில் இன்று கைக்கொடி மாட்டுச் சவாரி

யாழ்ப்பாணம்.ஜன.14

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று இடம்பெறும் உழவர் விழாவில் கைக்கொடி மாட்டுச் சவாரிப் போட்டி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கைக்கொடி மாடுகளின் உரிமையாளர்களை மட்டும் சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)


**வேலைக்கு ஆள் தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள (சிறு) பூட் சிற்றிக்கு வேலைக்கு ஆள் தேவை.

கொக்குவிலில் இருந்து சுன்னாகத்திற்கிடையில் வசிக்கும் பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள: 0215101533 (93868)

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்

**வெற்றி இலக்கு**

பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

வெளிவருகிறது தரம் 1, 2, 3, 4,5, தேவையான பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**தயா அச்சகம்**

138, நாவலர் றோட், மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்


**தவறிவிட்டது**

உப்புமடச்சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் ஒரு சோடி காப்பு, சங்கிலி என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

குளங்கரை லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தொ. பே: 0774417665

# நீர்வைப்பதி அருள்மிகு நாகபூஷணி அம்மன்



நீர்வேலி அருள்மிகு வாய்க்காற் தரவைப் பிள்ளையார் கோவில் எதிரிலே பிள்ளையாரைக் காப்பாற்றி அவரது தாயாக பருத்தித்துறை வீதிக்கு கிழக்குப் பக்கமாக அமைந்திருப்பது தான் அருள்மிகு நாகபூஷணி அம்மன் ஆலயம். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இவ் ஆலயத்தைத் தற்போது அமரர் நடராசா இராசம்மா குடும்பத்தினர் பராமரித்து வருகிறார்கள்.

மேலும் இவ் ஆலயப் பூசைகள் யாவும் திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் காலையில் நடைபெறுகின்றன. இவ் ஆலய திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெற அம்பாளின் அடியார்களின் பூரண ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.

பரிபாலனசபை,
அருள்மிகு நாகபூஷணி அம்மன் கோயில்,
நீர்வேலிச் சந்தி, நீர்வேலி.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1156 நீலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் 12 33 46 52

12-01-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 5,920,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 226,915 | 20/- | 4,538,300/- |
| 2 இலக்கங்கள் | 20,768 | 40/- | 830,720/- |
| 1 இல. + லக்கினம் | 20,714 | 60/- | 1,242,840/- |
| 2 இல. + லக்கினம் | 1,906 | 200/- | 381,200/- |
| 3 இலக்கங்கள் | 552 | 1000/- | 552,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,920;550/- | - |
| மொத்தம் | | | 8,695,060/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 270,918 | | 9,195,060/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,427,525/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : லட்சுமியா ஷாந்தி, சிலாபம்

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ஜயசேன அல்வெத்தம, நாரங்கொடகெத்த

2010 ஜனவரி 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறாத டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 400877164-6-45 |
| அனுராதபுரம் | 400886125-4-19 |
| புத்தளம் | 400878421-7-49 |
| வெம்பாந்தோட்டை | 400876117-4-19 |
| நுவரெலியா | 400885742-0-02 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**பொன்னையா கிருஷ்ணமூர்த்தி**

தோற்றம் 1938.06.30 — மறைவு 2009.01.26

அன்பிற்கும் பாசத்திற்கும் இலக்கணமாய்
வாழ்ந்த நீங்கள்
எம்மைப்பிரிந்து ஆண்டு ஒன்று ஆனபோதும்
உங்கள் நினைவலைகள் என்றும் எம்
நெஞ்சில் நிழலாடுதே!

தகவல்: குடும்பத்தினர்.

பிளைக் றோட், சங்கானை. (93860)

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்



**ஜெயக்குமாரன் தனுஷன்**

தோற்றம் 04.05.1986 — மறைவு 14.01.2005

கண்ணீருக்கு தடை போட்டது போல
உன் நினைவுகளுக்கு தடைபோட
முடியவில்லையே!
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்று விட்டாயே மகனே!

தகவல்: குடும்பத்தினர்
கஜன்

பழனி ஆண்டவர் கோவிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(93857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொங்கலில் பொங்கும் சிந்தனை

இன்று தைத்திங்களின் முதல் நாள். தைப்பொங்கல் திருநாள்.

மார்கழிப் பெண்ணுக்கு விடை கொடுத்து, தைப் பாவை எனும் தையல் மெல்ல நடைபோடத் தொடங்கும் முதல் நாளும் இதுவே. தமிழர்களின் ஆண்டுக்கணக்கான 'திருவள்ளுவர் ஆண்டு' தொடங்கும் முதல் நாளும் கூட இதுதான்.

தமிழர்களின் திருநாள் கொண்டாட்டங்களுள் முக்கியமானது தைப்பொங்கல். சாதி,மதம், இனம் தாண்டி, இயற்கையோடு இயைந்து தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடும் திருநாளும் இதுவே.

வாழ்வியல் சிறப்பும், அறிவியல் கருத்தும் பொதிந்து கிடக்கும் ஒரு பண்டிகை நாள் இதுவென்றால் அது மிகையாகாது.

இயற்கையின் இயக்கத்தின் உட்சூட்சுமத்தை அறிவியல் ரீதியாக உணர்ந்து, 'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்!' என்ற உணர்வெழுச்சியுடன் தமிழர்கள் வழமையாக அனுஷ்டிக்கும் கொண்டாட்ட நாள் இது.

அவனியின் அசைவியக்கத்துக்கு மூலமும் முதலும் ஆதவனே: அவனின்றி - அருணனின்றி - அணுவும் அசையாது என்பது அறிவியல் உண்மை.

சக்தியின் மூலமும் உறைவிடமும் உதயனே. உலகின் உயிர்ப்புக்கும், உயிர் வாழ்வுக்கும் உறுதுணை அவனே.

ஆதவனின் அந்தச் சக்தியை உலகில் பதிப்பவை பச்சைத் தாவரங்கள்தாம். சூரிய சக்தியைத் தொகுத்து விளைச்சலாக அவனிக்குத் தருபவை இந்தப் பச்சையங்களே. உலகின் உணவுச் சங்கிலி இந்த ஒளித் தொகுப்பில் இருந்துதான் தொடங்குகின்றது. இந்த விஞ்ஞானத்தைத் தனது மெஞ்ஞானத்தால் உணர்ந்த தமிழன், அந்த இயற்கையின் தத்துவத்தை உணர்ந்து, ஏத்தி, மகிழ்வதற்காகத் தேர்ந்ததே பொங்கல் திருநாள்.

சூரிய சக்தியின் வலுவை பச்சைத் தாவரங்கள் மூலமாக விளைச்சலாக்கித் தானியவடிவில் நமக்குத் தருவது உழவு.

சக்தியின் மூலமான சூரியனையும், அந்த சூரிய சக்தியை உலகுக்குப் பெற்றுத் தரும் உழவுத் தொழிலையும், அந்த ஆதவனின் அருட்கொடை நெற்குவியலாகக் கிட்டும் பேறையும் விதந்து, மகிழ்ந்து, விளைச்சல் வேளையில் அவன் கொண்டாடத் தேர்ந்ததே பொங்கல் பெருவிழா.

சூரியன் தனு இராசியிலிருந்து மகர இராசிக்கு நுழைவதையே 'மகர சங்கிராந்தி' என்கிறோம். அன்றுதான் தைப்பாவை பிறக்கின்றாள். அன்றுதான் சூரிய பகவான் வடக்கு நோக்கி சஞ்சரிக்கத் தொடங்குகின்றான். இதனை 'உத்தராயணம்' என்று கூறுகின்றோம். அது இன்று - இந்தப் பொங்கல் திருநாளன்று - மீண்டும் தொடங்குகின்றது.

இன்று பொங்கல் என்றால் நேற்றுப் போகித் திருநாள். 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' போகித் திருநாளின் உள்ளார்ந்தம். அந்தப் போகி நேற்றுப் போயிற்று. இன்று பொங்கல்.

நேற்றுக் கழிந்தது எது? இன்று புகுவது யாது? போகியோடு போனது எது? பொங்கலோடு வருவது எது? - என்பவை நியாயமான வினாக்களே.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். புதிய தடத்தில் பயணிக்க ஆரம்பிக்கும் சூரிய பகவானின் ரதம் நல்வழியைக் காட்டும் என்பது நம்பிக்கை.

இத்தகைய பல தைகள் தமிழர் தம் வாழ்வில் வந்து போயின. அவற்றின் மீதெல்லாம் நம்பிக்கை வைத்துக் காத்திருந்து ஏமாந்ததுதான் அவர்கள் வாழ்வில் மிச்சம்.

போரழிவும், பேரழிவும் அவர்களைச் சின்னாபின்னமாக்கிச் சிதைத்தழித்துத் துவம்சம் செய்து துவளவைத்து விட்டன. நம்பிக்கைகள் எல்லாம் இறுதியில் கனவாய், கதையாய், கானல்நீராய்த் தகர்ந்து போயின. அடிமைத்தனமும் விடியல் இல்லாத வாழ்வும் சாசுவதம் என்றாயிற்று. தொலைந்துபோன கண்ணியத்தை - கௌரவத்தை -மீட்போம் என்ற நம்பிக்கை சிதைந்துபோய் கூனிக் குறுகிப்போய் நிற்கின்றது நம் தமிழினம்.

என்றாலும், இத்தகைய துன்ப துயரங்களுக்காக நாம் அடங்கிப் போய்விட முடியாது. பற்றிப்பிடித்து, வாழ்வில் மீண்டெழுந்து உயர்வதற்கு ஒரு சிறு துரும்பு நம்பிக்கை ஒளிக்கீற்றாகக் கிட்டாதா என்று பார்த்திருப்பது - காத்திருப்பது - உயிர்ப்பின் உன்னதம்.

தமிழர் தம் வாழ்விலும் அத்தகைய ஓர் ஒளிக்கீற்று - வாய்ப்பு - கிட்டியிருக்கின்றது. இந்தப் பேரவலத்தைத் தமிழர் மீது சுமத்திய -திணித்த - அதிகாரத் தரப்பை ஒழுங்கு படுத்தும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை வாழ்வியல் நமக்குத் தந்திருக்கின்றது. அதுவும் கூட, பேரவலத்தை ஏற்படுத்திய துன்ப, துயர இழப்புகளை நீண்ட காலம் சுமந்து தவிக்க விட்டுவிட்டு வரலாறு அதை நமக்குத் தரவில்லை. குறுகிய காலத்திலேயே அந்தச் சந்தர்ப்பம் கிட்டியிருப்பது அதிசயமானதே.

ஒவ்வொரு விளைவுக்கும், எதிர்விளைவுண்டு என்பது இயற்கையின் நியதி. எமக்குப் பேரழிவுகளை, பேரிழப்புகளை, பெரு நாசங்களைத் தந்து நின்ற விளைவுகளுக்குப் பதில் கூறும் தீர்ப்பு நாள் - பதில் விளைவுக்கான நாள் - இன்னும் பன்னிரண்டு தினங்களில் நமக்குக் கிட்டியிருப்பது இழப்பிலும் சிறு நம்பிக்கையைத் தரும் துளிர்ப்பே. அதை இயன்றவரை சரியாக, தந்திரோபாயமாக, புத்தி சாதுரியமாக, சாணக்கியமாகப் பயன்படுத்துவது நம்மைப் பொறுத்தது. ஊர் சேர்ந்து இழுத்தால்தான் தேர் அசையும் என்பதைப் புரிந்து, இந்தச் சிதைவின் பின்னரும் ஒன்றிணைந்து சாதிக்க முயல்வோமாக. அதுவே நமது தைப்பொங்கல் சிந்தனையாக - பிரக்ஞையாக - பிரதிக்ஞையாக - அமையட்டும்!

# டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி நல்லூரில் நேற்று 7 மாதக் குழந்தை உயிரிழந்தது

## இதுவரை உயிரிழந்தோர் 15 ; 2 ஆயிரம் பேருக்கு நோய்த்தொற்று

யாழ்ப்பாணம், ஜன.14

டெங்குநோய்த் தாக்கத்துக்குள்ளாகி நல்லூரில் 7 மாதக் குழந்தையொன்று நேற்று உயிரிழந்தது.

இந்த மரணத்துடன் குடாநாட்டில் டெங்குநோய்த்தாக்கத்துக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் டெங்கு நோய்த்தாக்கத்துக்குள்ளானோர் எண்ணிக்கை 2 ஆயிரத்தையும் தாண்டி விட்டது என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் டெங்குநோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கடந்த மாதம் முதல் காலப்பகுதியில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் நல்லூரில் நேற்று 7 மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

டெங்கு நோய்த் தாக்கத்தினைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இது விடயத்தில் பொதுமக்கள் சுயமாகச் சிந்தித்து தமது சுற்றுச் சூழலைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பாகப் பொதுமக்கள் தமது சுற்றுச்சூழலில் உள்ள குப்பை கூழங்களை எரித்துவிட வேண்டும் . அல்லது மண்ணுக்குள் புதைத்துவிட வேண்டும்.

இவ்வாறு மக்களின் பொறுப்பான செயற்பாடுகளால்தான் டெங்கு நோய்த்தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

எனவே பொதுமக்கள் தொடர்ந்தும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். குறிப்பாக இளவயதினை உடைய குடும்பத்தினர் தமது பிள்ளைகளை நுளம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (50-9)

# தரைப்பாதையினூடாக குடாநாட்டுக்குள் குவியத் தொடங்கும் நடமாடும் வியாபாரிகள்


யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ். குடாநாட்டிற்கான தரைப் பாதை முழு மையாக திறக் கப்பட்ட பின் னர் தென்னிலங்கையில் இருந்து வரும் நடமாடும் வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த வியாபாரிகள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் வீடு வீடாகச் சென்று தாம் கொண்டு வந்த மரத்திலான தளபாடங்கள் மற்றும் பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்களில் சில வியாபாரிகள் மக்களுக்கு ஒரு மாத கடன் அடிப்படையிலும் தமது பொருள்களை விற்பனை செய்து வருவதை அவதானிக்க முடிந்தது.

அதனை விட சிறிய வாகனங்கள் மூலமும் மெத்தை, கட்டில், கதிரை போன்ற தளபாடங்களை இத்தகைய வியாபாரிகள் விற்பனை



செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (04-224)

# கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் 95 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன.14

ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவில் 95 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 95 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதில் கரைச்சிப் பகுதியில் 4 வாக்களிப்பு நிலையங்களும், பூநகரிப் பகுதியில் 13 வாக்களிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் 68 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன என்றார்.

இதேவேளை-கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வசதியாக வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்பாகத் தற்காலிக விசேட தபால் நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-9)

# யாழ்ப்பாணத்தில் மின் கட்டணத்தை இனிமேல் இணையவழி மூலம் செலுத்தமுடியும்

யாழ்ப்பாணம், ஜன.14

யுாழ்.தபாலகத்தில் மின்சார கட்டணங்களை இனிமேல் இணைய வழிமூலம் (On Line) செலுத்தலாம் என்று வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்ட மக்களின் நன்மை கருதி இந்த இணைய வசதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

இன்று வியாழக்கிழமை முதல் பொதுமக்கள் தமது மாதாந்த மின்சாரக் கட்டணத்தை இணையவழி மூலம் செலுத்தலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (50-9-224)

# தபால் மூலமான வாக்களிப்பில் யாழ்.வாக்காளர்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜன.14

ஜனாதிபதித் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பில் யாழ்ப்பாண வாக்காளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர்.

நேற்று மாலை வரை 2 ஆயிரத்து 500இற்கு மேற்பட்டோர் வாக்களித்துள்ளனர் என்று யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 727 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

தபால் மூல வாக்களிப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் இன்று நண்பகல் வரை நடைபெறுகின்றது.

நேற்று மாலை வரை சுமார் 2 ஆயிரத்து 500 பேர் வாக்களித்தமைக்கான பொதிகள் யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு திணைக்களத் தலைவர்களிடமிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மிகுதி வாக்களிப்புப் பொதிகள் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-9)

# திஸ்ஸ விதாரண, குணசேகர நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜன.14

விஞ்ஞான, தொழில்நுட்பத் துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண, அரசமைப்பு விவகார அமைச்சர் டியூ.குணசேகர ஆகியோர் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் இருவரும் உரையாற்றவிருக்கின்றனர்.

குடாநாட்டில் விஞ்ஞானத்துறை சார்ந்த அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து பல தரப்பினருடனும் திஸ்ஸ விதாரண பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார்.

அமைச்சருடன் பத்துப்பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்றும் வருகின்றது. (1)

## நாளை

| | |
|---|---|
| தை 2 | 15.01.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | அமாவாசை பி.ப. 12.56 வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் முழுவதும் |
| சுபநேரம்: | 06.34-08.04 வரை |
| ராகுகாலம்: | 11.04-12.34 வரை |
| | பட்டிப்பொங்கல் |

# தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளுக்காக பொருள்களை வழங்கியது செலான் வங்கி

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.நாகவிகாரைக்கு வரும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் வகையில் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை நேற்றுமுன்தினம் செலான் வங்கியின் யாழ்.கிளை வழங்கியது.

அண்மைக்காலமாகத் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால் நாகவிகாரைக்கு அருகிலுள்ள விடுதிகளில் தங்குவோருக்கு உதவும் வகையில் கம்பளங்கள், போர்வைகள் போன்ற பொருள்களையே செலான் வங்கி அன்பளிப்புச் செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை யாழ். நாகவிகாரையில் விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து செலான் வங்கி இப்பொருள்களைக் கையளித்தது.

இந்த நிகழ்வில் செலான் வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.நிரஞ்சன் இப்பொருள்களை யாழ்.நாகவிகாராதிபதியிடம் கையளித்தார். இதில் செலான் வங்கி அதிகாரிகளும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளும் கலந்துகொண்டனர். (50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: **வித்தியா**

### மேடம்



இரண்டு நாள்களாக இருந்த சோர்வு நீங்கி சுறுசுறுப்பாவீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

### இடபம்




சந்திராஷ்டமம் தொடங்குவதால் எதிர்பார்த்தவை தாமதமாகும். குடும்பத்தாரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல் படுங்கள். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். வியாபாரத் தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். முன்னெச்சரிக்கை தேவைப்படும் நாள்.

### மிதுனம்



சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறு வீர்கள். நன்மை கிட்டும் நாள்.

### கடகம்



சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். நன்மை கிட்டும் நாள்.

### சிங்கம்



குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறி வீர்கள். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் நீங்கும். புதுத் தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். கனவு நனவாகும் நாள்.

### கன்னி



எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

### துலாம்



பேச்சிலே ஒரு கம்பீரம் தெரியும். பூர்வீகச் சொத்துப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பொருள்கள் விற்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

### விருச்சிகம்



இரண்டு நாள்களாக இருந்த மனக்குழப்பம் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். நேர் மறை எண்ணங்கள் பிறக்கும். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தி யோகத்தில் சக ஊழியர்களுடன் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

### தனுசு



ராசிக்குள் சந்திரன் செல்வதால் அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். மூலம் நட்சத்திரக்காரர்கள் இன்று அவசரப்பட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத் துழைப்பு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மறதியால் பிரச் னைகள் வந்து விலகும். நாவடக்கம் தேவைப்படும் நாள்

### மகரம்



குடும்பத்தாருடன் மனம்விட்டுப் பேசுவது நல்லது. உறவி னர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சலிப்பு, சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும். தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள்.

### கும்பம்



திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். தந்தைவழி உறவினர்கள் பாராட்டுவார்கள். புண்ணியதலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் ஆலோசனையை ஏற்பார். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

### மீனம்



தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தைத் திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் கைகூடும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் காயாரோகணர் ஜெயசீலன்**

[முன்னாள் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் - உடற்கல்வி]

பிறப்பு: 09 01 1964 இறப்பு: 07 01 2008

திதி: சதுர்த்தசி (13.01.2010)

ஈராண்டுகள் சென்றதப்பா - நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஈராண்டுகள் சென்றாலும் அப்பா - உங்கள்
நினைவு எங்கள் உள்ளத்தைவிட்டு என்றுமே அகலாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

த.முகவரி: சங்கத்தானை, சாவகச்சேரி.
நி.முகவரி: செல்வாநகர், கிளிநொச்சி. அன்பு மனைவி, பிள்ளைகள்.

(இ/564106)

## மஹஜன சம்பத

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

**12.01.2010**

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2197

வெற்றி எழுத்து: **Z** வெற்றி எண்கள்: **3 9 6 9 8 0**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Z 3 9 6 9 8 0 | ரூபா. 12,764,470/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 3 9 6 9 8 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 9 6 9 8 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 17 |
| 3 பரிசுகள் | 6 9 8 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 154 |
| 4 பரிசுகள் | 9 8 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1455 |
| 5 பரிசுகள் | 8 0 | ரூபா. 100/= | பரிசுகள் 14812 |
| 6 பரிசுகள் | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 146528 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 3 9 6 9 8 | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | 3 9 6 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 148 |
| 9 பரிசுகள் | 3 9 6 | ரூபா. 100/= | பரிசுகள் 1496 |
| 10 பரிசுகள் | 3 9 | ரூபா. 50/= | பரிசுகள் 14689 |
| 11 பரிசுகள் | Z | ரூபா. 20/= | பரிசுகள் 58644 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **13,461,690.00**

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு **Rs. 14,092,557.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline:

உழவர் திருநாளை முன்னிட்டு "ஹேலீஸ் அக்ரோ" வழங்கும் விசேட சலுகை
யாழ். விவசாயிகளே!
ஹேலீஸ் அக்ரோ



ஹேஸ்ப்ரே தெளிகருவிகள், "அக்ரோ டெக்" இருசக்கர உழவு இயந்திரங்களின் முன்னோடிகள் "ஹேலீஸ் அக்ரோ" நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கான பழுது பார்த்தல், விற்பனைக்கு பிந்திய சேவை தை மாதம் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் வழங்குகின்றது.



இடம் : ஹேலீஸ் அக்ரோ காட்சியறை
'ராஜா பிளாஸா' இல. 74, பலாலி வீதி, கோண்டாவில்.
நேரம் : தினமும் காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை
தெளிகருவிகள், இருசக்கர உழவு இயந்திரம் தொடர்பான கையாள்கை செய்து காட்டல்களும் இடம்பெறும்.
அனைத்து 'Hayspray' Agrotech வாடிக்கையாளர்களையும் மேற்குறித்த திகதிகளில் வந்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஹேலீஸ் அக்ரோ காட்சியறை'
'ராஜா பிளாஸா'
இல. 74, பலாலி வீதி, கோண்டாவில்.

தொடர்பு :
K. புவனேந்திரா - 0777594992
S. சுரேஷ் 0777594962

## மரண அறிவித்தல்

### திருமதி கைலாசபிள்ளை கண்ணம்மா



புங்குடுதீவு, மாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை கண்ணம்மா நேற்று (13.01.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் (முன்னாள் வர்த்தகர் பழக்கடை இரத்தினம், யாழ்ப்பாணம் மார்க்கட்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மருதப்பு வள்ளியம்மையின் மருமகளும் புஸ்பமாலா, சிறிஸ்காந்தன் (சிறி கடை, புங்குடுதீவு, ரஞ்சிதமாலா, சிறிதரன் (பொலிவியா), ஜீவமாலா, சிறிவரதன் (சரண்ஜா கொமினிகேசன், வரதன் எலக்ரிக்கல் கொன்ரக், கஸ்தூரியார் வீதி), சிறிபாலன் (ஜேர்மனி) ஜெயமாலா ஆகியோரின் அன்புத் தாயும் இரத்தினவேல் (அத்தான்), வசந்தா, தர்மசேனன் (தறுமு), விஜயலலிதா, தங்கேஸ்வரன் (வயறிங்), கலாராணி, சீதாலக்ஸ்மி, அருளானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற கண்மணி மற்றும் சின்னம்மா, தம்பையா (கனடா), காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, பொன்னம்மா, கந்தையா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவதர்சினி - சுரேஸ்குமார் (சிறிலங்கா ரெலிக்கொம், யாழ்ப்பாணம்), பிரசாந்தி (யாழ்.சமூக செயற்பாட்டு மையம் JSAC), கீர்த்திகா (மக்கள் வங்கி, கன்னாதிட்டி), சிவகஜனி (FORUT முன்பள்ளி தொண்டர், புங்குடுதீவு), சாரங்கன், மயூதா, பிரதீசன், சுகிர்தா (வயம்ப பல்கலைக்கழகம்), சரண்ஜா, துளசிகா, அபிநந்தன், வனஜா (ஜேர்மனி), தனுசியன், தர்சிகா, பிரியங்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நேகாவின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாளை (15.01.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/24, முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 222 6882, 0777 570 103, 021 300 1636

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
கை.சிறிவரதன் (சரண்ஜா கொமினிக்கேசன்),
கை.சிறிஸ்காந்தன் (புங்குடுதீவு).

(அ/564107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் மூவினத்தவர்களும் இணைந்து மாகாண ஆட்சி; அதனை ஒழிக்க முஸ்லிம்கள் உடன்படமாட்டார்கள்

## யாழ்ப்பாணத்தில் மகிந்தவுக்கு சரித்திரம் காணாத வரவேற்பு

கொழும்பு, ஜன.14

கிழக்கு மாகாணம் வடக்கிலிருந்து பிரிக்கப்பட்டு, அதற்கான தனியான தேர்தலும் நடத்தப்பட்டு,



அங்கு மூவினத்தவர்களும் இணைந்த மாகாண ஆட்சி நிலவுகின்ற போது அதனை இல்லாதொழிக்கக் கிழக்கு வாழ் முஸ்லிம் கள் எந்த விதத் திலும் உடன்பட மாட்டார்கள். ஆனால் ரவூப் ஹக்கீம் முண்டு கொடுத்துள்ள ஜெனரலோ வடக்கையும் கிழக்கையும் மீள இணைப்பதற்கு உறுதியளித்தார். ரவூப் ஹக்கீமின் இரட்டை வேடம் தான் என்ன? ஹக்கீமினால் இனிமேலும் முஸ்லிம்களை ஏமாற்ற முடியாது என ஜனாதிபதியின் ஆலோசகர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், இரத்தினபுரி நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அஸ்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்மேளனத்தின் தலைவர் அல்ஹாஜ் ஏ.ஏ.எம். இஸ்மத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மின்சக்தி அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான, ஜனாதிபதியின் இஸ்லாமிய விவகார ஒருங்கிணைப்பாளர் மௌலவி நியாஸ் முஹம்மத் (கபூரி), சட்டதரணி அலி சப்ரி உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

இங்கு தொடர்ந்து பேசிய அஸ்வர்-

இந்த நாட்டில் இரண்டு ''சரத்''மார்கள் முஸ்லிம்களுக்கு இன்னல் விளைவித்துள்ளனர்.

''தமிழ்- முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் வந்தேறு குடிகளாவர். அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை.'' என்று பறைசாற்றினார் ஒரு சரத்.

காலாகாலமாகப் பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி மூலம் தொழுகைக்கு அழைக்கும் பாங்கை, ஒலிபெருக்கியில் சொல்ல முடியாத நிலையை ஏற்படுத்தியவர் மற்றொரு சரத்.

முந்தியவருக்கு ஜனாதிபதி பதவியும், பிந்தியவருக்குப் பிரதமர் பதவியும் தேவை. அதற்காகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மாஜி ஜெனரல் களமிறங்கியுள்ளார்.

இனத்துவேசிகளான இவர்களின் பேச்சுக்களுக்கு மசிந்து ஜெனரலை ஜனாதிபதியாக்குவதற்கு வாக்களிக்க இந்நாட்டு முஸ்லிம்கள் அவ்வளவு வங்குரோத்துப் பேர்வழிகள் அல்ல.

யாழ்ப்பாணத்தில் இருதினங்களுக்கு முன்பு நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றிய இரா. சம்பந்தன், தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இணைப்பும் ஒற்றுமையும் ஏற்படுவதற்கு வடக்கும்- கிழக்கும் இணைக்கப்பட வேண்டும். இணைந்த வடக்கு- கிழக்கினுள்ளேயே இரு இனங்களும் சுபீட்சமாக வாழலாம் என்ற கருத்தில் வடக்கு- கிழக்கு இணைப்பை வலியுத்தி உரையாற்றியுள்ளார்.

அப்படியாயின் சரத்பொன்சேகா வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கான உறுதிமொழியை சம்பந்தனுக்கு வழங்கியுள்ளார் என்பது புலனாகின்றதல்லவா.

இவ்விடயத்தில் சரத்பொன்சேகாவுக்கு முஸ்லிம்களின் வாக்குகளைத் திருப்பிவிட வரித்துக்கட்டிக்கொண்டு களமிறங்கியுள்ள ரவூப் ஹக்கீம் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார் என்பதை அறிய இந்நாட்டு முஸ்லிம்கள் ஆவலாக உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சரித்திரம் காணாத வரவேற்பு ஜனாதிபதிக்குக் கடந்த 10ஆம் திகதி கிடைத்தது. முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ ஆகியோருடனும் நான் யாழ்ப்பாணம் சென்று இதே துரையப்பா விளையாட்டரங்கில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளேன். ஆனால் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்காகக் கூடிய மக்கள் சமுத்திரத்தைப் போன்று நான் ஒரு போதும் இம்மைதானத்தில் கண்டதில்லை. யாழ். துரையப்பா விளையாட்டு மைதானமே நிரம்பி வழிந்து வீதிகளிலும் சனத்திரள் காணப்பட்டது. இளைஞர்கள், யுவதிகள்




ஜனாதிபதியின் கொடிகளைக் கையிலேந்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இதுவரை எந்தத் தலைவருக்கும் அளிக்கப்படாத மாபெரும் ஊர்வலம் யாழ்ப்பாண வீதிகளில் சுமார் ஒரு மை[ல்] நீளத்திற்கு இடம் பெற்றது. இந்நாட்டி[ன்] ஜனாதிபதி ஒருவர் யாழ்ப்பாணத்தி[ல்] முதன்முதலாக இனிய தமிழில் இனிக்[க] இனிக்கப் பேசி தமிழ் நெஞ்சங்களை[] மகிழச் செய்ததும் இந்த நிகழ்வில்தான்.

யாழ்ப்பாண நூலகத்துக்கு நமது ஜனாதிபதி சென்ற வேளை யாழ். கல்விச் சமூகம் ஜனாதிபதியை வரவேற்றது. அங்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக



உபவேந்தர் மற்றும் யாழ்ப்பாண மேய[ர்] உட்பட ஏராள மானோர் திரண்டிருந்தனர்.

இதேபோன்று நாட்டின் எல்லாப் பாகங்களிலும் மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு பெருகி விட்ட நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி இந்நாட்டில் மீண்டும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் சூழலை உருவாக்கிய மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவாவது நிச்சயமாகிவிட்டது எனவும் அஸ்வர் தெரிவித்தார். (50

# கொழும்பில் இருந்தபடி உத்தரவிடுபவர்களுக்கு உரியதல்ல யுத்த வெற்றி என்கிறார் பொன்சேகா

## போரிலே உயிரிழந்த, ஊனமுற்ற மக்களுக்கே அது உரியதாம்

கொழும்பு, ஜன. 14

30 வருட யுத்தத்தால் உடல் ஊனமுற்ற சுமார் 80 ஆயிரம் பேருக்கும் உயிர்களை இழந்த சுமார் ஒரு லட்சம் பேருக்குமே யுத்த வெற்றி சென்றடையவேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா கூறினார்.



மாறாக இந்த வெற்றி கொழும்பில் இருந்து கொண்டு உத்தரவிடுபவர்களுக்கோ அல்லது ஒருசில சகோதரர்களுக்கோ உரித்தாகாது என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வர்த்தகச் சம்மேளனப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடியபோதே பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தத்தின் வெற்றியும் அதன் வெகுமதியும் யுத்தத்தை முடித்துவைக்க உதவியவர்களுக்கே செல்லவேண்டும். தற்போதைய சூழலில் யுத்தத்தை வெற்றி கொண்டவர்களுக்கு அனைத்து நன்மையும் கிட்டவேண்டும்.

தனிப்பட்ட நபர்களுக்கோ அல்லது ஒருசில சகோதரர்களுக்கோ யுத்த வெற்றி உரித்தானதல்ல. அவர்களை நோக்கி யுத்த வெற்றியின் வெகுமதி செல்லக்கூடாது. அதை எம்மால் அனுமதிக்க முடியாது.

70 முதல் 80 ஆயிரம் பேர் 30 வருட யுத்தத்தால் காயமடைந்தனர். அதேபோல் சுமார் ஒரு லட்சம் வரையிலான மக்கள் வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டிலும் உயிர்களைத் தியாகம் செய்திருக்கின்றனர். அவர்கள் அனைவரிடமும் இந்த யுத்த வெற்றியின் உரிமை சென்றடையவேண்டும்.

கடைசியில் நாம் மிகவும் உறுதியாகச் செயற்பட்டதனால் 30 வருடங்களாக இந்தப் பேரழிவுகளை ஏற்படுத்திய யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தோம். பழைய நிலைமையை மாற்றியமைத்து நாட்டில் நிலையான சமாதானத்தை நாம் ஏற்படுத்தினோம்.

கொழும்பில் இருந்துகொண்டு யாரோ ஒருவர், ''யுத்தத்திற்குப் போங்கள். வெற்றி கொள்ளுங்கள்'' என்று கூறுவதன் மூலம் யுத்தத்தை வென்றுவிட முடியாது.

யுத்தத்தை வெற்றிகொண்டு எம்மால் ஏற்படுத்தப்பட்ட சமாதானம் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் நாம் விரும்பினோம்.

எனினும், அது நடக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யாத நிலைமையே இங்குள்ளது. இதை மாற்றியமைக்க வேண்டும் - என்றார். (சி)

# இராணுவமயமான கட்டமைப்பை தோல்வியுறச் செய்யவேண்டும்

கொழும்பு, ஜன. 14

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக இராணுவவாதிகள், வன்முறையாளர்கள், வலதுசாரிகள் மற்றும் தீவிர இனவாதிகள் ஆகியோர் ஒன்றிணைந்துள்ளார்கள் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளர் வாசுதேவ நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

எனவே, இராணுவமயமான வன்முறை கலந்த வலதுசாரி சக்திகளைக் கட்டாயமாகத் தோல்வியுறச் செய்யவேண்டுமென அவர் விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பொதுமக்களின் வெற்றியை உறுதிப்படுத்துவது இன்றியமையாதது. ஏகாதிபத்திய வாதிகளின் பிராந்திய தேவைகளுக்கு அடிபணியாத தலைவரான மகிந்த ராஜபக்ஷ, ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பெரும் தடையாவார். ஈராக்கிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க வழி மேற்கத்தைய ஏகாதிபத்தியவாதிகளின் பலாத்காரம் ஆப்கானிஸ்தான் வழியே பாகிஸ்தான் ஊடாகத் தனது பயணத்தைத் தொடர்கிறது. இலங்கையிலும் அவர்களின் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக முயற்சிக்கிறார்கள்.



எனவே மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை இரு கையேந்தி உயர்த்தி, ஏகாதி பத்தியவாதத் தலைமைக்கு மக்கள் சவால் விடுக்க வேண்டும் என்றும் வாசு தேவ நாணயக்கார தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(50)

# மலையக மக்களின் முழு ஆதரவும் ஜனாதிபதிக்கே!

## இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன. 14

ஜனாதிபதித் தேர்தலில் போது மலையக மக்களின் பரிபூரண ஆதரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே கிடைக்கும். அவர் அமோக வெற்றி பெற்று மீண்டும் இந்நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்கின்றமை உறுதி என இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் வீரையா சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களான மலையக மக்களின் மேம்பாட்டுக்கு பாரிய உதவிகள் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பதவிக்கு வந்தால் அவர்களது வாழ்வில் மென்மேலும் சுபீட்சம் நிலவும் எனவும், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சியினர் சுயநலத்தை நோக்காகக் கொண்டு எதிரணிக்குத் தாவியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையக மக்கள் திருப்தியாகவும், அமைதியாகவும் வாழ வழிவகுத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என்பதை மலையக மக்கள் நன்றாக அறிவார்கள்.

2001 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி மலையக மக்களுக்காக உருப்படியாக எதையுமே செய்யவில்லை என்பது நிதர்சனம்.

இப்போது நிறைவேற்றவே முடியாத தேர்தல் உறுதிமொழிகளை வாரிவழங்கி மலையக மக்களின் கவனத்தை எதிரணியின் மீது திசைதிருப்ப முயல்கின்றார்கள்.

மலையக மக்களுக்கு வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் தொழில்வாய்ப்புகளைக் குறுகிய காலத்தில் பெற்றுக்கொடுத்ததும் இன்றைய அரசே.

1977,1983,1987 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சி மலையக மக்களுக்கு இழைத்த அநீதியையும், பாரபட்சத்தையும் அவர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

இந்நாட்டிலிருந்து பிரிந்ததாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணத்தை மீட்டு நாட்டுடன் இணைத்தவர் ஜனாதிபதி ராஜபக்ஷவே. சிறுபான்மையினர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அவர் செய்த பங்களிப்புகள் மக்கள் மனதில் என்றும் பசுமையாகவே இருக்கும்.

எனவே, எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மகத்தான வெற்றியைப் பெறுகின்றமை நிதர்சனம்- என்றார் அவர்.

(வ- 04)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வானில் நெருப்பு வளையம்


தலைப்பைப் பார்த்தவுடன் நெருப்பு வளையமா என்று பயந்து விடாதீர்கள். யாழ்ப்பாண விண்வெளியில் நாளை வெள்ளிக்கிழமையன்று (15.01.2010) இல் கங்கண சூரியகிரகணம் தெரியப் போகின்றது. பூ... இதிலென்ன அதிசயம் என்று எண்ணிவிடாதீர்கள். பூரண சூரிய கிரகணமொன்றைக் நம் வாழ்வில் ஒரு முறை பார்ப்பதற்கே அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்.



படம்: 1


அவ்வாறான அதிர்ஷ்டமே எமக்கு 360 வருடங்களின் பின் கிடைக்கப் போகிறது.

சூரியகிரகணம் எனப்படுவது சந்திரனின் நிழல் பூமியில் விழுவதாகும். இதற்குச் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் ஒரே நேர்கோட்டில் வரவேண்டும். (படம் :1) அத்துடன், சூரிய கிரகணமானது சந்திரனும் சூரியனும் ஒரே நேர்கோட்டில் வரும் அமாவாசை நாள்களிலேயே நடைபெறலாம். அந்நேரம் சந்திரனானது பூமியையும் சூரியனையும் இணைக்கும் நேர்கோட்டிற்கு அண்மையில் சென்று சூரியனின் கதிர்களில் ஒரு பகுதியை அல்லது எல்லாவற்றையும் மறைக்கும். சந்திரனால் (படம்:2) உருவாக்கப்படும் நிழல் இரண்டு வகைப்படும். "கருநிழல்" எனப்படுவது சந்திரனுக்குப் பின்னால் சூரியனுக்கு எதிர்த் திசையில் கூம்பு வடிவில் செல்லும் நிழலாகும். இந்நிழல் விழும் பிரதேசங்களில் சூரியனில் இருந்து வரும் கதிர்கள்




படம்: 2

அனைத்தும் தடுக்கப்படுகின்றன. "அகநிழல்" எனப்படுவது சூரியனை நோக்கிய கூம்பு வடிவான நிழலாகும். இந்நிழல் விழும் பகுதிகளில் சூரிய ஒளி பகுதியாகவே மறைக்கப்படுகிறது. எனவே "கருநிழல்" விழும் பகுதியில் நிற்பவர்களுக்குப் பூரண சூரிய கிரகணமும், "அக நிழல்" விழும் பகுதிகளில் நிற்பவர்களுக்குப் பகுதியான சூரிய கிரகணமுமே தெரியும். இவற்றைவிட "கங்கண சூரிய கிரகணமும்" சில வேளைகளில் தோன்றும். கங்கண சூரிய கிரகணம் எனப்படுவது சூரியனின் மத்தியில் நிழல் விழுவதனால் தோன்றுகிறது. அப்போது சூரியன் ஓர் நெருப்பு




படம்: 3

வளையமாகத் தோன்றும். கங்கண சூரிய கிரகணமும் சூரியனுக்கும் பூமிக்குமிடையே சந்திரன் வரும் போதே ஏற்படுகிறது. ஆனால் தற்போது "கரு நிழல்" பூமியை அடையாது. அப்போது கூம்பின் உச்சிக்கு அப்பால் செல்லும் கருநிழல் பூமியில் வட்டமாக விழும் பகுதியிலிருப்போருக்குச் சந்திரனின் வட்டநிழல் சூரியனின் நடுவில் விழுவது தெரியும். சந்திரனின் நிழல் சற்றுச் சிறிதாக இருப்பதால் அதனைச் சுற்றி சூரியனின் பிரகாசமான வளையம் தெரியும். இந்நிலையையே கங்கண சூரிய கிரகணம் என அழைப்பர். இம்முறை கிரகணத்தின் மத்தியகோடு யாழ்ப்பாணக் குடாவில் கிட்டத்தட்ட வல்வெட்டித்துறையையும், யாழ். பல்கலைக்கழகத்தையும் இணைக்கும் கோடு வழியே செல்கிறது. (படம்:3) இல் தடித்த கோடு). இதனால் யாழ்ப்பாணத்தில் இருப்போருக்கு கங்கண சூரிய கிரகணம் 15.01.2010 அன்று மாலை 1.20 மணிமுதல் 1.30 மணிவரையில் 10 நிமிடங்கள் 09 செக்கன்கள் தெரியும். மேலும் கிழக்கே நிலாவெளியையும், மேற்கே சிலாபத்தையும் இணைக்கும் கோடுவரை உள்ளவர்களுக்குப் பகுதியான சூரிய கிரகணம் தெரியும். மாலைதீவில் இக்கங்கண சூரிய கிரகணம்11 நிமிடங்கள் 08 செக்கன்கள் வரை தோன்றும். இவ்வாறான நீண்ட நேரம் தோன்றும் கங்கண முழு சூரிய கிரகணம் இனிவரும் 1000 வருடங்களுக்குத் தோன்றாது. இவ்வாறான நீண்ட நேர சூரிய கிரகணம் இனிமேல் 23.12.3043 அன்றே தோன்றும்.

இறுதியாக இலங்கையில் தெரிந்த பூரண சூரிய கிரகணம் 20.06.1955 இல் ஏற்பட்டதாகும். அதன் பின்னர் 55 வருடங்களின் பின் தற்போதே எமது நாட்டவருக்கு அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. 1955 இல் ஏற்பட்ட சூரியகிரகணம் பொலநறுவை மாவட்டத்திலேயே முழுமையாகத் தெரிந்தது.
யாழ்ப்பாணத்திலுள்ளோருக்குப் பகுதியாகவே தெரிந்தது. ஆயினும் அன்றைய தினம் வானில் மேகக் கூட்டம் நிறைந்திருந்ததாலும், சூரிய கிரகணம் பற்றிய மூட நம்பிக்கை, பயத்தினாலும் மக்களால் அந்த அதிசய நிகழ்வை அனுபவிக்க முடியவில்லை. இம்முறை எமக்கு அதிர்ஷ்டம் இருந்தால் இவ் வானியல் அதிசயத்தைக் கண்டு களிக்கலாம்.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஊடறுத்துச் செல்லும் சூரிய கிரகணங்கள் 26.12.2019 அன்றும் 21.05.2031 அன்றும் நிகழும். அவையும் கங்கண சூரிய கிரகணமாகத் தெரிவதுடன் இலங்கையின் வடபகுதியிலிருப்பவர்களுக்கே தெரியும். அதன்பின் பூரண சூரிய கிரகணமொன்று 11.04.2070 அன்றும் கங்கண சூரிய கிரகரணம் ஒன்றும் 27.01.2074 அன்றும் நிகழும். இவையிரண்டும் எமது நாட்டின் தென்பகுதியிலுள்ளவர்களுக்கே தெரியும்.

மேலும் சந்திரன் பூமியைச் சுற்றும் பாதையின் தளமும், பூமி சூரியனைச் சுற்றும் பாதையின் தளமும் ஒன்றாகப் பொருந்தியிருந்தால் சூரிய கிரகணம் ஒவ்வொரு 29 ½ நாளுக்கு ஒரு முறையும் தோன்றியிருக்கும். ஆனால் அவற்றின் தளங்கள் ஒன்றுடன் ஒன்று $5^{0}$ கோணத்தில் சரிந்திருப்பதால் கிரகணங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. (படம்:4) சந்திரனின் சுற்றும் தளமும், பூமி சுற்றும் தளமும் ஒன்றையொன்று வெட்டும் இடங்களை கணுக்கள் என அழைப்பர். இக்கணுக்கள் சூரியனையும் பூமியையும் இணைக்கும் நேர்கோட்டிற்கு அண்மையில் வரும் போதே கிரகணங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அவ்வாறான சேர்மானம் வருடத்தில் இரண்டு தடவையே ஏற்பட வாய்ப்புகள் உண்டு. படம்:1) அப்படியான இரு சந்தர்ப்பங்களிலும் அமாவாசையும் சேர்ந்து வரவேண்டும். அப்பொழுதுதான் சூரிய கிரகணங்கள் ஏற்படும். இக் கணுக்களின் நிலைகளையே ராகு, கேது என எமது சாத்திரங்கள் கூறுகின்றன. இதனால் தான் கிரகணத்தை ராகு, கேது சூரியனை விழுங்குவதால் ஏற்படுகிறது என்ற நம்பிக்கை இருந்து வந்தது.

ஒரே இடத்தில் பூரண சூரிய கிரகணத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் 360 வருடங்களுக்கு ஒருமுறையே ஏற்படும். 100 வருட காலத்தில் 238 சூரிய கிரகணங்கள் ஏற்படுகின்றன. இவற்றில் 28 வீதம் பூரண சூரிய கிரகணங்களாகவும் 33 வீதம் கங்கண சூரிய கிரகணங்களாகவும், ஏனையவை பகுதியான சூரிய கிரகணங்களாகவும் இருக்கும்.


கிரகணம் நடைபெறக் கூடியதாக இருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது சந்திரனும், சூரியனும் எங்களுக்குக் கிட்டத்தட்ட ஒரே அளவினதாகத் தெரிவதாலேயே அவை ஒன்றை யொன்று மறைக்கக் கூடியதாகவுள்ளது. இரண்டும் எமது கண்களுக்கு கிட்டத்தட்ட $0.5^{0}$ கோணத்தையே ஆக்குகின்றன. உண்மையில் சந்திரன், சூரியனை விடச் சுமார் 400 மடங்கு சிறியதாக இருந்தாலும், அது கிட்டத்தட்ட 400 மடங்கு அண்மையில் இருப்பதாலேயே பூரண கிரகணங்கள் ஏற்படக் கூடியதாக உள்ளது.




**கலாநிதி .நாகலிங்கம் சிவயோகன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**பௌதிகவியல்துறை,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**


சந்திரன், சூரியனின் தோற்றம் அல்லது அவை ஏற்படுத்தும் கோணப் பருமன்கள் காலத்துக்குக் காலம் மாறுபடும். ஏனெனில் சந்திரன் பூமியைச் சுற்றும் பாதையும், பூமி சூரியனைச் சுற்றும் பாதையும் நீள் வளையங்களாகும். இதனால் பூமியிலிருந்தான அவற்றின் தூரங்கள் ஒரு வருடத்தில் காலத்துக்குக் காலம் மாறுபடும். எனவே சூரிய கிரகணம் ஏற்படும் நாள்களில் சந்திரன் எமக்கு அண்மையிலும் சூரியன் தொலைவிலும் இருந்தால் பூரண சூரிய கிரகணமும்; சந்திரன் தொலைவிலும் சூரியன் அண்மையிலும் இருந்தால் கங்கண சூரிய கிரகணமும் ஏற்படும். (படம்:5) இம்முறை சந்திரன் பூமியிலிருந்தான தனது அதிகூடிய தூரத்தினூடாக 17.01.2010 அன்று கடந்து செல்வதால் கங்கண சூரிய கிரகணம் 15.01.2010 அன்று தோன்றுகிறது.


சூரியனின் சார்பாக சந்திரன் அதன் பாதையில் கிழக்கு நோக்கி கிட்டத்தட்ட 3,400 கி.மீ /மணி என்ற வேகத்தில் அசைந்து கொண்டிருப்பதால் அதன் நிழலும் பூமியில் அதே வேகத்தில் அசையும். ஆனால் பூமியும் கிழக்கு நோக்கிச் சுற்றிக்கொண்டிருக்கிறது. பூமத்திய ரேகையில் பூமியின் மேற்பரப்பு கிட்டத்தட்ட 1,670 கி.மீ/மணி என்ற வேகத்தில் நகரும். எனவே சந்திரனின் நிழல் பூமியில் சுமார் 1,730 கி.மீ/மணி என்ற வேகத்தில் நகரும். பூமத்திய ரேகையை விட்டு விலகியுள்ள இடங்களில் பூமியின் மேற்பரப்பின் வேகம் குறைவாக இருப்பதால் அவ்விடங்களில் சந்திரனின் நிழலின் சார்பு வேகம் அதிகமாக இருக்கும். நிழலானது வேகமாக அசைவதால் பூரண சூரிய கிரகணம் ஏற்படும்.சூரியனின் ஈர்ப்பு சக்தி எவ்வாறு இருக்குமென உய்த்தறிய முடியும். எனவே அவ்வாறான ஈர்ப்பு சக்தியினூடாக வரும்போது




படம்: 4

ஒளிக்கதிர்கள் மிகவும் வளைக்கப்படும். சாதாரண நாளொன்றில் சூரியனின் பின்னாலுள்ள உடுக்களை பகலில் அவதானிக்க முடியாது. ஏனெனில் சூரிய ஒளி அவற்றை அவதானிக்க விடாது மறைக்கும். ஆனால் பூரண சூரிய கிரகணம் ஏற்படும் நாளொன்றில், அந்நேரம் சூரியனின் பின்னாலுள்ள உடுக்களிலிருந்து வரும் ஒளி சூரிய ஈர்ப்பு விசையால் வளைக்கப்பட்டு எமது கண்களை வந்தடையும். எனவே அவ்உடுக்களை ஆராய்வதற்கு பூரண சூரிய கிரகணம் ஏற்படும் நேரமே சிறந்ததாகும். இவ்வாறு பௌதிகவியல் சம்பந்தமாக முக்கியமானதொரு நிகழ்வான பூரண சூரிய கிரகணத்தை எதிர்பார்த்து ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் ஆவலுடன் காத்து இருப்பார்கள்.

யாழ்ப்பாண வானில் தெரியப்போகும் சூரிய கிரகணத்தை அவதானிக்க ஏராளமான விஞ்ஞானிகளும் உல்லாசப் பயணிகளும் வரக்கூடும். ஆனால் ஏ-9 வீதி திறக்கப்படாது என்ற நம்பிக்கையில் ஏராளமான விஞ்ஞானிகள் மாலைதீவுக்குச் சென்றுவிட்டனர். ஆயினும் இலங்கையிலுள்ள விஞ்ஞானிகளும், கொழும்பிலுள்ள ஆதர் சீ கிளாக் விண்வெளி ஆய்வு மையமும் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான விளையாட்டு மைதானத்தில் இருந்தபடி கிரகணத்தை அவதானித்து ஆய்வுகள் செய்யவுள்ளனர். அத்துடன் உலகிலுள்ள அனைவரும் இந்நிகழ்வைக் கண்டுகளிக்கும் வண்ணம் இணையத்தளம் ஒன்றும் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளது.



படம்: 5

எனவே இந்நிகழ்வை மாணவர்களும் பொதுமக்களும் கண்டு மகிழவேண்டும். சூரிய கிரகணத்தின் போது புற ஊதாக்கதிர்கள் பூமியை வந்தடைவதால் வெற்றுக் கண்ணால் பார்க்கக்கூடாது. உபயோகித்த X கதிர் படங்களிலுள்ள கறுப்பு பகுதியினூடாகப் பார்க்கலாம். அல்லது தட்டம் ஒன்றில் நீரை நிரப்பி அதில் விழும் சூரிய விம்பத்தை அவதானித்து கிரகண நிகழ்வைக் கண்டு களிக்கலாம். வெற்றுக் கண்ணால் அவதானித்தால் கண்கள் நிரந்தமாக குருடாகலாம்.

மேலும் இவ் அபூர்வ நிகழ்வை மாணவர்களும் பொதுமக்களும் கண்டுகளிக்கும் வண்ணமும், இந்நிகழ்வின் முக்கியத்தை உணரும் வண்ணமும் பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் சூரிய கிரகணம் ஆரம்பிக்கும் நேரமான காலை 9.35 மணி இலிருந்து முடியும் நேரமான பிற்பகல் 3.37 மணி வரை கல்விச் செயற்பாடுகளையும் அலுவலகச் செயற்பாடுகளையும் நிறுத்தி அல்லது குறைத்து அனைவரும் இக் கங்கணசூரிய கிரகணத்தைக் கண்டு மகிழ அதிபர்களும், அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொண்டு இக்கட்டுரையை முடிக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் புலமைப்பரிசில் திட்டத்தை தவறவிட்டவரா?

தைப்பொங்கல் தினத்தில்

NORTH LANKA IIT வழங்கும்



அதிரடிக் கட்டணச் சலுகை



தெரிவுசெய்யும் கற்கைநெறிக்கு ஏற்ப

ரூபா 1000 இலிருந்து......

ரூபா 25000 வரை

Diploma in MS Office
Diploma in DTP
Diploma in Hardware Engineering

Microsoft Certified Courses
MCP
MCSA
MCSE

O/L தகமையுடன் பட்டதாரியாகுங்கள்!
B.Sc. in Computer Science
B.Sc. in Multimedia - 1 Year



14/01/2010

பதிவு செய்பவர்களுக்கு மட்டும்

சங்கானை OR யாழ்ப்பாணத்தில் பதிவு செய்ய முடியும்

NORTH LANKA IIT
Main Street, Chankanai
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
0214920779 0213214305 0217390110




# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் பாலசிங்கம் தனரஞ்சன்

திதி: 14.01.2010

மலர்வு 03 . 10 . 1990

உதிர்வு 25 . 01 . 2009

ஆகிவிட்டது ஓராண்டு
ஆறவில்லை எம் துயரம்
எம் துன்பத்தில் கூட இருந்து
ஆறுதல் அளித்தீரே!
உம் பிரிவுத் துயரை
எவ்வாறு தாங்குவது?

இன்று (14.01.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி: வீரகத்தி பாலசிங்கம் (தந்தை),
இல.55, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

நிரந்தர முகவரி:
ஓட்டுவெளி, மிருசுவில்.

(93789)

### தென்மராட்சி விபத்துகளில் இருவர் காயம்

மோட்டார் சைக்கிளில் அமர்ந்து பயணித்த பெண் தவறி வீழ்ந்து தலையில் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்துவிலில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த தயாளினி (வயது 31) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்தசனிக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ந.பாலசிங்கம் (வயது 50) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (1-207)


வசீகரத் தோற்றத்திற்கு!

சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கமப்பாலை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை.

சந்தனாலேப

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


# ஆறாவது ஆண்டு நினைவலைகள்



மலர்வு 11 . 12 . 1974

உதிர்வு 15 . 01 . 2004

## அமரர் பேரானந்தம் உமாசுதன்

(போட்டோ சுதன்)

புன்னகை பூத்த வதனம் பூப்போல விரிந்த உள்ளம்
பட்டாம் பூச்சியாய் பறந்து திரிந்தவன்- நீ
ஆறு அகவைகள் பிரிந்ததேவோ! கண்ணயர முடியவில்லை
கண்முன்னே நிற்கின்றாய் ஆறவில்லை எம் துயரம்- ஐயா
ஆறாத் துயரில் மூழ்கி எம் விழி நீர்ப்பூ தருகின்றோம்
விண்ணில் நீ இளைப்பாற.....!

என்றும் உன் பிரிவால் துயருறும்:

குடும்பத்தினர்.

காரைனர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(93243)


பொங்கலை முன்னிட்டு

அதிவிசேட சலுகை

OFFER OFFER

19,900 ரூபாவிற்கு கொள்வனவு செய்யும் எமது வாடிக்கையாளருக்கு C.D.M.A தொலைபேசி ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

இச்சலுகை 15.02.2010 வரை மட்டுமே !



இறக்குமதி செய்யப்பட்ட திருமணப் பட்டுப்புடைவைகள், பட்டுவேட்டி சால்வைகள், புதிய சாறி வகைகள், சல்வார், ரவுசர், ஸ்கேட் பிளவுஸ் மற்றும் சிறுவர்களுக்கான குட்வகைகளை அதிரடி விலைக் கழிவில் பெற்றிட

மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஜார்

இல. 10, 11, பெரிய கடை, யாழ்ப்பாணம். தொ. பே : 021 222 9399


# நீங்காத நினைவில் பத்தாம் ஆண்டு அஞ்சலி



மலர்வு 01 . 09 . 1974

உதிர்வு 14 . 01 . 2000

## அமரர் முதலி பகீரதன்

(பருத்தித்துறை நகராட்சி மன்றம்)

பத்து ஆண்டுகள் பறந்து சென்றாலும்- உன்
பாச நினைவுகள் என்றும் பசுமையென நிலைத்திருக்கும்.

குடும்பத்தினர்.

புலோலி மத்தி,
பருத்தித்துறை.

(93737)


விவசாயப் பெருமக்களுக்கு எமது பொங்கல் தின நல்வாழ்த்துக்கள்

யாழ் குடாநாட்டில் ஆஸ்கார் இன்டர்நெஷனல் பிறைவெட் லிமிட்டட் ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட

யாழ் மாஸ்டர் RV 80



★ யப்பான் தொழில்நுட்ப எஞ்சின்
★ சிறந்த எரிபொருள் பாவனை
★ மிக இலாபகரமான விலை
★ நீண்ட ஆயுள்

ஆஸ்கார் இன்டர்நெஷனல் பிறைவெட் லிமிட்டட்

கணேஷன் கட்டிடம், கே. கே. எஸ் வீதி இணுவில்.
(இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக)
தொலைபேசி: 0717257783 / 0722253513


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவை ஆதரிக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் முடிவின் பின்னால்...



நீண்ட பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்கட்சிகளின் பொதுவேட் பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கத் தயாராகிவிட்டது.

இத்தேர்தல் மூலம் தமிழர் தரப்புக்கள் சாதிக்கப்போவது என்ன? சரத் பொன்சேகா விடமிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் என்ன உத்தரவாதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன? அவை தொடர்பான உறுதிப்பாடுகள் எவை?- என்பன பற்றி இப்பத்தி ஆராய்கிறது.

தற்போது தமிழ் மக்களுடைய உடனடிப் பிரச்சினைகளை முன்வைத்து இரண்டு பிரதான வேட்பாளர்களுடனும் தொடர்ச்சியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

மஹிந்தவுடன் எக்காலத்திலும் உடன்படக்கூடிய சாத்தியங்கள் இல்லையென்பதைத் தெரிந்துகொண்ட நிலையிலும் ஆளும்கட்சியினுடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன என்பது பற்றி அவர்களுடனும் ஆராய்ந்து இறுதியாகவே சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கமுடியுமெனத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இவ்வாறான நிலைப்பாடு தொடர்பாக எம்மவர் சிலரிடம் மாற்றுக்கருத்துக்கள் உண்டு. சிறிலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதியை ஆதரிப்பதில் சில கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன.

இந்திய இராணுவத்தினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த போது இந்திய இராணுவத்தினரை அகற்றுவதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை எடுத்த முடிவை இங்கு ஞாபகப்படுத்தி கொள்வது நல்லது. அப்போதைய சிறிலங்கா ஆட்சி பீடத்தோடு இணைந்து முதல் எதிரியாகவிருந்த இந்தியப் படைகளை அகற்றுவதில் புலிகள் தமது இராஜதந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தனர்.

ஒரு நாகபாம்பை அகற்றி இன்னொரு பற்கள் பிடுங்கப்பட்ட நாகபாம்பை ஆட்சியில் இருத்தப்போகின்றோம். ஏனென்றால் சரத் பொன்சேகாவுக்கு அவருக்கென்று ஒரு கட்சி இல்லை. பலவீனமான ஓர் ஆட்சிப் பீடத்தையே அவரால் அமைக்கமுடியும். சிறிலங்காவின் ஆட்சிப்பீடம் பலவீனமாக இருக்கும்போதே தமிழர் தரப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். இப்போது தமிழர் தரப்பின் ஆதரவைத் தேடி ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் படையெடுப்பதும் இதன் ஓர் ஆரம்பமே.

இப்போது சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஈழத்தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு என்ன உத்தரவாதங்கள் பெறப்பட்டுள்ளன? எதிர்வரவுள்ள தேர்தல் தமிழர் தரப்பால் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா? - என்ற வினாக்கள் எழுவது வழமையானதே.

சரத் பொன்சேகாவுடனும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் நடத்திய பேச்சுகளில் உடன்பாடு காணப்பட்ட முக்கிய விடயங்களில், தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிகளின் உறுப்பினர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கல், உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல் மற்றும் அவசரகாலச் சட்டத்தை நீக்குதல் என்பன முக்கியமானவையாகும்.

தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதைத் தமிழர் தரப்பு உறுதிப்படுத்தியிருக் கிறது.

தற்போதைய மஹிந்த அரசில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரைக் கூட இன்னமும் விடுவிக்க முடியாமல் இருப்பதைப் பார்க்கிறோம்.



இவ்வாறான அரசை ஆட்சியில் தொடர்ந்து அமரவிட்டு தமிழ் அரசியற் கைதிகளையோ, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்க ளையோ அல்லது அதன் ஆதரவாளர்க ளையோ சிறையிலிருந்து வெளியில் கொண்டுவருவது என்பது சாத்தியமில்லை. அத்தோடு அவர்களின் உயிருக்கு உத்தரவாதத்தைக் கூடப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையே இருந்துவருகின்றது.

அத்தோடு தடுத்துவைக்கப்பட்டுள்ள முழுமையான விடுதலைப்புலிகளின் விபரங்கள் வெளியிடப்படவில்லை. யார், யார் சிறையில் இருக்கின்றார்கள் என்பது அரசால் உத்தியோகபூர்வமாகச் சொல்லப்படவில்லை. இதனால் அவர்களின் உயிருக்கு எந்தவேளையிலும் ஆபத்து இருப்பதை புரிந்துகொள்ளமுடியும்.

அரசிற்குச் சார்பாக கருத்துச் சொல்லுவார்கள் என அரசும் நம்பிக்கை கொள்ளும் முன்னாள் போராளிகளை மட்டுமே அரசு வெளியில் விட விரும்புகிறது. அப்படியானால் மற்றையவர்களின் நிலை என்ன?

எனவே தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள், போராளிகளின் விடயத்தில் முன்னேற்றகரமாக தமிழர் தரப்பால் செய்ய முடியுமாகவிருந்தால் அதனை நிச்சயம் செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைத்துமட்டங்களிலும் இருந்து வந்தது. அதனைச் சரியாகத் தமிழர் தரப்பின் பிரதிநிதிகள் பயன்படுத்தியிருக்கின்றமை ஆறுதலான விடயமே.

அடுத்ததாக உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிய விடயங்கள் மிகவும் முக்கியமானவையாகும். சிறிலங்கா அரசால் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயங்கள் பேணப்படுகின்றன. அதற்கான திட்டங்களே தற்போதைய அரசிடம் உண்டு. யாழ்ப்பாணத்தில் மூன்றில் ஒரு பகுதி பிரதேசங்கள் உயர் பாதுகாப்புவலயங்களாகவே இருந்துவருகின்றன. இங்கு 30 ஆயிரத்து 338 குடும்பங்கள் இருபது வருடங்களாக தமது வாழ்விடங்களுக்கு திரும்பமுடியாமல் இருந்துவருகின்றன.

அதேபோல் திருகோணமலையிலும் சம்பூரை உயர் பாதுகாப்புவலயமாக்கி 4,249 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. இங்கிருக்கின்ற 19 பாடசாலைகளும் தொடர்ந்தும் மூடப்பட்டேயிருக்கின்றன. இதுதவிர மணலாறு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் போன்ற பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்ட மக்கள் இருபத்தைந்து வருடங்களாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாமல் இருக்கிறார்கள்.

எனவேதான் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான உறுதியான பதிலைத் தமிழர் தரப்பு எதிர் பார்த்திருக்கவேண்டும். சாதகமாகப் பதிலளித்த சரத் பொன்சேகா உயர் பாதுகாப்பு வலயங்களை விரைவிலேயே நீக்குவதற்கான ஒழுங்குகளை செய்வதற்கு ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிகிறது.

அடுத்ததாக தற்போது இலங்கைத் தீவை ஆட்டிப் படைத்து வரும் அவசரகாலச் சட்டம் பற்றிய விடயமாகும். தற்போது கைது செய்யப்படும் தமிழர்களை நீண்ட காலமாகவே தடுத்துவைப்பதற்கு அரசுக்கு வசதிசெய்யும் சட்டமூலமே இதுவாகும். தற்போதைய நிலையில் இதனை நீக்குவதற்கு வழிசெய்வதன் மூலமே தமிழர்களது குரலை வெளியுலகிற்குக் கொண்டுவரமுடியும்.



அவசரகாலச் சட்டம் நீக்கப்படுவதை உறுதிப்படுத்தி அதற்கான எழுத்து மூல ஆவணங்களும் சரத் பொன்சேகாவிடமிருந்து பெறப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பெறப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் தமிழர்களது அன்றாட, அவசர தேவைகளை ஒட்டியவையே தவிர தமிழர்களது அடிப்படை அரசியல் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான எந்தவித முன்னேற்றங்களும் இப்பேச்சுகளின்போது ஏற்படவில்லை என்பதையும், அனைவரும் கவனித்துக்கொள்ளவேண்டும்.

ஒரு சாதாரண பொதுமகனுக்கு இருக்கவேண்டிய அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்கான பேச்சுகளே நடைபெற்றன என்பதையும், தமிழர்களது தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியிருக்கும் என்பதையும் எவரும் மறந்துவிடக்கூடாது.

தமிழர்கள் தமது உரிமைகளைப் பற்றி விவாதிப்பதற்கான களநிலைமையை ஏற்படுத்துவதே இன்றைய தேவையாகும். அதனை ஏற்படுத்தி, தாயகத்திலுள்ள மக்களே தமது உரிமைகள் என்னவென்பதையும் அதற்கான களத்தையும் திறக்கவேண்டும். அவர்களுக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தன்னாலான பங்களிப்பை வழங்கமுடியும்.

எனவே தாயகத்தில் எமது மக்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களைச் சொல்லக்கூடிய சூழ்நிலையை முதலில் ஏற்படுத்துவோம். அவ்வாறான சுதந்திரமான சூழல் வரும்வரை அதற்கான வழிகளை திறப்பதே எம்முன்னுள்ள ஒரேதெரிவாகும்.

நன்றி-'நெருடல்'

# தமிழர் நிலைமையை சீர்படுத்த நெதர்லாந்து அரசு பெரும் ஆர்வம்

கொழும்பு, ஜன.14

இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் இன்றைய நிலைமைகளை சீர்படுத்துவதற்கென டென்ஹாக் நகரில் உள்ள வெளிநாட்டு வெளிவிவகார அலுவலகத்தில் இலங்கைக்கான பிரதான கொள்கை வகுப்பாளர் அன்டிறியா நீடிர்லொப்புடன் நெதர்லாந்து வாழ் தமிழ்மக்கள் சார்பான சந்திப்பொன்று கடந்த திங்கள் அன்று இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சந்திப்பில் இந்திரன் சின்னையா, தேவதாசன் சவரிமுத்து, குமாரசாமி செல்வகுமார், கந்தசாமி சிவகுமார், கனிஸ்டா வாட்சன் கிரஹரி ஆகியோர் கலந்து கொண்டனர்

இச்சந்திப்பின்போது இருதரப்புக் கருத்துகளும் ஆராயப்பட்டுள்ளன. இதில் தமிழர் சார்பாக வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

'சுதந்திரமான போர்க்குற்ற நீதி விசாரணை நடத்தப்படவேண்டும்', 'உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்கு அனுப்பப்படவேண்டும்', 'அவர்களுடைய அழிந்த சொத்துக்களுக்கு பூரண நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்', 'புலிகளெனச் சந்தேகத்தில் அடைக்கப்பட்டவர்களை ஐக்கியநாடுகள் சபையின் ஊடாகப் பதிவு செய்ய வேண்டும்'.

இதன்போது நெதர்லாந்து அரசின் பிரதான கொள்கைவகுப்பாளர் கூறியவை வருமாறு:-

'சுதந்திரமான போர்க்குற்ற நீதி விசாரணை செய்தல்', 'உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்கு செல்லுதல்', 'அவர்களுடைய அழிந்த வீடுகளுக்கு பூரண நஷ்டஈடு வழங்க நிதி உதவி செய்தல்', 'புலிகளெனச் சந்தேகத்தில் அடைக்கப்பட்டவர்களை ஐக்கியநாடுகள் சபையின் ஊடாகப் பதிவு செய்தல்', கல்விமுறையில் தரப்படுத்தல் நீக்கப்படுதல்' போன்ற விடயங்கள் குறித்து இலங்கை அரசிடம் உரிய கோரிக்கைகள் முன்வைக்கப்படும்.

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் ஜனாதிபதியிடம் இது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அவர் அதற்கு உடன்படாவிட்டால் இலங்கைக்குக்கிடைத்துவரும் வரிச்சலுகைகள், அபிவிருத்திக்கான உதவிகள் நிறுத்தப்படும் எனவும் அத்துடன் ஐக்கியநாடுகள் சபை எடுக்கும் போர்க்குற்ற விசாரணைக்கு நெதர்லாந்து அரசு முழு ஆதரவையும் வழங்கும் - என்றார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தேசத்தில் சமத்துவமாய் வாழ..
# ஜனநாயகம் நிலைக்க..
# எதிர்காலம் செழிக்க..



யாழ்மக்கள் பட்டதுன்பம் பறக்கலாச்சு
தொட்டதெல்லாம் துலங்கும் காலம் தொடங்கலாச்சு!

வன்னிமக்கள் வாழ்வினிலே இருந்த இன்னல்
வளம்மிக்க செயற்பாட்டால் மறையலாச்சு!

எழுகதிரோன் திசையென்னும் கிழக்கு மண்ணில்
ஏற்றமிகு வாழ்வை மக்கள் ஏற்கலாச்சு!

மலையகத்துப் பசுமைமிகு மண்மீதெங்கும்
மலர்ந்துள்ள புது வாழ்வு தொடரலாச்சு!

தமிழ் பேசும் மக்கள் கூடத் தலைநகரில்
தலை நிமிர்ந்து வாழுந் தன்மை தன்னைப் பெற்றார்!

எங்கள் தெரிவு

X

மஹிந்த ராஜபக்ஷ

தமிழர்தம் வாழ்வில்
வீசட்டும் வசந்தம்


## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்
# 4 ஆயிரத்து 288 வாகனங்களுக்கு வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை

நவாலி,ஜன.14

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த வருடம் 4 ஆயிரத்து 288 வாகனங்களுக்கு வரிஅனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை.

ஆயிரம் பேர் வரை இதுவரை இவ் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. இப் பிரதேசத்தில் 6 ஆயிரத்து 200 வாகனங்கள் உள்ளன. இவற்றில் 7 வாகனங்கள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளன.

மேலும் இவ் வருடத்திற்கான அனுமதிப்பத்திரங்கள் ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-100)

## நகரில் வடிகால்கள் துப்புரவு செய்யும் பணி

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.மாநகராட்சி மன்றப் பகுதிக்கு உட்பட்ட கழிவுநீர் வாய்க்கால் மற்றும் வீதியோரங்களில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக யாழ். நகர்ப் பகுதி மற்றும் நல்லூர் போன்ற இடங்களில் உள்ள கழிவுநீர் வாய்க்கால்கள் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

கால்வாய்களில் நிரம்பிக் காணப்படும் சேறு மற்றும் கழிவுகள் அகற்றும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. (1-224)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகரசபை மற்றும் நல்லூர் பகுதிக்குள் உடனடியாக வீடு வாடகைக்குத் தேவை.

தொ.பே.இல.: 077 5927503 (93855)

## ஒத்துமாறல்

வவுனியா, செட்டிகுளம் பாடசாலையில் ஆரம்பக்கல்விப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியை யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

0772831746 (93854)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி, கண்டி வீதி, கைதடி (சித்தமருத்துவ பீடம்/ நவீல்ட் பாடசாலை/முதியோர் இல்லம் முன்பாக) "சிங்க மலைத் தோட்டம்" காணியில் 01 றூட் 01.3 பேர்ச் (04 பரப்பு 01.12 குளி) காணித் துண்டு விற்பனைக்குண்டு.

குறிப்பு: கைதடி வீடமைப்புத் திட்டத்தின் சூழல்.

தொடர்பு: 021 226 4295 (மாலை 7-8) (91025)

## 76ஆவது அகவையைக் கொண்டாடும் முதலியாரை வாழ்த்துகின்றோம்



தங்க விருது நாயகன் உயர்திரு
சி.பொ.வ.மா.க.முதலியார் (J.P)
வடக்கு - கிழக்கு மாகாணத்தில்
கடந்த 50 வருட காலமாக
விவசாய வளர்ச்சி -
அபிவிருத்திக்கு முன்னின்று
உழைத்தமைக்காக "தங்கவிருது"
(Golden Award) பெற்றவர்.
யாழ்.மாவட்ட
தேச வள விவசாயிகள்
சம்மேளனத் தலைவர்

உயர்திரு சி.பொ.வ.மா.க.முதலியார் (J.P)

இவர் ப.நோ.கூ.ச.தலைவராகவும், வலி.தென் மேற்கு பிரதேசசபைத் தலைவராகவும், மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சம்மேளனத் தலைவராகவும், சண்டிலிப்பாய் மத்தியஸ்தசபை உறுப்பினராகவும், சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய (APC) உறுப்பினராகவும் அளப்பரிய மிக்குயர் சேவையாற்றி 76 வயதில் (14.01.1934) காலடி எடுத்துவைக்கும் சீரிய பணியாளன். மேலும் பல பணிகள் புரிந்து மக்கள் சேவையே மகேசன் சேவை எனப் பணிபுரியவும் பல்லாண்டுகாலம் வாழவும் மனதார வாழ்த்துகின்றோம்.

நிர்வாகிகள்
யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனம்,
திருநெல்வேலி.

## யாழ் மாநகரினிலே
மிகக்குறைந்த கட்டணங்களில்
## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
## வழங்கும் சர்வதேசக் கற்கை நெறிகள்

BCHS

### FOUNDATION DIPLOMA IN HOSPITALITY MANAGEMENT
Hotel Management

TOP UP DEGREE IN UK/LONDON

இவ் 6 மாதக்கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருட (Degree) பட்டப்படிப்பினை லண்டனில் (London / UK) 100% விசா உத்தரவாதத்துடன் கற்கை நெறியினைத் தொடர முடியும்.

கல்வீத்தகைமை : G.C.E(O/L) பெறுபேறு போதுமானது.

### Foundation Diploma In Nursing
(Social & Health care)
Top up Degree in UK/London
அதிக வருவாய்
Duration: 6 Months
உடனடி வேலைவாய்ப்பு
கல்வித்தகைமை : G.C.E(O/L) பெறுபேறு போதுமானது.

### Foundation Diploma In Business Management
காலம்: 3 மாதங்கள்

For BBA Degree Programme)

Minimum Requirement: G.C.E(O/L)

இப்பாடநெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்தி செய்து BBA பட்டதாரி ஆகலாம் தனிப்பட்ட நிறுவனங்களில் பணி புரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

### DIPLOMA IN ENGLISH
### ADVANCED DIPLOMA IN ENGLISH

ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட(special) முறையில் வகுப்புகள்ஒழுங்குபடுத்தி தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக்கழிவும் உண்டு.

100% பயிற்சி — காலம் 6 மாதங்கள் — 100% வெற்றி

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர் கல்வியைத் தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Batch 1 - 16.01.2010
Batch 2 - 18.01.2010
Batch 3 - 20.01.2010

மாணவர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த எமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும்.

BCHS
Second Floor,No.15,Sirampiyady Lane,
Off Stanley Road.
(ஆரியகுளச் சந்திக்கு அருகாமையில்)
(கோசி Hotel பிறகே)

Tel:0212224550 E-mail: info@bch...
Hot Lines : 0777222422 ,0714299935.

## Ruba Home Economics Centre

அனைவருக்கும் எமது
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
சுயதொழில் வாய்ப்பினை
எதிர்பார்த்திருக்கும் மாணவிகளுக்கு!

1. தலை அலங்காரம்
2. மணப்பெண் அலங்காரம்
3. முக ஒப்பனை
4. கேக் ஐசிங்
5. சாறி வேலைகளும், வர்ண வேலைகளும்
6. தையல் வகுப்புகள் (பஞ்சாபி, பிளவுஸ்)

போன்ற வகுப்புகள் எதிர்வரும் 23.01.2010 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. இவ்வகுப்புக்கான அனுமதிகளை 18.01.2010இற்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
021 222 7152

திருமதி ரூபா சத்தியமூர்த்தி
இராமலிங்கம் வீதி,
முடமாவடி.
(93731)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மையான எண்ணத்துடன் தூய்மையான உலகம்!!

சூரிய பகவானை வணங்கும் தைப்பொங்கல் திருநாளில் எங்களது சுற்றுச்சூழல், ஆடை அணிகள் போலவே தூய்மையான எண்ணங்களுடன் தூய்மையானதோர் உலகம் அமைக்க உறுதி கொள்வோம்.






தூய்மையான எண்ணத்தை உங்களுக்குத்தருவதுடன் ஆடைகளின் தூய்மையையும் பேணி இலங்கை இல்லதரசிகளின் மனம் கவர் தெரிவானது.

இலங்கை இல்லதரசிகளின் மனம் கவர் முதல் தெரிவு தீவா டிடெஜண்ட் பவுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் க.மோகனதாஸ் அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழா

## அன்பும், இரக்கமும் கொண்டவர்

எமது கல்லூரியின் பிரதி அதிபராக அயராது சேவை யாற்றி 14.01.2010 இல் ஓய்வு பெறும் திரு.க. மோகனதாஸ் அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் பெருமகிழ் வடைகின்றேன். 1972 இல் ஆரம்பித்த கணிதப் பயணம் எத்தனை மாணவச் செல்வங்களை கலங்கரை விளக்காக வழிகாட்டி ஒளி ஏற்றி இருக்கிறது. மலர்ந்த முகம், அன்பும், கனிவும் நிறைந்த பேச்சு, இரக்கம் நிறைந்த மனம் , மாணவர் களையும் சரி ஆசிரியர்களையும் சரி தட்டிக் கொடுத்து செய லாற்றச் செய்யும் பண்பு, எதனையும் சிந்தித்து யாரையும் பாதிக்காமல் கடமைகளும் தடைப்படாமல் செயற்படும் திறமை. இப்படி இன்னும் எத்தனையோ சொல்லலாம். கொஞ்சம் கடினமான காரியம் என்றால் யோசிப்போம், பார்ப் போம் என்பார். ஆனால் காரியம் கச்சிதமாக நிறைவேறி விடும். தென்பகுதி வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் சிறப் பாக நடைபெறுவதற்கு தன்னால் இயன்ற அனைத்தை யும் செய்து அதிபருக்கு நிர்வாகம் சிறப்புடன் இயங்க கை கொடுத்து வந்தவர். தன்னலமற்றவராய் சேவையாற்றி ஓய்வினை நாடிச்செல்லும் எம் பிரதிஅதிபர் தம் ஓய்வுக் காலத்திலும் சிறப்போடு வாழ இறைவனைப் பிரார்த்திக் கிறேன்.

அதிபர்.

## மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்

எமது கல்லூரியின் மாணவனாக இருந்து பின் ஆசிரி யராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக சேவையாற்றி இன்று ஓய்வு பெறும் திரு. கந்தையா மோகனதாஸ் அவர்கள் மாணவர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுக் கொண் டவர். கணித ஆசானாகக் கடமையாற்றிய இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பலர் பொறியியலாளராகவும், கணித மேதைகளாகவும், தொழில் நுட்பவல்லுனர்களாகவும் மேலும் உயர் பதவிகளில் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். ''சாயி'' பத்தனான இவர் கல்லூரி மட்டத்தில் சக ஆசிரியர் களுடன் அன்பாகப்பழகி அவர்களின் ஆழமான நட்பினைப் பெற்றுக்கொண்டார். இவரின் கடமை உணர்வுடனான சேவைத்தன்மை கல்லூரி வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது. எமது கல்லூரிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் வந்து போகின்றார்கள். இருந்தும் ஒரு சிலரே மாணவர்கள் மத்தியிலும்,சமூகத்தின் மத்தியிலும் தங்கள் முத்திரையை பதித்துச் சென்றுள்ளார்கள். இவர் அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் இவராற்றும் கல்விச்சேவை கல்லூரிக்கு என்றும் கிடைக்கும் என்பதில் ஐமில்லை. திரு . மோகன தாஸ் ஆசிரியர் அவர்களின் ஓய்வுக்காலம் சகல பேறு களையும் பெற்று அவரது குடும்பத்தினருடன் நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.செல்வநாதன் J.P, (நகுலன்)
கல்லூரி அபிவிருத்திச் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.



## திரு.கந்தையா மோகனதாஸ்

(இ.ஆ.சே-வகுப்பு-1), பிரதி அதிபர்

★ ஆரம்பக்கல்வி:
யா/ சைவ மகாஜன வித்தியாசாலை, இணுவில் (தரம் 3 வரை),
(யா/ மத்திய கல்லூரி, இணுவில்)

★ ஆரம்ப, இடைநிலைக்கல்வி:
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
(தரம் 4 - க.பொ.த (உ/த) ,கொக்குவில்).

★ கணித பாட விசேட பயிற்சி:
(பலாலி ஆசிரிய கலாசாலை 1975/76)

★ கணிதத்தில் தேசிய டிப்ளோமா:
(இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு 1984)

★ வித்யா கீர்த்தி ஸ்ரீ சம்மான:
(நல்லாசிரியர் விருது, கல்வி அமைச்சு 2005)

★ ஆசிரிய சேவை விபரம்:
1. யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி 1972-1973
2. யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை , நீர்வேலி 1974
3. யா/ பலாலி ஆசிரிய கலாசாலை, வசாவிளான் 1975-1976
4. மா/ இந்து மகா வித்தியாலயம், மாத்தளை 1977-1978
5. மா/ த்மிழ் வித்தியாலயம், கவுடுப்பலல்ல 1979 -1984
6. யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் 1985-2010

## கணிதத்தில் துறைபோனவர்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நீண்டகாலமாக கணிதபாடம் கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் என்ற பெயரோடும், பெருமையோடும் இன்று மணிவிழாக் காணும் திரு.கந்தையா மோகனதாஸ் அவர்களைப் பாராட்டு வதில் நானும் மகிழ்வடைகின்றேன். இவரிடம் காணப்பட்ட திறமை என்னவெனில் மீத்திறனுடைய மாணவர்களை கணித பாடத்தில் உயர் பெறுபேறுகளைப் பெறச்செய்வதற்கும், மெல்லக்கற்கும் மாணவர்களை அவர்களின் ஆற்றலுக்கு அமைவான சித்திகளைப் பெறச்செய்வதற்கு மானமுறையில் கற்பித்தல் மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்டுள்ள மையாகும். இதனூடாக இவர் எல்லா மாணவர்கள் மத்தியிலும், பெற் றோர் மத்தியிலும் நன்மதிப்பையும் நற்பெயரையும் பெற்றிருந்தார். மிகவும் அமைதியாகவும் சாந்தமாகவும் நடந்து கொள்ளும் இவர் ஆன் மீகத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவர். இவரிடம் காணப்படும் சிறந்த ஆளுமை , மாணவர்களை நல்வழிப்படுத்தும் வகையிலான ஆலோசனை வழங்கும் ஆற்றல், சேவை மூப்பு, கணிதபாடத்தில் கொண்டிருந்த அறிவாற்றல் போற்றுதற்குரியது. இவரின் ஓய்வுகாலம் சிறக்க இறைவன் இவருக்கு நல்லருள் பாலிக்கவேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

பொ.கமலநாதன், இளைப்பாறிய அதிபர்.

## தன்னலமற்ற வெள்ளையுள்ளத்தவர்

கொக்குவில் இந்துவின் தவப்புதல்வர்களில் பெருமை மிக்கவரும் திறமை மிக்கவருமான திரு.கந்தையா மோகனதாஸ் அவர்கள் ஒரு கணிதக் கொள்கலன். கணித பாடத்தை வேப்பம் காயாய் மதிக்கும் மாணவர்களுக்கு கணிதம் எளிமையானது, இலகுவானது, இனிப்பானது என்பதைக் கற்பித்தல் முறைகளால் எடுத்துக்காட்டி பல மாணவர்களின் உள்ளங் களில் ஒளிவிளக்காகச் சுடர்விடுகின்றார். தனது வாழ்நாளில் பெரும் பகுதியை மாணவர்களுக்காகச் செலவிட்டது மட்டுமல்லாது தனது மிகுதி நேரத்தையும் ஆன்மீகச் சிந்தனையில் ஈடுபடுத்தி வாழ்வாங்கு வாழ்கின்றவர். மனித நேயமும் யாவரையும் மதிக்கும் பண்பும் அமைதி யான உரையாடலும் எவரையும் வகுத்துப் பிரித்து நோக்காது ஒன்றாகவே எண்ணும் வெள்ளையுள்ளம் போற்றுதற்குரியது. இறைவன் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டும். நல்லவர்கள் வாழ வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

மு.வேலாயுதபிள்ளை, ஆசிரிய கரகத் தலைவர்.

## ஆளுமைமிக்க மாணவன்

திரு. மோகனதாஸ் என்னைக் கவர்ந்த எனது மாணவர்களில் ஒருவர். ஒழுங்கான கற்றலில் ஈடுபட்ட ஒரு மாணவன். கணிதத்துறையில் அவருக்கிருந்த பிரியமும் பயிற்சியும் அவரின் ஆளுமையில் பெரிய செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது. அதிகம் பேசாமை, சுருக்கமாக விடயங்களைக் எடுத்துக்கூறும் ஆற்றல், கடமை உணர்ச்சி, தத்துவ ரீதியாகப் பிரச்சினைகளை ஆராயும் திறன் போன்றவை அவரின் கணிதத்துறையின் அனுபவப் பெறுபேறுகளேயாகும். இக் குணாதிசயங் கள் அவரைச் சிறந்த ஆசிரியராகவும் பிற்பாடு நல்லதொரு பிரதி அதிபராகவும் உருவாக்கின. தான் கல்வி கற்ற பாடசாலையின்பால் நல்ல விசுவாசமும் அக்கறையும் கொண்டவராக அவரின் ஓய்வு காலம் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின் றேன்.

அ.பஞ்சலிங்கம், முன்னாள் அதிபர்.
பழைய மாணவர் சங்கத் தலைவர், (கொ.இ.கல்லூரி).

## உள்ளும் வெளியும் வியாபித்திருக்கும் இறைவன்

இறைவன் உள்ளும் வெளியும் வியாபித்திருக்கிறான். இரும்புத்துண்டு உலையில் கிடக்கும்போது நெருப்பு இரும்புத் துண்டிலும் அதற்கு வெளியிலும் இருக்கிறது. அதே விதமாக தெய்வத்துவம் மனிதனுக்குள்ளும், மனிதனுக்கு வெளியிலும் இருக்கிறது. இங்கு இரண்டு நிலைகள் இல்லை. உள்முக நோக்கில் புலப்படும் ஆத்ம தத்துவமே வெளிக் கண்ணோட்டத்திலும் பிரதிபலிக்கிறது, புலனாகிறது. இதுவே Reflection of the inner being எனப்படுவது. (உள்ளிருப் பதன் பிரதிபலிப்பு) வெளியில் காண்பத னைத்தும் உள்ளிருப்பதன் பிரதிபலிப்பே. உண்மைநிலை உள்ளே இல்லாதபோது, வெளியிலே பிரதிபலிப்பு இருக்க இயலாது. உண்மைநிலை உள்ளே இருக்கிறது. பிரதிபலிப்பு வெளியே இருக்கிறது. ஒலி (Sound) உள்ளே இருக்கிறது. எதிரொலி வெளியே இருக்கிறது. செயல் உள்ளே இருக்கிறது. பிரதிச் செயல் வெளியே இருக்கிறது. உண்மைநிலை- பிரதிபலிப்பு, ஒலி-எதிரொலி, செயல்-பிரதிச்செயல் இதுவே சராசரப்பிரகிருதி யில் உள்ள தொடர்புகள்.

நீங்கள் நேர்மையாக முயற்சி செய்தால் தெய்வத்துவம் அடையப் பெறுவீர்கள். மனிதன் நாலாவது கோசமாகிப் விக்ஞானமய கோசத்தை அடையப் பெறுவான். ஐந்தூனாம் நர ஜன்ம துர்லபம். அரிது அரிது மானிடனாகப் பிறத்தல் அரிது. அனைத்து ஆற்றல்களும் அவனிடம் உள்ளன. இத்தகைய மனிதன் ஏன் பிறருடைய யுக்திகளுக்கு அடிமையாக வேண்டும்?



பண்டைய முனிவர் இதன் உண்மைத் தன்மையைப் பற்றிச் சிந்தித்து, ஒருமைத் தன்மையை உணர்ந்தனர். சாதாரண மனிதன்கூட பண்டைய காலத்தில் உபதேசங்க ளின் விளைவாக அற்புத மனிதனாக மாறினான். (நாங்களும் மாறுவோம்)

சாயி சிந்தனை

## உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்ததில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம்.ஜன.14

உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்து இளைஞன் காயமடைந்தார்.இச்சம்பவம் கடந்த 8ஆம் திகதி சரசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.தனிகரன் (வயது-20) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

(50-207)


## மணிவிழா நாயகர்களுக்கு வாழ்த்து

மேற்கு அவுஸ்திரேலியா, கரம்டவுண்ஸ்,
விக்டோரியா சிவன் விஷ்ணு ஆலயத்தில்
17.12.2009 அன்று நடைபெற்ற



திரு.ம.ஜெயராம சர்மா
சாந்தநாயகி அம்மா

அவர்களின் மணிவிழாவை
வாழ்த்தி, பல்லாண்டு காலம் வாழ
எல்லாம் வல்ல நயினை
நாகபூசணியின் ஆசியை வேண்டி
நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி கலாவதி பிரகதீஸ்வர
சர்மா குடும்பம்.

வணங்குவோர்:
திரு.திருமதி சிவகுமாரக்குருக்கள் குடும்பத்தினர்,
திரு.திருமதி கோசலசர்மா குடும்பத்தினர்,
திரு.திருமதி கேதீஸ்வரசர்மா குடும்பத்தினர்.

அருளம்பலம் வீதி,
கல்வியங்காடு.

## சாலினி உணவகம்

சைவ, அசைவ உணவு வகைகளை
உண்டு மகிழ

தொ.பே:
0217211055, 021 3211989

இல: 5, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

MATHUSALLINY GRINDING MILL
NAL/DS/ 836
Thirunelvely


## (மது)சாலினி அரைக்கும் ஆலை

எமது தயாரிப்புக்கள்:
மிளகாய்த்தூள், அரிசிமா, குரக்கன் மா, பற்பொடி
மற்றும் சமையலுக்குகந்த சார்ந்த வாசனைத்தூள்கள்
பதிவு இலக்கம்: NAL / DS / 836

பிரதான உற்பத்தி நிலையம்:
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு.

விற்பனை நிலையம்:
இல.11, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலிச் சந்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைப்பொங்கல் திருநாளையொட்டி குடாநாட்டுச் சந்தைகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர். பொங்கலுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகச் சந்தைகளில் சனக்கூட்டம் அலைமோதியது. திருநெல்வேலிச் சந்தையில் நேற்று மக்கள் கூடியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்:- நேசன், நந்தன்)

# தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடுவதில் இம்முறை குடாநாட்டு மக்கள் அதிக ஆர்வம்

## யாழ்ப்பாணச் சந்தைகள் நேற்றுக் களைகட்டின

யாழ்ப்பாணம், ஜன.14

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் நேற்று வியாபார நடவடிக்கைகள் களைகட்டியிருந்தன.

கடந்த பல வருடங்களை விட இம்முறை தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடுவதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டினார்கள். இதனால் குடாநாட்டுச் சந்தைகள் நேற்று மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தன.

வழமையைவிட நேற்றுப் பெரும் எண்ணிக்கையான மக்கள் சந்தைகளில் கூடி தைப்பொங்கலுக்குரிய பொருள்களைக் கொள்வனவு செய்வதில் அக்கறை செலுத்தியதைக் காணமுடிந்தது.

தென்னிலங்கையில் இருந்து கூட வியாபாரிகள் பலர் பொருள்களை எடுத்து வந்து சந்தைகளில் விற்பனை செய்தனர்.

இஞ்சி, மஞ்சள் இலை, கரும்பு, அலுமினியப் பானைகள், அகப்பைகள், பட்டாசுகள் போன்றவை தென்பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையில் எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

திருநெல்வேலிச் சந்தையில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடியதால் நேற்று அங்கு பெரும் இடநெருக்கடி ஏற்பட்டது.

நீண்டகால இடைவெளியின் பின்னர் இம்முறை பொங்கல் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடுவதில் யாழ்ப்பாண மக்கள் ஆர்வமாக இருந்ததைச் சந்தைகளில் காணமுடிந்தது.

(50-224-86)

## திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில்
# வீதியோரங்களில் நிறுத்தப்படும் சைக்கிள்கள் பிரதேச சபை ஊழியர்களால் அகற்றப்படுகின்றன



வலி.வடக்கு, ஜன.14

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் வீதியோரங்களில் நிறுத்தப்படும் சைக்கிள்கள் பிரதேசசபை ஊழியர்களினால் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

சந்தைக்கும், கடைகளுக்கும் வரும் பொது மக்களின் நன்மை கருதி சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றில் சைக்கிள்களை நிறுத்தாது போக்குவரத்துக்கு இடையூறான முறையில் விடப்படும் சைக்கிள்கள் பிரதேசசபை வாகனத்தில் ஏற்றப்பட்டு வேறு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு நிறுத்தி வைக்கப்படுகின்றன.

பின்னர் உரிய அறிவுறுத்தல்களின் பின்னர் அவை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.குடாநாட்டுக்கான ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து வாகனங்கள் அதிகரித்துள்ளதுடன் காலைவேளையில் திருநெல்வேலிச் சந்தைப் பகுதியூடாக வாகனங்களும் பயணிகளும் போக்குவரத்துச் செய்வதில் நெருக்கடி நிலை காணப்படுகிறது.

இதனால் ஏற்படும் சிரமங்களையும் சைக்கிள் திருட்டுக்களையும் கட்டுப்படுத்தும் வகையில் வீதியோரங்களில் விடப்படும் சைக்கிள்கள் அகற்றும் நடவடிக்கையை பிரதேச சபை செயலாளரின் பணிப்பின் பேரில் ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

(50-86)

# கைதடி நவீல்ட் பாடசாலை அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு, ஜன.14

கைதடி நவீல்ட் பாடசாலையில் புதிய மாணவர்களுக்கான 2010ஆம் ஆண்டுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்தகாலத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாடசாலையில் அனுமதி கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த போதும் அந்த மாணவர்கள் பின்னர் பாடசாலையில் இணைந்து கொள்ளவில்லை.

யாழ்.மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் பாடசாலையில் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அதிபர் என்.மகேந்திரன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பேசமுடியாதவர்கள், காதுகேட்காத மாணவர்களை நவீல்ட் பாடசாலையில் இணைப்பதற்கு உரிய விவரங்களைச் சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களும் இனம்கண்டு அனுப்பி வைக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்தத்தைத் தொடர்ந்து பல மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வீடுகளில் இருப்பதாகவும், இவர்களைப் பெற்றோர்கள், அரச அலுவலர்கள் இனம் கண்டு குறிப்பிட்ட பாடசாலையில் இணைக்க முன்வரவேண்டும் எனவும் அதிபர் தெரிவித்துள்ளார்.

(50-86)

# டெங்கு அபாயத்தால் சுற்றுச் சூழலை துப்புரவு செய்வதில் பொதுமக்கள் ஆர்வம்

கோப்பாய்,ஜன.14

கோப்பாய் பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வு செயற்பாட்டை அடுத்து பொதுமக்கள் சுற்றுப்புறச் சூழலைத் துப்புரவு செய்வதில் முழுமூச்சுடன் இரவு பகல் பாராது செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக பற்றைகள் வெட்டிதுப்புரவு செய்தல், பள்ளங்கள் மூடுதல், தரிசுக் காணிகளில் உள்ள புற்களை அழித்தல், கழிவுபொருள்கள் புதைத்தல் போன்ற செயற்பாடுகளில் மக்கள் முனைப்பாக ஈடுபட்டுவருகின்றனர்.

இச்செயற்பாடுகளில் தத்தமது உடல் நிலைக்கேற்ப சிறுவர்கள் முதியோர்கள், பெண்கள் எனப் பல்வேறு தரப்பினரும் [illegible] ஈடுபட்டு வருகின்றனர்.

இச் செயற்பாடுகளினால் நுளம்புகளின் பெருக்கம் குறைவடைந்து வருவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

(50-72)

## சண்டிலிப்பாய் பிரதேச சுயதொழில், தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு

நவாலி, ஜன.14

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் நிவாரணம், தற்செயல் நிவாரணம் என்பவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு கொடுப்பனவுக்கான காசோலைகள் வந்து சேர்ந்துள்ளன.

பின்வரும் பெயர் முகவரியுடையவர்களை உடன் செயலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் ப.அருந்தவராசா கேட்டுள்ளார்.

தற்செயல் நிவாரணம்

மு.நவரத்தினம் (வடலித்தோட்டம், மானிப்பாய்), ரூ.ஜெயமலர் (சுதுமலை வடக்கு), மு.இலங்கேஸ்வரன் (காக்கைதீவு, ஆனைக்கோட்டை).

சுயதொழில் நிவாரணம்

யோ.பரமேஸ்வரி (சில்லாலை கிழக்கு), இ.சுகந்தினி (சண்டிலிப்பாய் கிழக்கு), செ.பாமினி (களையோடை அம்மன் வீதி, நவாலி), ப.குகானந்தன் (சண்டிலிப்பாய் வடக்கு), யா.பற்றிமா (முள்ளானை, இளவாலை), மு.பசுபதி (கட்டுடை, மானிப்பாய்).

(50-100)

## போதனா வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் வாகனம்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.போதனா வைத்தியசாலைக்குப் புதிய அம்புலன்ஸ் வாகனம் ஒன்று கடந்த வாரம் எடுத்துவரப்பட்டுள்ளது. இந்தப் புதிய அம்புலன்ஸ் வாகனம் தரைப் பாதையூடாக எடுத்துவரப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு இந்தப் புதிய அம்புலன்ஸ் வாகனத்தை வழங்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(50-224)

## சிறுவரின் ஒன்றுகூடல்

நல்லூர், ஜன.14

சிறுவர்களின் ஒன்றுகூடல் உதவி வழங்கல் நிகழ்வுகள் இன்று (14.01.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் உதவிபெறும் மாணவர்களின் பாதுகாவலர்கள், இலங்கை மாணவர் கல்வி நிதிய அவுஸ்திரேலியாவின் நிதிச் செயலாளர் லெ.முருகபூபதி, யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் திருமதி என்.மோகனேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொள்வார்கள். நிகழ்வில் 110 சிறுவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளது.

(50-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சுனாமியில் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜன.14

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெற்றோரில் ஒருவரை இழந்த சிறார்களின் எதிர்கால வாழ்வை மேம்படுத்தும் முகமாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயற்றிட்டம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் இலங்கை வங்கியூடாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

இதன் முதற்கட்டமாகக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இலங்கை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் சிறார்களை மேற்படி அலுவலகத்திற்குச் சமுகமளிக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத கம்லத் தலைமையிலான உயர் அதிகாரிகள் கலந்துகொள்வர். (1-201)

## திருமறைக்கலாமன்றத்தின் பொங்கல் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஜன.14

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தமிழர் திருநாளான தைத் திருநாளை சிறப்பிக்கும் பொங்கல் தின நிகழ்வுகள் இன்று காலையில் இடம்பெறவுள்ளன.

காலை 5 மணிக்குப் பொங்கல் வைபமும் தொடர்ந்து 7 மணிக்கு பண்பாட்டுத் திருப்பலியும் இடம்பெறும். திருப்பலியை அருள்பணி அ.பி.ஜெயசேகரம் அடிகள் ஒப்புக் கொடுப்பார். திருப்பலியின் பின்னர் திருமறைக்கலாமன்ற அங்கத்தவர்கள் சிலரின் பொங்கல் தொடர்பான கவிதை நிகழ்வும் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்றக் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் கலைத்தூது கலையக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள ஆங்கிலப் பயிற்சிக் கூடத்தின் திறப்புவிழா இடம்பெறும். அமலமரித் தியாகிகளின் யாழ்.மாகாண முதல்வர் அருள்மணி போல் நட்சத்திரம் அடிகள் இதனைத் திறந்து வைப்பார்.

இந் நிகழ்வுகளில் அனைவரையும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றத்தினர் கேட்டுள்ளனர்.

(04)

## டெங்கு ஒழிப்புத் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.14

டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் சமூகத் தலைவர்களை ஒருங்கிணைத்தல் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் முகாமையாளர் பேரவையின் ஆதரவில் நடைபெறும் இந்நிகழ்வில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகர் டாக்டர் என்.சிவராஜா தலைமை வகிப்பார்.


யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவத் துறையைச் சேர்ந்த டாக்டர் எஸ்.சிவகணேசன், சமூக மருத்துவத்துறை டாக்டர் என்.ராஜேஸ்கண்ணன் மற்றும் டாக்டர் ஆர்.சுரேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்கும் ஏக்கத்திற்கு,
எதிர்பார்த்திருக்கும் எதிர்காலத்திற்கு,
நம்பிக்கையுடனான மாற்றத்திற்கு,

# தை பிறந்தால் வழி பிறக்கும், எங்களுக்கும் ஒளி கிடைக்கும்



ஒளிமயமான எதிர்காலத்தினை எந்தத் தடையுமின்றி
உங்களுக்கு பெற்றுக் கொடுத்து, வாழ்க்கையின் சுமைகளை குறைத்து
சகலரும் பொருளாதாரத்தில் ஓர் சிறந்த நிலைமையை அடைந்து
இந்த இலங்கை தேசத்தில் சுபிட்சமாக வாழ்வதற்கு
இத்தைத் திருநாளில் ஓர் வாக்குறுதி.



ஜெனரல் சரத் பொன்சேகா

நம்பிக்கை மிக்க மாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை பூம்புகார் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோர் தமது வீடு, வளவுகளைச் சென்று பார்வையிட்டனர்

## அமைச்சர் டக்ளஸ் அழைத்துச் சென்றார்

யாழ்ப்பாணம், ஜன. 14

அரியாலையில் அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள நாவலடி, பூம்புகார் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தமது இடங்களைப் பார்வையிட நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 300க்கு மேற்பட்டவர்களை அரியாலை சந்தியில் இருந்து நேற்றுப்பிற்பகல் 3மணியளவில் அழைத்துச் சென்றார்.

நாவலடி, பூம்புகார் ஆகிய இடங்களுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களின் வீடுகளை பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி அரியாலைச் சந்தியில் அப்பிரதேச மக்கள் கூடினர். அவர்களுடன் அமைச்சரும் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தார்.

பூம்புகார் சந்தி வரை மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அரியாலை கிழக்குப்பகுதிக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (ஒ-1)

## தண்டவாளத்தை கடத்த முயன்றவர் சிக்கினார்

பழைய இரும்புப் பொருள்களுடன் அரச உடைமையான தண்டவாளத்தை தென்னிலங்கைக்கு கடத்திச்செல்ல முயன்ற பார ஊர்தியை சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்த வாகன சாரதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுளில் சாவகச்சேரி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஒ-207)

# எம் மக்களுக்கு ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாகவேண்டும்

## இந்து மாமன்றத்தினர் வாழ்த்து

தமிழ்மக்கள் சுதந்திரத்துடனும் சுயமரியாதையுடனும் மட்டுமல்ல நிம்மதியாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வாழும் சூழ்நிலை ஏற்படவேண்டும். அது நிரந்தரமாகவே அமைய வேண்டும். அகில இலங்கை இந்துமாமன்றம் விடுத்துள்ள பொங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பாரம்பரிய சொற்றொடருக்கு அமைய உரிய நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் வைத்து தைத்திங்கள் வரவேற்கப்படுகிறது. மலரும் தைத்திங்கள் தமிழ் மக்களுக்கு வாழ்வில் ஒளிமயமான எதிர்காலத்திற்குரியதாக அமைவேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனையாக இருக்கிறது.

எங்கள் சகோதர சகோதரிகள் அனுபவித்துவரும் துயரங்கள் மிக விரைவில் முழுமையாக நீங்கி, அனைவரும் பூரண விமோசனம் பெற்று வாழ்வில் நிம்மதியும், மகிழ்ச்சியும் சேர்ந்த ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாகவேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றோம். துன்பப்படும் எங்கள் மக்களுக்கு விமோசனம் வேண்டி சகல இந்து மக்களும் தைப்பொங்கல் தினத்தன்று வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் ஈடுபடுமாறு மாமன்றத்தின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஒ-1)

# பட்டிப்பொங்கல் விழாவில் கோமாதாக்களின் ஊர்வலம்

## நாளை மாலை நல்லை ஆதீனத்தில்

யாழ்ப்பாணம், ஜன.14

பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் நடத்தும் பட்டிப் பொங்கல் விழா நாளை வெள்ளி பிற்பகல் 4மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இணையத்தின் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கோமாதாக்களுக்கான விசேட பொங்கல், பூசைகள், ஊர்வலம் என்பன நடைபெறவுள்ளன.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீனத்தின் சோமசுந்தர ஞானசம்பந்ததேசிக பராமாசாரிய சுவாமிகள் மற்றும் தர்ம சாஸ்திரகுருகுல அதிபர் சிவாகம ஞான பானு சிவஸ்ரீ தானு மஹாதேவக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்துவர்.

சிறப்புரையாக 'கோமாதா எங்கள் குல மாதா', 'பசுவதை கொடிய பாவம்' என்னும் தலைப்புக்களில் இடம்பெறும் என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

## இலக்கியச் சந்திப்பு

அவுஸ்திரேலியாவில் இருந்த வந்துள்ள மூத்த எழுத்தாளர் லெ. முருகபூபதியுடனான இலக்கியச் சந்திப்பு இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இச் சந்திப்பு இடம்பெறுகிறது. ஆர்வமுள்ள படைப்பாளிகள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (04 - 16)

# அங்கவீனமுற்ற முன்னாள் புலி உறுப்பினர்கள் 1,420 பேருக்கு வவுனியாவில் புனர்வாழ்வு ஏற்பாடு

கொழும்பு, ஜன.14

வன்னியில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக அங்கவீனமுற்ற விடுதலைப் புலிகளின் ஆயிரத்து 420 உறுப்பினர்கள் வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவின் செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மோதல் காரணமாக அங்கவீனமுற்றவர்களின் நலன்களைப்பேணுவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. மஹிந்த சிந்தனை தொலை நோக்குத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு சிறந்த எதிர்கால மொன்றை ஏற்படுத்த முடியும் என அங்கவீனர்களுக்கான தேசிய செய லகப் பணிப்பாளர் எம்.டி.சி.ஜெயமன்ன தெரிவித்துள்ளார்.

அங்கவீனமுற்றவர்களுக்கு மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் 3ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் சக்கர நாற்காலி என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அங்கவீனமுற்றவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக ஜெயமான்ன கூறினார்.

புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் புலி உறுப்பினர்களில் அங்கவீனமடைந்து 1,420பேர் வவுனியா புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் கைகால்கள் இழந்தவர்களுக்கு செயற்கை கால்கள், கைகள் என்பன வழங்கப்பட்டுள்ளதோடு வயது குறைந்தவர்களை அங்கவீனர்களுக்கான பாடசாலைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் தயா ரத்னாயக்க தெரிவித்தார். அங்கவீனமுற்ற புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களின் நலன்களை ஆராய நிபுணத்துவக் குழுவொன் றும் நியமிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்வி அல்லது விசேட பயிற்சி பெறுவதற்காக 12 முதல் 22 வயது வரையிலான ஊனமுற்ற ஒவ்வொருவருக்கும் 4 லட்சம் ரூபா ஒதுக்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்துள்ளார். எந்த அரசாங்கமும் ஊனமுற்றவர்களுக்காக இந்தளவு ச்லுகைகளை வழங்கியது கிடையாது என அங்கவீனர்களுக்கான தேசிய செயலகப்பணிப்பாளர் கூறினார்.

இது தவிர கட்புல, செவிப்புலனற்றோர் மற்றும் உடற்குறைபாடுகளையுடைய சகல சிறுவர்களுக்கும் சகல வசதிகளுடன் கூடிய விசேட கல்விப் பிரிவுகள் மூன்றை புதிதாக ஆரம்பிக்கவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனூடாக அங்கவீனமுற்றவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கவும் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அங்கவீனமுற்றவர்களில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதிய முறையை மாற்றவும் அங்கவீனமுற்றவர்களுக்கு இலகுவான முறையில் பொதுப்போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தி புதிய முறைமை ஒன்றை அமைப்பதாகவும் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்துள்ளார். இதுவும் மிகவும் வரவேற்கத்தக்க நடவடிக்கை எனவும் இதனூடாக அவர்கள் பல நன்மைகளைப் பெறுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். - என்றுள்ளது.

# 'யாழ்ப்பாண வானியல் இரவு' நிகழ்வு நாளை யாழ். பல்கலை. மைதானத்தில்

## ஆர்வமுள்ள பொதுமக்களும் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.பல்கலைக்கழகமும் கொழும்பிலுள்ள புதிய தொழில்நுட்பங்களுக்கான ஆதர் சி.கிளாக் மையமும் இணைந்து 'யாழ்ப்பாண வானியல் இரவு - 2010' எனும் நிகழ்வை நாளை மாலை யாழ்.பல் கலைக்கழக பிரதான விளையாட்டு மைதா னத்தில் நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் மாலை 5மணிமுதல் 7 மணிவரை வானியல் கருத்தரங்கும் இரவு 7மணி முதல் 10மணிவரை வானியல் அவதானிப்புகளும் நடைபெறவுள்ளன. அத்தோடு நாளை காலையில் நடக்கும் கங்கண சூரிய கிரகணத்தை திரையில் பார்ப்பதற்கு இம் மைதானத்தில் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. காலை 10 மணியளவில் துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண இந் நிகழ்வை உலகெங்கும் உள்ளவர்கள் கண்டு களிக்கக் கூடியவாறு இணையத்தளம் ஒன்றையும் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வுகளை ஜி.சீ.ஈ. (உ/த) 2011, 2012ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கும் தரம் 9ல் வானி யலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரி யர்களுக்கும் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

இந்த நிகழ்வுக்கான அனுமதி அட்டைகளை இந்த நிகழ்வின் பொறுப்பாளரான யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரை யாளரான கலாநிதி நா.சிவயோகன் அல் லது இளவாலை சென் ஹென்றி அரசர் கல்லூரியின் பௌதிகவியல் ஆசிரியர் இ.குமரன் ஆகியோரிடமும் மற்றும் வடமராட்சி மாணவர்கள் நெல்லியடி ம.ம.வி அதிபர் இ.செ.சேது ராஜா விடமும் தென் மராட்சி மாணவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ஆ.கைலாசபிள்ளையிட மும் பெற்றுக் கொள்ள முடியும்.

அனுமதி அட்டை ஒன்று 50ரூபா ஆகும். பாடசாலை மாண வர்களுக்கான அனுமதி அட்டைகள் அவர்களின் பொறுப் பாசிரியர்களிடம் மட்டுமே வழங்கப்படும் எனவும் 20மாணவர்களுக்கு ஒரு பொறுப் பாசிரியர் வீதம் சமுகமளிக்க வேண்டும் எனவும் அத்தோடு தமக்குத் தேவையான பொருள்கள் மற்றும் போக்குவரத்து வச திகளுடன் சமுகமளிக்குமாறும் நிகழ்வின் பொறுப்பாளர் நா.சிவயோகன் கேட்டுள்ளார்.

இந்த நிகழ்வு தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 0212225924, 0776664766 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். அத்துடன் ஆர்வமுள்ள பொது மக்களும் இதில் கலந்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-1-16)


## நவீன காலத்தின் தேவைகருதி மேலும் ஓர் புதிய தொழில்நுட்பம்

முதல் முறையாக யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்

* நவீன மெசின்கள் மூலம் ஹரிஸ்மா அல்பங்கள் யாழ்ப்பாணத்திலேயே செய்து பெற்றுக்கொள்ளலாம். (புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு விசேட கழிவு)
* எமது பரிமாண வளர்ச்சியின் ஏணிப்படிகளான உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின் றோம்.

தவம் போட்டோ நிறுவனமும் ஊழியர்களும்இ (93859)

இல. 167, நாவலர் வீதி,
இல.367, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மட்டுவில், சாவகச்சேரி.

## அர்ச்சகர்கள் தேவை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடல்பெற்ற சிவசேத்திரமாகிய அருள்மிகு தெட்சணகைலாய மாதுமை சமேத திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு, பூசைக்கிரியைகளுக்குப் பொறுப்பாக ஆகமங்களைக் கற்றுத் தேர்ந்த பிரதம ஐயர், மடப்பள்ளி ஐயர், உதவி ஐயருமாக பிராமணப் பெருமக்கள் மூவர் தேவை. தகுதியுள்ளவர்கள், தயவு செய்து கீழ்க்காணும் தற்காலிக விலாசத்திற்கு பூரண விவரங்களுடன் விண்ணப்பங்களை விரைவாக அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். வணக்கத்திற்குரிய அர்ச்சகர்களுக்கான சகல வசதி களும் நல்ல முறையில் செய்து கொடுக்கப்படும்.

செயலாளர், திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலனசபை,
359A, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
(0262221108,0779670057) (93862)


## மரண அறிவித்தல்கள்

### நாகர் ஆறுமுகம் J.P.

(கரன் உள்நாட்டு வெளிநாட்டு மதுபான விற்பனை நிலைய உரிமையாளரும் பிரபல கட்டட ஒப்பந்தகாரரும்)

தபாற்கந்தோர் அருகாமை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி, இணுவிலைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நாகர் ஆறுமுகம் J.P. (உரிமையாளர், கரன் உள்நாட்டு, வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையம், பிரபல கட்டட ஒப்பந்ததாரர்) அவர்கள் நேற்று (13.01.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஈசாக் ஞானப்பிரகாசம்



பலாலியைப் பிறப்பிடமாகவும் இல.7/9, மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஈசாக் ஞானப்பிரகாசம் நேற்று (13.01.2010)புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.01.2010) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.7/9, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனுவல் பிலிப்பையா
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள் குடியமர்வுக்கு அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன.14

எழுதுமட்டுவாளின் தெற்குப்பிரிவில் பொது மக்களின் மீளக்குடியமர்வுக்கு நாளை வெள்ளிக்கிழமை முதல் அனுமதி கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது மக்கள் வெளியேறியதை அடுத்து இப்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டு மக்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

கடந்த நவம்பர் மாதம் இப்பகுதிக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்ட போதிலும் மூன்று வாரங்களின் பின்னர் மீளக்குடியமர அனுமதிக்கப்படும் என்று அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஒ - 207)

## வயாவிளான் ம.வி. ஸ்தாபகர் தினம்

யாழ்ப்பாணம், ஜன.14

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஸ்தாபகர் தினமும் கனிஷ்ட பிரிவு பரிசில் நாளும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் சுகனகராசா தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமார், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ந.பகீரதன், யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர், த.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

## டெங்கு நோய் தடுப்பு மீளாய்வுக் கூட்டம்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் யாழ்.மாவட்ட செயலகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில், தற்போது யாழ்.மாவட்டத்தில் வேக மாகப் பரவி வரும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான இரண்டாவது மீளாய்வுக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் கள், உதவி அரசாங்க அதிபர்கள், சகல திணைக்களத் தலைவர்கள், வலயக் கல் விப் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகா ரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகிய சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோர் கேட்டுள்ளனர்.

## நம்பிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தும் இப்பண்டிகையானது இந்து பக்தர்களால் மரபு ரீதியாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வயலில் அறுவடை தொடங்கி உழைப்புக்கேற்ற பயனை அனுபவிக்கத் தொடங்கும் நாளாகவும், எதிர்பார்ப்புகள் ஈடேற்றம் பெறும் நாளாகவும், உழவர்களின் வாழ்வில் மிகவும் முக்கியமான ஒரு நாளாகவும் இத்திருநாள் விளங்குகிறது.

செய்நன்றி மறக்கும் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் இருந்துகொண்டிருக்கும் எங்களுக்கு தைப்பொங்கல் சிறந்த படிப்பினையைப் பெற்றுத் தருகின்றது. உள்ளங்களில் படர்ந்து காணப்படும் இருள் அகற்றப்பட்டு, அனைவரது உள்ளங்களிலும் ஒளிக்கீற்று பரவ எம் முன்னால் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையைப் பிரகாசமான தாக்கிக்கொள்வோம்.

இன்று தைத்திருநாளைக் கொண்டாடும் அனைத்து இந்து மக்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். - என்றுள்ளது.


புதிய பிரிவுகள் ஆரம்பம்
ICT - (A/L) 2011 / 2012
MIS
R.Kumaran - B.Sc.
100% practical
Tamil / English Medium
# 74, Sabapathy Lane, Jaffna. TPNO: 0213216083

பிரத்தியேக வகுப்புச் சேவை
கணக்கீடு திரு. பாலகஜன் | வணிகக்கல்வி திரு. பாலரமேஷ்
A/L 2010 & Day ,A/L 2011,A/L 2012, AAT, HNDA, CBF, BA, B.Com போன்ற துறைகளிற்கான மேற்காட்டிய பாடங்கள் ஆசிரியரினால் உங்கள் இடங்களில் வந்து கற்பிக்கப்படும்.
★ BEA CON ★ BPI ★ College of Commerce
மேற்காட்டிய கல்வி நிலையங்களிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்: 16.01.2010 சனி 9மணி
Mobile:- 077 6740450


# பொன்சேகாவின் வேட்பு மனுவை நிராகரிக்கும்படி கோரி வழக்கு

கொழும்பு, ஜன. 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அமெரிக்கப் பிரஜையான சரத் பொன்சேகா தாக்கல் செய்த வேட்பு மனுவை ஏற்றுக்கொண்டமை தவறு என உத்தரவிடக் கோரி நேற்றுக் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இத் தேர்தலில் போட்டியிடும் மற்றொரு வேட்பாளரான சரத் உபாலி கொங்காஹே என்பவர் சார்பிலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த மனுவில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், சட்ட மா அதிபர், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அமெரிக்கப் பிரஜையான சரத் பொன்சேகாவின் வேட்பு மனுவைத் தேர்தல் ஆணையாளர் தேர்தலுக்கு ஏற்றுக் கொண்டமை தவறு என்றும்-

அதை நிராகரிக்கும்படி உத்தரவிட வேண்டும் என்றும் -

இந்தத் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றிபெற்றால் அவரை வெற்றிபெற்றவராக அறிவிக்கக் கூடாது எனத் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறும் -

இந்த மனுவில் மனுதாரர் கோரியுள்ளார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.நீதிவான் எஸ்.ஆனந்தராசா நேற்றுச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து உண்ணாவிரதிகளுடன் கலந்துரையாடினார்.

உண்ணாவிரதிகளின் கோரிக்கைகள் தொடர்பாக நீதிவான்

சில உறுதி மொழிகளை வழங்கியதை அடுத்து போராட்டத்தை இடைநிறுத்த உண்ணாவிரதிகள் இணங்கியதாக தெரிவிக் கப்பட்டது. (ஒ-1)

## நீதி அமைச்சர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டால் மட்டுமே உண்ணா விரதத்தைக் கைவிட முடியும் என்று உண்ணாவிரதிகள் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தனர். (அ-1)

## ஹெய்டியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெய்ட்டியின் தலைநகர் 'போர்ட்' ஒவ் பிரின்ஸை ஏழு ரிச்டர் அளவில் தாக்கி உலுக்கிய இந்தப் பூகம்பமே கடந்த இரு நூறு வருடங்களில் அந்த நாடு சந்தித்த மிகப் பாரிய இயற்கை அனர்த்தம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் தலைநகரை உலுக்கிய பூகம்பம் காரணமாக தொலைத் தொடர்பு வசதிகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டன. இதனால் சேதங்கள் பற்றிய முழுமையான விவரங்கள் வெளிவரவில்லை.

எனினும், சில தொலைக்காட்சிச் சேவைகள் முற்றாகச் சிதைவடைந்துள்ள கட்டடங்களையும் உயிர் தப்பியவர்கள் அதிலிருந்து வெளியேற முயல்வதையும் ஒளிபரப்பியுள்ளன.

ஜனாதிபதி மாளிகை முற்றாக அமிழ்ந்து போயுள்ளதையும் தொலைக்காட்சிகள் காண்பித்துள்ளன.

எனினும், ஜனாதிபதி ரெனே பிரெவல் உயிர் தப்பியுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முழு நகரமும் தற்போது இருளிலுள்ளது. பல ஆயிரக்கணக்கான மக்கள் செல்வதற்கு இடமின்றி நடு வீதிகளில் தங்கியுள்ளனர் என மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மீட்புப் பணியாளர்கள் என எவரையும் காண முடியவில்லை. மக்கள் உரிய கருவிகள் வசதிகளின்றி, தமது வெறும் கைகளைப் பயன்படுத்தி இடிபாடுகளிலிருந்து உயிர்தப்பியவர்களை மீட்க முயல்கின்றனர் என்றும் மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தலைநகரில் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. இடிபாடுகளிலிருந்து புகை மண்டலம் வெளிவந்தவண்ணமுள்ளது.

வைத்தியசாலைகள், பராமரிக்க முடியாதளவிற்குப் பெரும் எண்ணிக்கையான காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றன. (அ-சி)


Systems Engineer MCP - MCSE
Become an Engineer
கற்கும் அனைவருக்கும Free
ICDL-Computer Driving Lincence)
Dip.. in hardware
A+,N+ (ComTIA)
Per Module Rs.3800 Only
இச்சலுகை 16.01.2010 வரை மட்டுமே.
விபரங்களுக்கு நேரில்
MCS
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்,
Bus Root - 764
T.P-772395895
http://www.mcsitcampus.org


## யாழ். கந்தர்மடத்தில் இனிய வாழ்வு இல்லம்

யாழ்ப்பாணம்,ஜன.14

புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் முன்னர் இயங்கிய இனிய வாழ்வு இல்லம் யாழ்.கந்தர்மடத்தில் இன்று முதல் இயங்கவுள்ளது.இந்த தற்காலிக அவலுவலகம் இன்று முற்பகல் 10 மணிக்கு கந்தர்மடம் இல.54/4, ஆத்திசூடி வீதியில் திறந்து வைக்கப்பட இருக்கிறது என்று இனிய வாழ்வு இல்லத்தை மீளமைக்க முனைவோம் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-16)

## இந்துக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது இந்து சகோதரர்களுடன் சேர்ந்து இலங்கையின் பிரபலமான இந்துப் பண்டிகையான தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் இவ் வேளையில் சுமார் மூன்று தசாப்தங்களாக அவர்களின் பெரும்பாலானவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த சுதந்திரத்தை அனுபவிக்கக் கிடைத்திருப்பது அவர்களது மகிழ்சிக்குப் பெரிதும் காரணமாய் அமைகிறது.

இன்றைய தைப்பொங்கல் தினத்தில் எமது இந்து சகோதரர்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கை தரும் எதிர்பார்ப்புகளை வைப்பதற்கும் வென்றெடுக்கப்பட்டுள்ள சமாதானத்திற்காக நன்றி செலுத்தவும் தங்களது குழந்தைகளுக்குப் போன்றே முழு இலங்கையர்களுக்கும் புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமைக்காகவும் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கை வாழ் அனைத்து இந்துக்களுக்கும் எனது மகிழ்ச்சிகரமான தைப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்ப தோடு, எம்மிடையே சமாதானமும், சுபீட்சமும், நல்ல நம்பிக்கையும், புரிந்துணர்வும் நிலைக் கட்டும் என்ற அவர்களது பிரார்த்த னைகளில் நானும் இணைந்து கொள்கிறேன்.

## கூட்டமைப்பின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்னிரவு சென்னையிலிருந்து அவர்கள் நால்வரும் புதுடில்லிக்கு விமானம்ஏறினர்.

இன்று புதுடில்லியில் இந்திய அரசுத் தலைவர்களையும் மூத்த அதிகாரிகளை யும் அவர்கள் சந்தித்து இலங்கைத் தமிழர் நிலைமை, தற்போதைய இலங்கையின் அரசியல் போக்கு ஆகியவை குறித்துப் பேசுவார்கள் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுப் பின்னிரவில் அவர்கள் புது டில்லியைச் சென்றடைந்ததும், இன்று அவர்கள் புதுடில்லியில் சந்திக்கும் அதிகாரிகள், பிரமுகர் பற்றிய விவரங்களும், நேர அட்டவணையும் புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து அவர்களிடம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இன்று புதுடில்லி வெளிவிவகார அமைச்சில் - 'சவுத் புளொக்' கில் - பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் நாளை அவர்கள் சென்னை திரும்புவார்கள் என்றும்-

அதன் பின்னர் அடுத்த நாள் சனிக் கிழமை அவர்கள் கொழும்புக்கு வரு வார்கள் என்றும் - கூறப்பட்டது.

தாம் கொழும்பு திரும்பிய பின்னர் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக இலங்கைத் தமிழ் மக்களுக்கு சில விடயங்களைத் தெளிவுபடுத்தி விளக்கும் வகையில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடுவார் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று மாலை சென் னையில் உள்நாட்டு விமான நிலையத்தில் வைத்து - புது டில்லிக்கு விமானம் ஏறமுன்னர் - 'உதயனு'க்குத் தெரிவித்தார். (அ-சி)

## இரவு வேளையில் வெடி ஓசை

யாழ்ப்பாணம், ஜன.14

தைப்பொங்கலை ஒட்டி நேற்று இரவு முழுவதும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வெடி ஓசைகள் தொடர்ந்து கேட்டன.

வழமையாக பொங்கலை ஒட்டி வெடி பெரிய அளவில் கொளுத்தப்படாத போதும், இம் முறை வெடி ஓசையால் குடா நாடே அதிர்ந்தவண்ணம் இருந்ததாக பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

வீதிகளில் பயணிக்கும் போது வெடிச் சத்தத்தால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## பொலன்னறுவையில் நேற்று மோதல்

கொழும்பு, ஜன.14

பொலன்னறுவை நகரப் பகுதியில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்களுக்கும் அரச ஆதரவாளர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற மோதலில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

பொன்சேகாவின் பல தேர்தல் அலுவலகங்கள் அரச ஆதரவாளர்களால் செவ்வாய்க்கிழமை தாக்கப்பட்டமையைத் தொடர்ந்தே இந்தப் பதற்ற நிலை உருவானது.

புதன்கிழமை காலை இரு தரப்பினரும் பொலன்னறுவை பஸ் நிலையத்திற்கு அருகில் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

பின்னர் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர்களின் பிரசார அலுவலகத்திற்கு முன்னால் இரு தரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டனர். இதன்போது இரு செய்தியாளர்கள் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

## நாட்டின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்துவருகிறது.

நம்பிக்கையானதும், தீர்மானமிக்கதுமான வரலாற்று மாற்றத்திற்காக எமது நாடு தயாராகிவரும் இத்தருணத்தில் இன, மத, குல பேதங்கள் இல்லாத, சமாதானமும், சௌபாக்கியமும் அரசோச்சும் பெருமைமிக்க நாட்டை அனைத்து இலங்கை மக்களுக்கும் உரிமையாக்குவதைத் தலையாய கடமையாகக் கருதும் நான், இந்த மகிழ்ச்சி பொங்கும் நன்நாளில் அந்த வரலாற்றுக் கடமைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வருமாறு இந்நாட்டுத் தமிழ்மக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன் - என்றுள்ளது.

## வேட்டோசைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொங்கலோடு சேர்த்து மகிழ்ச்சியும் பொங்கட்டும். அகதிகள் என்ற அவலமும் இடப்பெயர்வு என்ற இன்னலும் இந்தப் பொங்கலோடு இல்லாமல் போகட்டும்.

இழந்த உரிமைகளை மீளப்பெற்றோம். இனி எங்கள் வாழ்வில் அமைதி தங்கட்டும் வேட்டோசைகள் ஓய்ந்த தேசத்தில் கௌரவமான அரசியல் உரிமைகளோடு முக முயர்த்தி வாழ்வோம்.

இழந்த உயிர்களைத்தவிர ஏனைய எல்லாவற்றையும் ஓரணி திரண்டு வென்றெடுப்போம். ஜனநாயகம் எங்கள் பயணம், நடைமுறைச் சாத்தியமான வழியில் நமது உரிமைகளையும், வாழ்வையும் வெல்வோம். அந்த வெற்றியை எந்நாளும் பாதுகாப்போம். இந்த உறுதியை இதயத்தில் ஏற்றியவர்களாக மகிழ்ச்சியோடு தைத்திருநாளை கொண்டாடி மகிழ்வோம்.

நம்பிக்கையோடும், துணிச்சலோடும் தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைவருக்கும் தனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் என்றுள்ளது. (ஒ-1)

## மரண அறிவித்தல்



**திருமதி அனுசியா சந்திரன்**

(ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனுசியா சந்திரன் நேற்று (13.01.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை. தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பொங்கல் சிறப்பு மலர்
14.01.2010
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டு முந்தைய மக்களின் வாழ்வில் கற்பகம் பொலிந்த கடவு பனையே நீ வாழி!

**தமிழர்தம் அன்றைய வாழ்வியல்புகள் அவர்கள் வாழ்ந்த பிரதேச இயற்கை வளங்களின் சிறப்பியல்புகளுடன் பின்னிப் பிணைந்தவை. அந்த வகையில் யாழ்.குடாநாட்டுப் பொதுமக்கள் வாழ்வில் கற்பக தருவாய் அமைந்த பனைவளம் முன்னைய காலத்தில் அவர்களது நடைமுறை வாழ்வில் எந்த அளவுக்கு நெருக்கமாக பின்னிப்பிணைந்திருந்தது என்பதனை இன்றைய எமது தலைமுறையினருக்கு நினைவூட்டும் வகையில் அமைகிறது இச்சிறப்புக் கட்டுரை.**

### "கற்பகம் பொலியும் கடவு பனை வாழி"

குடாநாட்டுத் தமிழ்ப் பழங்குடியினர் ஒரு காலத்தில் பனையையே முழுக்க முழுக்க நம்பி வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புக்குரியவர்கள். அவர்களது வாழ்வில் பலநூறு வகையான தேவைகளுக்குப் பனை பயன்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாடு நீக்கமறப் பனந்தோப்புக்களால் நிரம்பி வழிந்த அந்தக் காலத்தில், மக்கள் பனை ஓலைகளால் வேயப்பட்ட வீடுகளிலேயே வாழ்ந்தனர். வீடுகட்டுவதற்கும் பனை மரங்கள், வளைகள், சிலாகைகளே பயன்படுத்தப்பட்டன. இவ்வீடுகள் வெப்பகாலத்தில் வெப்பத்தையும், குளிர்காலத்தில் குளிரையும் தாக்குப்பிடிப்பனவாக இருந்துள்ளன. பொதுவில் சிறந்ததோர் சுவாத்திய வாழ்வை வருடம் முழுவதும் இவ்வீடுகளில் மக்கள் அனுபவித்தனர். அவர்களது வாழ்வைப் பலவழிகளிலும் பனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

### எல்லையே இல்லாத காலம்

மக்கள் பனை ஓலைகளால் பின்னப்பட்ட பாய்களிலேயே படுத்துறங்கினர். பாய்கள் இழைக்க பனங்குருத்தோலைகள் பயன்படுத்தப்பட்டன. விருந்தினர்களை வரவேற்று இருத்தி உபசரிக்க சாயம் பூசிய வர்ணவேலைப்பாடுகளுடன் கூடிய அழகான பாய்களை மக்கள் பயன்படுத்தினர். பனை ஓலைகளின் பயன்பாட்டிற்கு ஒரு எல்லையே இல்லாத காலமாக அந்தக்காலம் விளங்கியது.

### கதிர்ப் பாய்கள்

வீட்டில் நாளாந்த உபயோகத்திலிருந்த பல பொருள்கள் பனையுடன் சம்பந்தப்பட்டவையாகவே இருந்துள்ளன. பெட்டிகள், கடகங்கள் அனைத்துமே பனை ஓலையினாலானவையே. கமக்காரர்கள் தமது விளைபொருள்களான தினை, குரக்கன், வரகு,நெல், பயறு, மரவள்ளிச்சீவல், மிளகாய், ஒடியல் போன்றவற்றைக் காயப்போடுவதற்காக பெரிய அளவிலான கதிர்ப்பாய்களைப் பயன்படுத்தினர். கதிர்ப்பாய் என்பது காரணப்பெயராகும். தினை, குரக்கன் வரகு, நெற்கதிர்களைக் காயப் போடுவதால் கதிர்ப் பாயாயிற்று.

இக்கதிர்ப்பாய்களே கூத்துக் கொட்டகைகளில் மக்கள் சௌகரியமாக இருந்து கூத்தைப் பார்ப்பதற்கான ஆசனமாகவும் பயன்படுத்தப்பட்டன. கலியாணப் பந்தல்களுக்கும் ஆசனமாகப் பயன்படுத்தப்பட்டவையும் இப்பாய்களே எனலாம்.

### ஓலைக் கூடைகளில் சேமிப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பனை ஓலையாற் பின்னப்பட்ட மிகப் பாரிய கூடைகளிலேயே கமக்காரர்கள் தமது தானிய வகைகளைச் சேமித்து வைத்ததுண்டு. வீட்டின் பாவனையில் இருக்கும் கோர்க்காலிகளில் தேவைக்கேற்றபடி மூன்று நான்கு என்ற கணக்கில் ஓலைக்கூடைகளில் சாமி, தினை, குரக்கன், நெல், ஒடியல் ஆகிய பொருள்களை நிரப்பி வைத்திருப்பார்கள். சில கூடைகள் ஏழு எட்டடி உயரமும் சுமார் ஐந்து, ஆறடி விட்டமும் உடையவை. சிறுவர்கள் ஏறிக் கூடைகளுள் குதித்தே தானியங்களைத் தேவைக்கேற்ப அள்ளுவதற்கு உதவுவர்.

வைபவரீதியான சடங்குகளுக்குரிய உடுப்புக்களை வைத்திருக்கவும் திறந்து மூடக்கூடிய நீள்சதுரமான ஓலைப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்ட அக்காலத்தில் இவை பெட்டகங்களுக்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டன.

துலாவின் துணைகொண்டு நீர்பாய்ச்சல் நடைபெற்ற காலத்தில் சர்வசாதாரணமாக நீரை மொண்டு அள்ளுவதற்குப் பாரிய பனை ஓலைப் பட்டைகளே உபயோகத்தில் இருந்தன. வயல்வெளிப்பிரதேசங்களில் உள்ள துரவுகளில் இருந்து நீரை அள்ளி சிறு இளம் பயிர்களுக்கு ஊற்றுவதற்கு கைப் பட்டைகள் பாவிக்கப்பட்டன.

கோயில் கபாடங்களில் திருநீற்றைப் போட்டுத் தொங்கவிடுவதும் பனை ஓலைக்குடுவைகளில் தான். பெரிய குடுவைகளை கோயில் தேவைக்கான பூக்களைக் கொய்வதற்கு மக்கள் பயன்படுத்தினர்.

ஆயுள்வேத வைத்தியர்களது வாகடங்களை எழுதுவதற்கும், சோதிடர்கள் சாதகங்களைக் கணிப்பதற்கும் ஓலைச் சுவடிகளே கையாளப்பட்டன. பண்டைக் காலத்தில் நூல்களை யாத்தவர்களுக்கும் ஓலைச்சுவடிகளே கை கொடுத்துதவின.

### பிளாவில்

பனையில் இருந்து இறக்கப்படும் கள்ளை பனைமரத்தின் அடியில் இருந்து கொண்டு பனை ஓலைப் பிளாவில் பனைப் பன்னாடையால் வடித்துப் பருகுவதையே அக்காலப் பெருங்குடி மகன்மார் இன்பமாகக் கருதினர். பனங்கட்டிகளுக்கான குட்டான்களும் பனை ஓலையினாலேயே செய்யப்பட்டன. ஒரு பலாக்கொட்டை அளவிலான குட்டான்களை தாயைத்தின்னிப் பனங்கட்டிக் குட்டான் என்று அழைத்தனர். இத்தகைய பனங்கட்டிக் குட்டான்களை வாங்கிச் சிறு குழந்தைகளின் கைகளிற் கொடுக்கும் பொழுது அவர்கள் பெரிதும் பரவசமடைவதுண்டு.

### கொட்டைப் பெட்டிகள்

காசு, வெற்றிலை பாக்கு என்பவற்றை வைப்பதற்கு பல அடுக்குகள் கொண்ட கொட்டைப் பெட்டிகளை அக்காலப் பெண்கள் தமது பாவனையில் வைத்திருந்தனர். இக்கொட்டைப்பெட்டிகள் அனைத்தும் சாயம் பூசப்பட்ட பலவித வர்ண ஓலை வேலைப்பாடுகளைக் கொண்டவை.

ஆடு, மாடு, மந்தைகளை மேய்ப்பவர்கள் செட்டை இல்லாத பனை ஓலைத் தொப்பிகளையே அன்றெல்லாம் பாவிக்கும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். இத்தொப்பிகள் சற்று ஒடுங்கிய நீள் வடிவிலானவை.

### வேள்விகளின் போது

குடாநாட்டுக் கோயில்கள் பலவற்றிலும் ஆட்டுக்கடா வேள்விகள் நிறைய இடம்பெற்ற முற்காலத்தில் பச்சைப்பனை ஓலையிலேயே இறைச்சிப் பங்குகள் பொதி செய்யப்பட்டன. இத்தகைய பொதிகள் நீண்ட நேரம் ஆட்டிறைச்சியைப் பதங்கெடாமல் பாதுகாக்கும் திறன்படைத்தவை என்பதையும் அன்றைய மக்கள் அனுபவபூர்வமாகக் கண்டறிந்திருந்தனர்.

### முக்கிய உணவு

பட்டி பட்டியாகப் பசுக்கள் வளர்க்கப்பட்ட அக்காலத்தில் பனை ஓலைகளே அவற்றின் முக்கிய உணவாக இருந்துள்ளன. பனங்குருத்தை ஒரு அபூர்வ ஆயுள்வேத மூலிகையாக அன்றைய மக்கள் ஆய்வு மூலமாக அறிந்து வைத்திருந்தனர். பனைகள் தறிக்கப்படும் பொழுது பெறப்படும் வட்டுக்குருத்தைத் தேடி எடுத்து மக்கள் சுவைத்து அனுபவிப்பதுண்டு.

ஓலையைப் போலவே மற்றைய பனம் பொருள்களையும் பல்வேறு வகையான தேவைகளுக்காக அந்தக்கால மக்கள் பயன்படுத்தி வாழ்ந்துள்ளனர். பனம் நார் கொண்டு ஆடு, மாடுகளைக் கட்டி வளர்ப் பதற்கான கயிறுகளைப் பின்னிக் கொண்டனர். தோட்டங்களில் நீர்ப்பாசனம் நடைபெறுவதற்கான துலாக் கயிறுகளும், வடக்கயிறுகளும் பனம் நார் கொண்டு தயாரிக்கப் படுபவையாகவே இருந்தன.

(VIII பக்கம் பார்க்க)



செல்லப்பா நடராசா
மூத்த பத்திரிகையாளர்

வாடிக்கையாளர்கள்,நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஈஸ்வரன் போக்குவரத்துசேவையின்
அனுசரணையுடன்
அதிசொகுசு பஸ்சேவை



ஒரு வழிக்கட்டணம் 1200 ரூபா

11.01.2010 திங்கட்கிழமை தொடக்கம் கொழும்பில் இருந்து ஆரம்பமாகி நடைபெறுகின்றது. தினமும் 29 ஆசனங்களே பதிவுசெய்யப்படும்.

தினமும் மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சேவை ஆரம்பமாகும்

ஆசனப் பதிவுகள்

யாழ்ப்பாணத்தில்:
115, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222813, 4317

வரணி மிசன்
145, நவீன சந்தை,
தொ.பே .0212222868

மருதம்
தொலைத் தொடர்பகம்
நெல்லியடி,
தொ.பே: 2263210

கொழும்பில்:
ஈஸ்வரன் ரான்ஸ்போட்
201 பி, டாம் வீதி, கொழும்பு.
தொ.பே:2433889

சிற்றி கொமினிக்கேசன்
346, காலி வீதி, கொழும்பு 6
தொ.பே: 2361711

மைக்கொம்மினிகேசன்
487, காலி வீதி,
கொழும்பு - 6
தொ.பே:2362140

சன்றைஸ் டிராவல்ஸ்
6,37 ஆவது லேன்,தொ.பே:0117207046




(சி-564083)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பொங்கல் சிறப்பு மலர் 14.01.2010
உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வசந்தம் வருமா..?

தமிழர் நம் புதுவருடம் தனியான தைப்பொங்கல்
புத்தரிசி போட்டுப் புதிதாய் ஆக்கிடும் தைப்பொங்கல்
இனிக்கட்டும் நம் வாழ்வு இனிதாய் பிறக்கட்டும் புது வாழ்வு
தை பிறந்தால் வழி பிறக்கும் தமிழர் தம் நம்பிக்கை
பல தைகள் எம் மனதை தைத்து விட்டுப் போனதே
தமிழன் தலைவிதி இதுவென்று எண்ணிவிடுவதா!
இல்லை இந்தத் தையாவது வழி பிறக்கும் என்றெண்ணி
வழமை போல் ஏமார்ந்து போய் விடுவதா...
இல்லை வருடா வருடம் தேர்தல் வேண்டும் என்று
இறைவனிடம் வரம் தான் கேட்கவோ?
வசந்தம் நம் வாழ்வில் வீச இதுவொன்றுதான் வழியா?....

கு.டிலீப் அமுதன், இருபாலை.

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்
சிறீ மீனாட்சி தங்க மாளிகை
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 6109

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.
பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட - இளைய தலை முறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட
யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்
பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்
ஜெகன் களஞ்சியம்
இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
துர்க்கா நகைப்பூங்கா
*உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்.
*ஓடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
கபிலா காலணியகம் 24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கபிலா பாதணியகம் 13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
சகலவிதமான கட்டடப் பொருள்கள் நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
CEMENT
ரமணன்
கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம்
525, 528 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 0212229296.

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நகைமாடம்
இல.10 பஸ் நிலையம் முன்பாக, சங்கானை

அனைவருக்கும் எம் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
செல்வி நகை அகம்
(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)
நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 2229441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பு மலர்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
14.01.2010

## தை பிறந்தால் வழி பிறக்கும்

தை பிறந்தால் வழிபிறக்கும், என்ற உன்னத வார்த்தையை உள்ளத்தில் இருத்தி தைத்திருநாளை வரவேற்போம். உழுது பயிர் செய்து பலர் உண்ண வழி செய்யும் உழவர் பெருமக்களுக்கு எம் உள்ளத்தால் இந்நாளில் நன்றி சொல்வோம். பகல் தந்து ஒளிதரும் பகலோன் கதிரவனை வணங்கி வாழ்த்தி, இயற்கையின் மேன்மையைப் போற்றுவோம். இல்லந்தோறும் பொங்கிப் படையல் செய்து குடும்பமாக வழிபாடு செய்வோம். உறவினர், நண்பர்கள், அயலவர் இல்லம் சென்று அன்பைப் பகிர்ந்து நல்லாதரவை வளர்த்துக் கொள்வோம். உறவை இழந்து, ஊர் இழந்து, இடம்பெயர்ந்து, அகம் நொந்து வாழும் அப்பாவி மக்களுக்கு ஆறுதல் சொல்வோம். எமது வளங்களை, வாய்ப்புக்களை நன்முறையில் பயன் படுத்துவதற்கு வழி செய்வோம். எதிர்காலச் சந்ததியின் நன்மை கருதி பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்வோம். சோர்ந்து விடாமல் மீளவும் எழுந்து நல்லன செய்வோம். அன்பர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துத் தெரிவிப்பதோடு அனைவரும் இன்புற்று வாழப் பிரார்த்திப்போம்.

செஞ்சொற் செல்வர், ஆறு.திருமுருகன்

## தையாம் மடந்தை

*அழகாகிய தை அமுதாகிய தை*
*முழுதாகிய தை முதலாகிய தை*
*புதிதாகிய தை புகழாகிய தை*
*பதமாகிய தை பழமாகிய தை*
*பொருளாகிய தை பெரிதாகிய தை*
*அருளாகிய தை அறமாகிய தை*
*கலையாகிய தை கவினாகிய தை*
*தலையாகிய தை தமிழாகிய தை*
*இனிதாகிய தை இசையாகிய தை*
*கனிவாகிய தை கனமாகிய தை*
*தவமாகிய தை தரமாகிய தை*
*நவமாகிய தை நலமாகிய தை*
*வரமாகிய தை வளமாகிய தை*
*தரவே வருவாய் தையாம் மடந்தை!*

-சிற்பி

## பொங்கும் மங்களம் எங்கும் தங்கட்டும்

இந்து தர்மத்தின் பண்டிகைகளின் நோக்கம் நல்லதை உருவாக்கிக் கொண்டு தீயவற்றை நீக்கிச் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதே. தீயவற்றை நீக்கியதன்மூலம் நீங்கள் உருவாக்கிக்கொண்ட ஆனந்தமே கொண்டாட்டமாக அமைகிறது.

அந்த வகையில் தைப்பொங்கல் பண்டிகை தமிழ் மக்களின் பாரம்பரிய பண்டிகையாக ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. ஆனால் எத்தனையோ தை பிறந்தும் எமக்கு இன்னமும் வழி பிறக்கவில்லை. இந்த ஆண்டிலாவது வழி பிறக்கும் என்ற நம்பிக்கைத் துளிர் அனைத்து மக்களிடமும் குடி கொண்டுள்ளது.

2010 புத்தாண்டு சிவனுக்குரிய விரத தினமான வெள்ளிக்கிழமையும் திருவாதிரையும் கூடிய தினத்தில் பிறந்தது. எமக்கு நல்ல சமிக்ஞையாக உள்ளது. அத்துடன் தைப் பொங்கலன்று அபிராமிப் பட்டர் விழா வருகின்றது. இது சக்தியினுடைய விழாவாகும். எனவே சக்தியும் சிவனும் இணைந்து எம்மைக் காப்பாற்றுவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இத்தினத்தில் போரின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் கரங்களாக நாங்கள் எல்லோரும் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து அனைவருக்கும் எனது தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர். J.P.
*(சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார், சம்மேளனம், பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)*

## பொங்கலொடு புதுத்திருப்பம் உருவாகட்டும்!

பொங்கலொடு புதுத்திருப்ப மெம்வாழ்வில் முகிழ்த்துவிட
புறப்பகையை வென்றெடுக்கப் புத்தியொடு நடந்திடுவோம்
எங்களுக்கு இன்னல்க ளினிவேண்டா மிந்நாட்டில்
இதுவரையில் யாம்பட்ட இடரெல்லாம் போதுமம்மா
பங்கமிலாப் பரிகாரங் கண்டிடவே பகவானும்
பக்குவமாய் மீண்டுமொரு சந்தர்ப்ப மிந்துள்ளான்
தங்களது வாக்குளைத் தமிழ் மக்கள் தேர்தலன்று
தக்கவர்க்கு அளிப்பரெனில் தலைநிமிர வாய்ப்புண்டாம்.

சி.வெற்றிவேலு,
வட்டுக்கோட்டை.

## அமைதியான நல்வாழ்வு கிட்டட்டும்

தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பது பொதுமொழி. மக்கள் யாவரும் பொது நோக்குடன் இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு எடுக்கும் விழா பொங்கல் விழா. நமது பொருளாதாரத்தையும், வீட்டையும் சமூகத்தையும் உயர்வு பெறச் செய்யும் விவசாயிகளுக்கு நன்றி பாராட்டும் விழாவாக இது அமைகிறது. எனவே இதனை உழவர் விழா எனக் கூறுவார்கள்.

தைத்திங்களன்று கங்குல் மறைந்த காலம் மங்கள மங்கையர் நீராடி, நீறாடி, புத்தாடையணிந்து, புதுக்கோலமிட்டு புத்தடுப்பினிலே, மஞ்சளும், இஞ்சியும், கரும்பும் விஞ்சத் தோன்றும் புதுப்பானையிலே, புத்தரிசியிட்டு பொங்கல் பொங்குவார்கள். பால் பொங்கும் நேரம் குடும்பத்தவர் அனைவரும் புத்தரிசியிட்டு 'பொங்கலோ பொங்கலென' வேற்றுமைகளை மறந்து ஒற்றுமை உணர்வுடன் இறைவனைப் பிரார்த்திப்பார்கள். அதனை சூரியனுக்குப் படைத்து வழிபட்டு தாமும் உண்டு அயலவர்களுக்கும் வழங்கி மகிழும் பகிர்ந்துண்ணும் பண்பு தமிழர் வாழ்வில் எடுத்துக் காட்டப்படுகிறது.

மறுநாள் நடைபெறும் பட்டிப் பொங்கல் விழா விவசாயிகளுக்கும் துணை போகும் எருதுகளுக்கும், பால் தரும் பசுவினத்துக்கும் எடுக்கப்படும் விழா, தமிழ் மக்களின் நன்றி மறவாப் பண்பினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. அந்நாளில் அவற்றுக்கு நீராட்டிப் பொங்கல் பொங்கி படைத்து வழிபாடாற்றுவர்.


தமிழ் மக்களாகிய நாம் நமது பூரணத்துவமான சுதந்திரவாழ்வை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் ஆன்மிக, கலாசார விழுமியங்களாக விளங்கும் இத்தகைய தமிழ்ப்பண்டிகைகளைப் பொருளுணர்ந்து கொண்டாடுவோமாக.

மங்களம் பொங்கும் இந் நன்னாளில் மக்கள் யாவரும் மாடு,கன்று, மனை மாட்சியுடன் இறையருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ சோ.கி. பிரணதார்த்திஹரக்குருக்கள்.
*(தலைவர், சைவ சமய அருள் நெறி மன்றம், வலி-கிழக்கு- கோப்பாய். )*

KSR PHOTOS
யாழ்.ஒளி
வீடியோ புகைப்படச்சேவை *Jaffna*

**Happy Digital Centre (Pvt) Ltd**
*Colombo*



யாழ்நகரில் *KSR PHOTOS* நிறுவனம் கொழும்பிலுள்ள *Happy Digital* உடன் இணைந்த சேவையை யாழ்.குடாநாட்டில் வழங்குகிறது

★கரிஸ்மா அல்பம் முதல் சாதாரண அல்பம் வரை ஸ்ரூடியோ
★வெளிப்புறப்படப்பிடிப்பாளர்களுக்கான கரிஸ்மா Package அல்பம் விசேட விலைக்கழிவுடன் அல்லது Book அல்பம் இலவசம்.
★நேரில் பார்த்து வடிவமைக்கும் வசதி! (குறித்த நாள்களில்)

**Digital வீடியோ புகைப்படச் சேவை**
★Digital ஸ்ரூடியோ கணனிமயப்படுத்தப்பட்ட சேவை மூலம் சகலவிதமான அடையாள அட்டைப் படங்கள் முதல் அனைத்து ஸ்ரூடியோ படங்களும் கணனி இலக்கம் கொண்டு எந்தக் காலத்திலம் பிரதியாக எடுக்கும் வசதி!
★எமது ஸ்ரூடியோவில் எடுக்கும் படங்களை வெளிநாடு, உள்நாடுகளுக்கு இலவசமாக E-mail செய்யும் வசதி.

★ஒருமுறை ஏதாவது ஒரு அடையாள அட்டைப் படம் எடுப்பதன் மூலம் தொடர்ந்து வரும் உங்கள் தேவைக்கான அடையாள அட்டைப் படங்களை பிரதி இலக்கம் கொண்டு 50% கழிவுடன் பெறும் சிறப்புச் சேவை. அவசர அடையாள அட்டை, ஸ்ரூடியோசிற்றிங் படங்கள் 10 நிமிட சேவையில்

**சகலவித அழைப்பிதழ்கள்**
திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா, மரணநிகழ்வு நாள் அழைப்பிதழ்கள், நன்றிகாட், நிறுவன விளம்பரம், வியாபார விளம்பரகாட், சகலவித நினைவுக் கலண்டர்கள், பிளாஸ்ரிக் அடையாள அட்டை போன்றவற்றை வடிவமைத்து தயாரிப்பவர்கள்

**சகலவித பிறேம் வகைகள்**
Box பிறேம் முதல் சாதாரண பிறேம்வரை (ஸ்ரூடியோக்களுக்கான ரெடிமேற் பிறேம் வகைகள் மொத்த விலையில்)

**பரிசுப்பொருள்கள்**
டியோரோப் பிறேம், மணிக்கூட்டுப் படம், சகலவிதமான வாழ்த்துக்கள், போட்டோப் பிரதி, Net Phone, Fax லெமினேற்றிங், பிறவுசிங்.

*KSR PHOTOS* யாழ்
வீடியோ புகைப்பட சேவை
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
E-mail,ksrphotos@yahoo.com
T.P:0212224585,0772880830

*Happy Digital*
*Centre (Pvt) Ltd. No766kks*
No.75,1/1 Srisumanatissamw,
Colombo 12. Tel: 0094114879566
E-mail : Happy.2002@live.com

(C-563647)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பு மலர்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
14.01.2010

## தை மகளே வருக!



தை மகளே வருக! நல்ல தமிழ் மகளே வருக!!
கனிவுடனே வருக! நல்ல களிப்புடனே வருக!!
பை நிறையப் பணம் சேர நல்ல பண்புடனே வருக!
பசுமையும் குளிர்மையும் மிளிர ஓடோடி வருக!
கை முழுக்கக் காசு வந்து களிப்புடனே நாம் வாழ
மிடுக்குடனே வருக! நல்ல மனதுடனே வருக!
மை விழி மாந்தர் பலர் உனை வரவேற்று நிற்க
மகிழ்வுடனே வருக! மிக மகிழ்ச்சிதனைத் தருக!

சிவநெறிச் செல்வி, இராமையா ஸ்ரீசுரன்


அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்
வரலாறு தரம் 9 - இளங்கோ
வரலாறு தரம் 9 - மயில்வாகனம்
விஞ்ஞானம் உயிரியல் பகுதி தரம் 10, 11- (S.T.இமல்ராஜ்)
A/L தரத்திற்குரிய புதிய பாடத்திட்ட புத்தகங்கள்
அனைத்தும் வெளிவந்துவிட்டன
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2573

AGS SHARMA & CO
(Chartered Accountants)



இன் தைத் திருநாள் வாழ்த்துக்கள்
We Provide The Following Services
Auditing,
Income tax, vat,btt,esc,nbt,
withholding tax
Srl & other tax services
Company Formation
BOI Consultancy
Manegment Consultancy
Feasibility Study
System Study &
Implementation
AGS SHARMA & CO.
(Chartered Accountants)
#81/2B,Jummah Mosque Lane, Off
Kasthuriar Road,
Jaffna.
Tel: 021 222 4589,0777802900
E-mail: agsjaffna@gmail.com
swaminathan@agsarma.com

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
❖ திருமணப் பட்டுப்புடைவைகளுக்கும்
❖ நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
❖ சிறுவர், சிறுமியர்களுக்கான சிறந்த றெடிமேற் ஆடைகளுக்கும்
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5679.
24 மணிநேர சொகுசு வான்/ சொகுசு பஸ் A.C.சேவை
ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்
பயணிகள் யாவரும் அந்தந்த இடங்களில் ஏற்றப்படுவர்
சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, காரைநகர் பயணிகளுக்கு
யோகாஸ் கொமினிகேசன்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை தொ.பே: 021 321 5270
அச்சுவேலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி.
நெல்லியடி, யாழ்.பயணிகளுக்கு பதிவு அலுவலகம்
ஞானம்ஸ் புடைவையகம்
18 ஏ, நவீனசந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 2225679

அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள்
யாவும் நியாய விலையில்பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
ஆர்.வி.ஜி.மருந்தகம், பீடிகள்
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222129
R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.தொ.பே 222 6606

அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்
யாழ்.நகரில்
வஜிதா
மனோகராத்தியேட்டருக்கு
முன்பாக மோட்டார்
சைக்கிள் சேவிஸ் மற்றும்
திருத்தகம்.
(நாவலர் வீதியில்புகையிரதத்
தண்டவாளத்துக்கு அருகில் அமைந்துள்ளது)
இல. 512, கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர், வசந்தன் தொ.பே: 0779670441

அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்
அலங்கார் நகைமாளிகை
21/7 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 2222920
நேர்மை, நம்பிக்கை, நாணயமிக்க ஸ்தாபனம்

பிரகாஸ் போக்குவரத்துச் சேவை
கொழும்பு- யாழ்ப்பாணம்- கொழும்பு





கடந்த பல வருடங்களாக எமது நிறுவனத்தின்
சிறந்தசேவையினை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய
வர்த்தகப் பெருமக்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள்
பொங்கல் நல்வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றோம்
பிறந்த புதிய ஆண்டில் எமது யாழ்.கிளை மூலமாக குடாநாட்டில் உற்பத்தியாகும்அனைத்துப் பொருள்களையும் தென்பகுதியில் உரிய இடங்களில் ஒப்படைக்கவும் கொழும்பிலிருந்து அனைத்து வர்த்தகப் பொருள்களையும் வடபகுதி வர்த்தகர்களிடம் ஒப்படைக்கவும் நம்பிக்கையுடன் சேவை செய்யும் எங்கள் நிறுவனத்தை தொடர்ந்து வாடிக்கையாளர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
221 பாம் வீதி, கொழும்பு 12, 0112543310
457 கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். 021 222 2145


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பு மலர்

14.01.2010

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொங்கலே! எமக்காய் பிறந்திடு

சிதைந்த எம் வாழ்வதனைச்
சீர்திருத்தி அமைத்திட
வசந்தமான வாழ்வதனை
எமக்குத் தந்திட
கண்ணீர் சிந்தி
அநாதிகளாய்
அல்லும் பகலும் அல்லலுறும்
எமக்கெல்லாம்
மறுவாழ்வு தந்திட
தைமகளே, மலர்ந்திடு.

உள்ளக் காயங்களுக்கும்
உழலும் சோகங்களுக்கும்
உருண்டு புரளும்
மனக் கலக்கங்களுக்கும்
கம்பி வேலிகளுக்குள்ளே
ஊன், உறக்கமிழந்து
வாடும் எமக்கெல்லாம்
வளம் கொண்டு நீ
பொங்கி வந்திடுவாய் பொங்கலே!

வே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணி.



## பொங்கும் மங்களம், எங்கும் தங்குக!

தென்னையிலிருந்து வீழ்ந்த
தேங்காயதை யுடைத்து
துருவிப்பிழிந்து - நற்
பானை[illegible]னுள் இட்டு!
பொங்கி [illegible]
அடுப்பில் நல் விறகு வைத்து!
சந்தோஷம் அனைவருக்கும்
சமமாய்க் கிடைக்க வேண்டி!!....
அடுப்பதை நாமெரிக்க
பால் பொங்கி வழிந்தது
கதிரவனை மண்டியிட்டு!!!

இரா.ஷிவதர்சினி,
யாழ்.பல்கலைக்கழகம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம்மினிய
தைத்திருநாள் வாழ்த்துக்கள்



சகலவிதமான கேக், ஐஸ்கிறீம்
குளிர்பானங்களைத்
தயாரிப்பதற்கான பொருட்கள்

கைத்தொழில்
மூலப்பொருள்கள்

வாசனைத் திரவியங்கள்
மற்றும் ஆயுள்வேத மருந்துச்
சரக்குகள்

ஆகிய அனைத்தையும்
பெற்றிட



ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

16A, கே.கே.எஸ்.வீதி, (சத்திரச்சந்தி), யாழ்ப்பாணம்.தொ.பே: 2219

அனைவருக்கும் எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

அஜந்தாஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை
நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும்
ஸ்தாபனம்



54, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
25,04, குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

கொழும்பு விலையில் தரமான
மின் பாவனைப் பொருள்கள், மொத்தமாகவும்,
சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ளலாம்



NEW TONE ELECTRICAL

440,442, Hospital Road, Jaffna. Phone. 021 222 2037

வாடிக்கையாளர் அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்



Manufactures of Gold Jewels

பூரணி நகை மாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்



வின்சர் தியேட்டர் அருகாமை, இல:1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

கிருஷ்ணா நகை மாளிகை

Krishna Jewellary



கிளை நிறுவனம்:
கிருஷ்ணா அடகு கடை
370, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5046

அம்மா பகவான் சரணம்

சாரங்கன் பூஞ்சோலையின்

இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

எம்மிடம் சகலவிதமான கொழும்பினப் பூக்கன்றுகள் மற்றும் குறோட்டன் செம்பரத்தைகளும் பயன்தரும் மரங்களும் சிமெந்திலான மற்றும் பிளாஸ்டிக்கிலாலான பூச்சாடிகளும் பூங்கன்றுகளை நோய்த் தாக்கத்திலிருந்து காக்கும் மருந்து வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 295, பலாலி வீதி, ஆலடிச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

சிறி நதியா டிஜிட்டல் கலர்லாப்

நகைமாளிகை
இல.01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வீடியோ & ஸ்ரூடியோ
லக்ஸன் பிளாஸா கட்டடம், 108 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8412



இணை நிறுவனம் : சிறி நதியா நகைமாளிகை 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பொங்கல் சிறப்பு மலர்
14.01.2010
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தைமகளே! எழுந்தருள்வாய்!

தானியம் தந்திட வந்திடும்
    தைமகளே! உழவர் மகிழ்ந்திட
மானிடம் வாழ்ந்திட வருவாய்
    வளம்பல பெருக உழைத்திட
வேண்டிய சக்தி தந்தருள்வாய்
    வாழவழி பலகாட் டிடுவாய்
தானம்தவம் சிறந்திட யாவரும்
    சிறந்துவாழ்ந்திட தைமகளே! எழுந்தருள்வாய்!

பா.பாலச்சந்திரன்,
மயிலணி.

## ஏர்பிடித்தவனை என்றும் போற்றிடும் திருநாள்!

உலகம் போற்றிடும் உன்னதத் திருநாள்!
உழவர்களின் உழைப்பின் நேரியத்திருநாள்!
ஏர்பிடித்தவனை என்றும் போற்றிடும் திருநாள்!
மடியிலே கனமின்றி மாற்றானிடம் மண்டியிடாமல்
மாண்புடன் வாழும் உழவன்! நாட்டினர் பசி போக்க,
நெல்மணி தரும் உழவன்! அறுவடையின் தானியத்தை,
சூரிய பகவானுக்கு பொங்கலிட்டுப் படைத்து,
தூய வழிபாடு செய்யும், தைப்பொங்கல் திருநாள்!

மாருதி,
ஆவரங்கால்.

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
Multilac®
உங்கள் இடங்களை உங்கள் எண்ணம் போல் வண்ணமயமாக்குவதற்கு பூசுங்கள்
Multilac Paints
Multilac WEATHER GUARD
பிரதேச வாரியாக உள்ள எமது Colour Bank களில் பெற்றுக்கொள்ளலாம்.
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
கந்தவேலன் ரேடர்ஸ்
இல.110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2822
(சி-563670)

அனைவருக்கும் எம் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்கு தருபவர்கள்
நிஷாணந்தா ஜுவல்லறி
இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2227985

அனைவருக்கும் எம் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
மைதிலி நகைமாடம்
Maithely Nagai Madam
தங்க நகை வியாபாரி
Yarl Maithily Jewellers
யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்
89 V, Kasthuriyar Road, Jaffna.T.P:021 222 7902
Sea Street Colombo -11.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
சிறி சிவாஞ்சனா நகையகம்
இல. 149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 9227

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
சாரங்கா நகை மாடம்
T.P.No: 222 6972, Fax. No: 222 8869
கிளை நிறுவனம்
சாரங்கன் நகைமாடம்
109, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். T.P.No: 222 8917
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
இணை நிறுவனம் புதிய பொலிவுடன் கொழும்பில் உதயமாகி நடைபெறுகின்றது
இணைநிறுவனம்:
சாரங்கா ஜுவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11
55, SEA STREET, COLOMBO - 11. TEL: 2434971. FAX: 0112434071

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்
JAFFNA ELECTRICALS
LG Life's Good
Authorised Dealer For Abans
141,Power House Road, Jaffna.
T.P: 021 222 45[illegible] 5766
94 (6), Stanley Road, Jaffna.
[illegible] 021 222 2353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பு மலர்

14.01.2010

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கலைமகள் அழகுநிலா
அழகு நிலையம்
வதிப்புகள் ஆரம்பம்: 15.01.2010
தொ.பே: 0773719071
★Bridal dressing ★Facial ★Threading
★Hair Colouring ★Hair Stretching ★Hair Dye
★Hair Perming ★Hair Cutting ★Pimple Treatment
★Pedeicure Manicure ★Wedding Cake Icing ★Tailoring
மணப்பெண், தோழிகளுக்கான பூச்செண்டுகள், வேல்முடி, கிரீடம்,கேக், ஐசிங் பொருள்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி நெறிகளும் இடம்பெறும்.
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

## வல்ல தை இது

வல்ல தை
வளர்ந்த தை
வாழ்வதை
வாழ்ந்த தை
வருவதை
வாழ்த்துவதை
''வெல்வதை
வேண்டுவதே 'தை'

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

ஜோதிடமணி பிரம்மஸ்ரீ.
சி. ஜகதீஷ்வரசர்மா அவர்கள்
வழங்கும் நாளாந்த சைவ நற்சிந்தனைகள்
உங்கள் மொபைலில்!
செவிமடுக்க 556 ற்கு டயல் செய்யுங்கள்
Dialog

அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்
சொகுசு பஸ் சேவை
யாழ்.கொழும்பு சொகுசு பஸ் கட்டணம் 1350 ரூபா.
எனவே ஆசனப் பதிவுகளை
முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.
வசந்தமான பயணத்துக்கு
வடக்கின் நாதம்
யாழ்.போன் சொப்
இல.09, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7125, 0212223817
Dialog GSM
TheFuture Today
T.P:- 021-222 7125
021-222 3817

## பொங்கிப் பரவட்டும் புதுப்பூம்புனல்

தங்கத் தாமரை போல
மலர்ந்திருக்கும் இதயத்தில்
தங்கிப் பெருகட்டும்
அன்பும் பாசமும்
என்றும் முழங்கட்டும்
இசையும் இன்பமும்
தைத்திருநாளில்
தரணியெங்கும்
பொங்கிப்பரவட்டும்
புதுப்பூம்புனல்

கந்த.ஞானமுத்து,
கைதடி மேற்கு.02.

அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்
தரமான 22 கரட் தங்க
நகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
ஓடர் நகைகள் குறித்த
தவணையில் செய்து
தரப்படும்.
நியூ பிரசாந்தி
ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
95, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 2223015

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
நவநாகரிக நவீனமய ஆடைகள், புத்தம் புதிய
சாறி வகைகள், நங்கையருக்கேற்ற ஜவுளிகள்
அனைத்துக்கும் அதி சிறந்த உன்னதமான இடம்
மிலேனியம் பெஷன்
&
பொம்பே பஸார்
இல.10, 11, POWER HOUSE RD,
GRAND BAZAAR, JAFFNA.
(மலாயன் கபே முன்பாக) T.P: 021 222 9399
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
Nokia, Sumsung,
Sony Ericsion Motorola, Lg,
Voda phone. மற்றும்
உதிரிப்பாகங்கள் விற்பனையும்
மேசைத் தொலைபேசிகள்
கையடக்கத் தொலைபேசிகள்
அனைத்தும் சிறந்த முறையில்
திருத்திக்கொடுக்கப்படும்
Vins Phone Shop
And Repairs
No: 205,
Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 222 4112, 0776394519.

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
தற்போது எமது
நிறுவனத்தின் vsp
லஞ் ஒயில்
கொழும்பு வாழ்
மக்களின் நலன்கருதி
கொழும்பிலும்
விற்பனையாகிறது.
V.S.P லஞ் ஒயில்
பரிமளா ஸ்ரோர்ஸ்
உணவுத் தேவைகளுக்குச் சுத்தமாகத் தயாரிக்கப்படுகிறது
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2224135, 2229165.

✓ சிக்கன் புரியாணி ✓ சிக்கன் பிறைட்றைஸ் ✓ சிக்கன் கொத்துறொட்டி
✓ நூடில்ஸ்புரியாணி ✓ மட்டன் புரியாணி ✓ மட்டன் றோல்ஸ்
✓ மீன் சாப்பாடு ✓ குளிர்பான வகைகள்
✓ ஐஸ்கிறீம் வகைகள்
அனைவருக்கும்
தைத்திருநாள் வாழ்த்துக்கள்
அனைத்தும் அதி உயர்ந்த
தரத்தில் வழங்கப்படும்
அனைவரும்
ஒருமுறை விஜயம்
செய்து பாருங்கள்
சுத்தம்
தரம்
டிலன் ஹொட்டல்
இல.133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0212224136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பொங்கல் சிறப்பு மலர்
14.01.2010
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவில் அன்றைய மக்களின் கயிற்றுத் தேவைகள் அனைத்தையும் பனம் நாரினால் முறுக்கிப் பின்னப்பட்ட கயிறுகளே பூர்த்தி செய்தன எனலாம்.

அடுப்படியில் சட்டி, பானைகளைப் பக்குவமாக வைப்பதற்கான திருகணைகளைப் பனம் ஈர்க்குகள் கொண்டு தயாரித்தார்கள். பூனைகளிடமிருந்து பாதுகாக்கப்படவேண்டிய தயிர், வெண்ணெய், பொரித்த கடல் உணவுகளை வைப்பதற்கான உறிகளையும் பனம் ஈர்க்குக் கொண்டே தயாரித்துக் கொண்டனர். சுளகும் அப்படியே.

### மருந்தாகவும் விருந்தாகவும்

பனைகளில் இருந்து பெறப்படும் கள்ளையும், பதநீரையும் உணவாகவும் மருந்தாகவும் விருந்தாகவும் பயன் படுத்திக்கொண்ட வரலாற்றுச் சிறப்பும் குடாநாட்டு மக்களுக்கே உரிய தனிச் சிறப்பாகும். இவ்விரு பானங்களும் பலவிதமான ஆயுள்வேத மருந்துப் பயன்பாடுகளைக் கொண்டவையாகவும் விளங்கின. பதநீர் மூலம் பெறப்படும் பனங்கட்டி, பனஞ்சீனி, பனங்கற்கண்டு என்பன மக்களின் அன்றைய இனிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன் சித்த ஆயுள்வேத மருந்து பொருள்களுக்கும் பெரிதும் பயன்பட்டுள்ளன.

### பஞ்சம் போக்கி

பஞ்சம் போக்கி என குடாநாட்டுப் பழங்குடியினரால் போற்றப்பட்ட பனையானது அன்றைய நாள்களில் அனைவருக்கும் தினசரி ஒருவேளை உணவையாவது அளித்துள்ளது. காலையில் பனாட்டையும், பகலில் ஒடியற் கூழையும், இரவில் ஒடியற் பிட்டையும் அனைவரும் நல்ல உணவாகப் புசித்த காலம் அது. பனம் பழத்தையும், புழுக்கொடியலையும் இடைவேளைகளில் உணவாக்க் கொண்டனர். இதன் காரணமாக அவர்கள் மிகமிக ஆரோக்கியமானவர்களாக விளங்கினர். கடல் உணவுவகைகளுடன் பயிற்றங்காய், பலாக்காய், பலாக்கொட்டை, பயறு, உழுந்து, மரவள்ளிக்கிழங்கும் சேர்த்துத் தயாரிக்கப்படும் ஒடியற்கூழை அமிர்தமெனப் போற்றினர். மீன் கலந்து அவிக்கப்படும் ஒடியற் பிட்டுக்கு நிகர் அதுவே தான் என்பதும் அவர்களது அனுபவமாகும்.

### பனங்காய்ப் பணியாரம்

அந்தக் காலத்தில் பனம் வளவுகள் இல்லாதவர்கள் இருப்பவர்களிடம் பனம் பழங்களைப் பெற்றுப் புசிப்பதுண்டு. அப்படிப் பெறப்பட்ட பழங்களின் விதைகளை மறுநாள் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது நிபந்தனையாகும். மக்கள் விரும்பிப் புசித்த பணியாரங்களில் பனங்காய்ப் பணியாரமும் முக்கிய இடத்தை வகித்துள்ளது. தினை மாவும் பனம் பழச்சாறும் சேர்த்துப் பிசைந்து தயாரிக்கப்படும் இப்பணியாரத்தை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி வயிறு நிறையப் புசிப்பதுண்டு.

### நகைச்சுவையில் பனங்காய்

நாடகங்கள், கூத்துக்களே மக்களின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாக விளங்கிய காலகட்டத்தில் அவற்றில் நடிப்பவர்கள் அதாவது கோமாளி வேடம் தரிப்பவர்கள் பனம் பண்டங்கள் பற்றிய பாடல்களைப் பாடிச் சபையோரைச் சிரிக்க வைப்பதுண்டாம்.

கோண்டாவிலில் இருந்த நாடகக் குழு ஒன்றில் பிரபல நகைச்சுவை நடிகர் ஒருவர் இருந்துள்ளார். அவரது பெயர் வைரமுத்து. நாடகம் ஆரம்பிப்பதற்கான திரைச்சீலை விலக்கப்பட்டதும் இந்த நடிகர் மேடையில் கோமாளி வேடத்துடன் துள்ளிக் குதித்து ஏறி ''காளிப் பனங்காயைத் தின்னுங்கோ, கண்ட இடமெல்லாம் கழியுங்கோ'' என்று தொடங்கும் பாடலொன்றைப் பாடி மக்களைக் கொல் என்று சிரிக்கப் பண்ணுவார் என்று அந்தக்கால முதியோர்கள் கூறக் கேள்விப் பட்டிருக்கிறேன். இது அந்தக்கால மக்களுக்கும் பனம் பண்டங்களுக்கும் இடையில் இருந்த நெருக்கமான தொடர்பைக் குறிப்பதாகும். வீட்டுக்கிணறுகள், தோட்டக் கிணற்று ஆடுகால்களில் பேண் தடிகளாகப் பனை மரங்களே பயன்படுத்தப்பட்டன. பனம் நார் கொண்டே பேண்களைப் பிணைத்தார்கள். ஏணிகளின் பயன்பாட்டிற்கும் பனை மரங்களே பாவிக்கப்பட்டன.

பனை ஓலைக்கழிவுகள் அனைத்தும் கமங்களில் பசளைகளாகின. வீடுகளைப் புதிதாக வேயும் பொழுது கழிக்கப்படும் பழைய ஓலைகளும் தோட்டங்களில் பசளையாகப் புதைக்கப்படுவதுண்டு.

### கறவைப் பசுக்களுக்கு

பனம் பண்டங்களில் எவற்றையுமே அந்தக்கால மக்கள் பயன்படுத்தாமல் விட்டிலர். தாகசாந்திக்குப் பனம் குரும்பைகளைப் பயன் படுத்திய மக்கள் பனந்தோப்புக்களில் அணில்கள் அரித்துக் கொட்டும் பனம் குரும்பைகளை அரித்து கறவைப் பசுக்களுக்கு நல்ல தீவனமாகப் பயன்படுத்தினர். இதன் காரணமாக பசுக்கள் மிகமிகத் தரமான சுவையான பாலைக் கொடுக்கக் கூடியனவாக விளங்கின. மக்களின் விறகுத் தேவைகளையும் பனைகளே பூர்த்தி செய்துள்ளன. பனம் மட்டைகள், கங்குகள், கொக்காறைகள் அனைத்தும் விறகாகப் பயன்படுத்தப்பட்டன.

### புகையிலை உணர்த்த

யாழ்ப்பாணத்தில் பணப் பயிராக விளைவிக்கப்பட்ட புகையிலை, தென் இலங்கைக்கும் தென்னிந்தியாவிலுள்ள மலையாளத்திற்கும் அனுப்பப்பட்ட அந்தக்காலத்தில் புகையிலைச் சிப்பங்களைக் கட்டப் பனைஓலைப் பாய்களே உதவின. என்பதைப் புகையிலை வியாபாரிகள் அறிவார்கள். புகையிலையை உலர்த்துவதற்குப் புகையிலைக் குடில்களில் புகைபோடுவதற்கு ஊமல் கொட்டை களும், பனங்கிழங்குத் தோல்களும் அந்தக்காலத்தில் புகையிலை விவசாயி களுக்கு மிகவும் அத்தியாவசிய பொருள்களாக விளங்கியுள்ளன.

### கற்பகதரு

குடாநாட்டுப் பழங்குடியினரைப் பஞ்சம் வந்து தாக்கிய வேளைகளில் எல்லாம் அவர்களைக் காப்பாற்றிய பெருமை பனைகளையே சேரும். இதனாலன்றோ அவர்கள் பனையைக் கற்பகதரு எனப்போற்றி வாழ்ந்தனர்.

### மருத்துவப் பயன்பாடுகள்

பனம் வேரிலிருந்து பனம் குருத்து வரையான பனம் பண்டங்களின் மருத்துவப் பெறுமானம் பற்றிய தகவல்கள் பல சித்த ஆயுள்வேத மருத்துவ ஏடுகளில் விரவிக் கிடக்கின்றன. பனங்கள், நுங்கு, பழம், பனாட்டு, கிழங்கு, பூரான், பனங்கற்கண்டு, பனைவெல்லம், ஒடியல், பனம் பூ, ஆகிய எல்லாவற்றையுமே தமது தேவைகளுக்காக நாட்டு வைத்தியர்கள் பயன்படுத் யிருக்கிறார்கள்.

### பனம் வேர் லேகியம்

மருத்துவத்தில் பனம் வேர் லேகியம் ஆண்மையை மிளிர வைக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று பனைவேர் பற்பொடி பதினேழு வகையான பல்வியாதிகளை ஒழிக்கும் தன்மையது என்றும் ஆயுள்வேத சித்தமருத்துவ வாகடங்களில் சொல்லப்பட்டுள்ளது.

### தெய்வீகத் தாவரம்

தெய்வீகத்தாவரம், காமதேனு எனப் புராண காலந்தொட்டு அரசர்களாலும், மருத்துவர்களாலும், புலவர்களாலும் போற்றப்பட்ட தாவரம் பனையேயன்றி வேறெதுவுமில்லை. பனையின் பயன்பாடுகள் ஆயிரத்தெட்டென்றும் அவற்றை நூற்றி எட்டு வகைகளுக்குள் சிறப்பாக அடக்கலாமென்றும் அந்தக் கால மக்கள் கூறிப் போந்தனர். இன்றைய மக்களாகிய எங்களுக்கு எத்தனை வகையான வியாதிகளுக்கு அந்தக்கால மருத்துவர்கள் பனம் பண்டங்களைப் பயன்படுத்தினார்கள் என்பது தெரியாது.

### கடவு பனை வாழி

பழந்தமிழ் இலக்கிய நூலாகிய தொல்காப்பியத்திலும் சங்ககால இலக்கியங்களிலும் பனை பற்றிய சூத்திரப் பாடல்கள் உள்ளன.

சிங்கள மக்கள் பலா பஞ்சம் போக்கியென்பர். அதைவிடப் பலநூறு மடங்கு சிறப்புக்களைக் கொண்ட பனைச் செல்வத்தைப் பெருக்கி வாழ வேண்டியது இன்றைய குடாநாட்டு மக்களது கடமையும் காலத்தின் தேவையுமாகும். நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் யாத்த பாடல் ஒன்றில் ''கற்பகம் பொலியும் கடவுட் பனைவாழி'' என்று பனையை வாழ்த்தி கடவுள்ப் பனை வாழி என்று சிறப்பித்துப் பாடியுள்ளமையும் இன்று நினைவு கூரத்தக்கது. புராண காலத்தில் தேவர்கள் அருந்திய சோமபானமென்பதும் பனையில் இருந்து பெறப்பட்டதாகவே இருந்திருக்கும் என்பதும் எனது ஊகமாகும். பனையின் புகழ்பாட இன்று எம்மிடையே சிவதரும வள்ளல் க.கனகராசா அவர்கள் இல்லையே என்பதும் இன்று உள்ளத்தில் உள்ள இன்றைய கவலையாகும். ★







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தைப்பொங்கல் சிறப்பு மலர்
14.01.2010
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## ராஜா கிறீம் ஹவுஸ்

எமது ஸ்தாபனம் 35 வருடங்களை நிறைவு செய்து 36 ஆவது வருடத்தில் கால்பதிக்கும் இந்நேரத்தில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

எமது கிளை நிறுவனமான ராஜா கிறீம் ஹவுஸ் & ஹோட்டல் மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு என்பவற்றை அறுசுவையுடன் உண்டு மகிழ்ந்திட நாடவேண்டிய ஸ்தாபனம்

**ராஜா கிறீம் ஹவுஸ் & ஹோட்டல்**
46,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# வளங்கள் பெருகி வையம் சிறக்க தை மகளே வருக!

தமிழர்களின் பண்பாடு தனித்துவமானது. அவர்களது பழக்கவழக்கங்கள் மேலானவை. விரத அனுட்டானங்களும் பண்டிகைத் தினங்களும் சிறப்பானவை. அவை தமிழர்களின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பவை. இனசன ஈர்ப்பு,அயலவர் நேசம் , அன்பு, கருணை, பாசம், விருந்தோம்பல் போன்ற நற்பண்புள் கொண்டவை. இத்தகு சிறப்புகள் கொண்டு விளங்கும் பண்டிகைத் தினங்களுள் தைப்பொங்கல் திருநாள் முதன்மையானது.



இயற்கைக்குத் தலை வணங்கிய பண்டைய தமிழர்கள் சூரியனையும் பணிந்து ஏத்தினார். நீர், நிலம், நெருப்பு, நீள் விசும்பு, என்பவற்றின் அசைவுக்கும், இயக்கத்திற்கும், பருவ மாற்றங்களுக்கும் பகலவனே காரணகர்த்தா என்பதை அறிந்து தெளிந்தனர். அதனால் "ஞாயிறு போற்றுதும்,ஞாயிறு போற்றுதும்" எனக் கதிரவனைக் கைதொழுதனர். சூரியன் தெற்கில் இருந்து வடதிசை நோக்கிச் செல்லும் உத்தராயண காலம் முதல் நாளாம் தைத்திங்கள் நன்னாளில் முற்றத்தில் கோலமிட்டு பூரண கும்பம் வைத்து புதுப்பானையில் பொங்கிப் படைத்து எங்கும் மங்களம் தங்க வேண்டி சூரியனைப் போற்றி நன்றிக் கடன் செலுத்தினர்.

கார் பார்த்து, ஏர் பூட்டி, களமேட்டில் நெல் விதைத்து, களை பறித்து,வயல் பரப்பில் நெல் மணிகள் பொலியக் கண்டு களிப்பெய்தும் விவசாயி பொங்கிப் படைத்து நிலமகளைப் பணிந்து நன்றி செலுத்தும் நன்னாளை உழவர் திருநாள் என்றும் போற்றுவர்.

தைப்பொங்கல் பெருநாள் தமிழர் பண்பாட்டை, பாரம்பரியத்தை அழியாது காத்து நிற்கும் கவசம். இந்நாள் தமிழர்களுக்குப் பொன்னாள். எங்கள் நாடும் எங்கள் வாழ்வும் சிறக்க இத்திருநாளில் இறைவனை ஒருமனதாகப் பிரார்த்திப்போம்.

நேர்மைத் திறனும் நெறிபிறழா வாழ்வும் கொண்ட நம் தமிழினம் புது வாழ்வு பெற்று புது யுகம் காண வேண்டி இந்நன்னாளாம் பொங்கல் பெரு நாளில் வேண்டுதல் செய்வோம்.

வற்றாது ஊற்றெடுக்கும் அன்பைத் துணைகொண்டு, அறத்தைப் பின்பற்றி, இறையைப் பணிந்து, பக்குவம் நிறை மாந்தராய் தமிழரின் பாரம்பரிய பண்பொழுக்கத்தைக் கைக்கொண்டு எல்லோரும் இனிதே வாழ, எல்லோர் வாழ்வும் செழிக்க வேண்டி, கொடுநோய்கள், கொடுமைகள், இயற்கைக் கொடூரங்கள் இல்லாது மக்கள் இன்புற்று வாழ பூரண முதல்வனாம் இறைவனை வேண்டுதல் செய்வோம். கடவுள் கருணை பெற்று களிப்புடன் என்றும் வாழ்வோமாக!

*- கந்த. தியாகராசா, கோண்டாவில்.*


அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
**செ. இரர்சரட்ணம்**
நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாக உற்பத்தியாளர்
**S.R.P.பம்புகள்**
(சி/563662) கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில், தாவடி.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இன்றைய தைத்திருநாளில் மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
74ஆவது ஆண்டில் காலடிபதிக்கும் பருத்தித்துறை
**குகன் ஸ்ரூடியோ**
புகைப்படத்துறையில் 74 வருடங்களாக வாடிக்கையாளர்களுக்கு அதிசிறந்த சேவைகளை வழங்கி வரும் எமது நிறுவனம் வாடிக்கையாளர்களின் நன்மைகருதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த சேவைகளை வழங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
குகன் ஸ்ரூடியோ
பருத்தித்துறை,T.P 0212263218. (சி/563665)
உரிமையாளரும், ஊழியர்களும்.

தைமகள் வந்தாள் தைத்திங்கள் பிறந்திடவே
தரணி யெல்லாம் மக்கள் யாவரும் வளமுடன்
தலை நிமிந்து மகிழ்வுடன் வாழ,
எல்லாம் வல்ல ஆனைமுகன் ஆறுமுகனை பணிகின்றோம்.
- நீரூர் முருகதாசன்

அனைவருக்கும் இனிய தமிழ் தைப்பொங்கல் வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்
**திருமுருகன்**
திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்
நீர்வேலி, [நீர்வேலி கந்தசாமி கோயிலருகில்]
முற்றிலும் குளிரூட்டப்பட்ட [A.C] சகல வசதிகளையும் ஒருங்கே கொண்டது
தை மாதம் கட்டணக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
கட்டணமாக ரூபா 23,000/= மட்டுமே (சி/564108)

அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
மோட்டார், மைக்னற்கொயில், A/C FAN, டைனமோ, ஆமெச்சர் முதலியன குறித்த தவணையில் வைன்டிங் செய்து கொடுக்கப்படும்
**ஜெயா வைண்டிங் வேக்ஸ்**
இல.54, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.T.P.: 222 2691
38 ஆவது ஆண்டை முன்னிட்டு குறைந்த விலையில்
டிஜிற்றல் முறையில் நவீன கருவிகளால் வைண்டிங் செய்து கொடுக்கப்படும்
**ஜெயா டிஜிற்றல் வைண்டிங்**
இல.35-1/-1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/563634)

அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்
**ஈ.எஸ்.பி.நாகரத்தினம் சக நிறுவனம்**
சைக்கிள்கள், அதற்குரிய உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இல:50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/563655)

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
**அற்புதா ரேடிங் கொம்பனி, மல்ரிப் பிளேஸ்**
சகலவிதமான ஆடம்பரப்பொருள்கள், துவிச்சக்கரவண்டி அதன் உதிரிப்பாகங்கள், வீட்டுத்தளபாடங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
198, [illegible] வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். (சி/563654)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பு மலர்

14.01.2010

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## "உரிமைப் பொங்கல் பொங்கிடுவோம்....!"

பூக்கள் சிரித்து மலர்ந்திருக்க...!
பூமி பசுமைக் குடை பிடிக்க....!
துள்ளிக் குதித்துக் களிக்கும்
நீர் நதியுடன்
தலை துவட்டிக்கொண்ட
வயல் வெளிகளுடன்
உயிரினங்கள் குதூகலிக்க...;
மெல்லிசை பாடி
காற்றலை
உலகையே சில்மிசம் செய்ய...;
உதய வானில்
உதயமாகிடும் உத்தம புருஷனுக்கோர்
''உரிமைப் பொங்கல்
பொங்கிடுவோம்....!''

- என்.பிரதித்தன், கோண்டாவில்.

## இனிய நாளே பொங்கல் புத்தாண்டு

பொங்கலும் புத்தாண் டுமாகப்
புலர்ந்திடும் புனித நாளாம்
எங்களின் வாழ்வில் புதிய
ஏற்றமே காட்டும் நாளாம்
மங்கள மாக வாழ
வழியது பிறக்கும் நாளாம்
எங்களின் இதயச் சுமைகள்
இலகுவில் விலகும் நாளாம்.

வ.யோகராஜ்சிவம்.

## "தை" அணங்கே

மார்கழியாள் மறைந்திடவே
"தை" மகள் துயிலெழுந்தாள்
தைமகளே தமிழரின் தலை மகளே
எம் இனிய உறவுகட்கு
என் செய்வாய் தமிழ் அணங்கே

ஏரோடும் சீரோடும்
ஊர்போற்ற வாழ்ந்தவர்கள்
உழைப்பின் பெருமை தனை
உலகு அறியச் செய்தவர்கள்
பதினாறும் பெற்று
பெருவாழ்வு வாழ்ந்தவர்கள்
பாத்திரம் கொண்டு சென்று
தோத்திரம் செய்து நின்று
யாத்திரை செல்கின்றார்கள்
பசி தீர்க்க; படுத்துறங்க
எம் மகளே எம் இனத்தின்
குறை தீர்க்க அருள் செய்வாய்
தை அணங்கே!

நடராசா சந்திரலிங்கம்,
அச்சுவேலி வடக்கு.

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
S.T.R. TRAVELS
★ வெளிமாவட்ட சுற்றுலாக்கள்
★ பாடசாலைச் சுற்றுலாக்கள்
★ திருமண வைபவங்கள்
★ விசேட வைபவங்கள்
★ யாழ்.கொழும்பு, பஸ்,வான் சேவை
மேலும் உங்களது தேவைகளுக்கும் 30, 54 ஆசனங்கள் கொண்ட அரைச்சொகுசு பேருந்துகள் பயண சேவைகளுக்கு எம்மிடம் உள்ளன. உங்கள் தேவைகளுக்கு உடன் எம்மிடம் தொடர்புகொள்வதற்கு
S.T.R. Multy Center
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
0214590223, 0779257488
S.T.R. Multy Center
அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை
0213212601, 0777570150.

VISIT OUR NEW SHOWROOM...
சுந்தர்சன்
SUNDHARSON
DISTRIBUTORS OF ELECTRICAL ITEMS AND ELECTRICAL APPLIANCES, WATER PUMPS, SANITARY WARE,
யாழ் வீதி, மானிப்பாய்.
அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
Authorised Dealers for LG Abans
Distributors For KELANI CABLES

இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
இளவரசி சேலைச் சோலை
(பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்)
ELAVARASI TEXTILE
(SPECIALIST IN WEDDING SAREES)
57 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2503

அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்...
வெளிநாட்டிலிருந்து WESTERN UNION மூலம்
பணம் அனுப்பிப் பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) கிடைத்து ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
Money Master
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
NO. 303 K.K.S.ROAD, JAFFNA.
T.P.021 222 2670, 5392, Hot Ling 0777427182, Fax 021 222 3214
e.mail:- Srimurugan@eurekare.lk

HOTEL SMS
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.
BROWN ROAD (KALADDY JUNCTION) JAFFNA

ALDI ELECTRONICS
No,15 Stanly Road, Jaffna
இனிய தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்
தரமான கணனி
கணனி உதிரிப்பாகங்கள்
கைக்கடிகாரங்கள் (ஆண், பெண்)
பழைய புதிய தமிழ் ஆங்கில திரைப்படங்கள்
பாடல்கள் காமெடிகள்
DVDs VCDs MP3s Audio CDs
MP3 MP4 Player
Computer Software Games CDs

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
நியூ நெல்சன் லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை பதிவு இல. D.S.590
★ ஒரே தடவையில் நான்கு வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ சாரதிப் பயிற்சிகள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை வழங்கப்படும்.
★ சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
சகல வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்றுவித்து சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்
★ அதிகூடிய பயிற்சி நேரங்கள்.
★ அதிகூடிய பயிற்சிக் காலங்கள்
★ எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள்.
★ வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
இல. 89, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021 222 4527, 077 3581916, 077 7942312.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பு மலர்

**14.01.2010**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நன்றாக நல்வாழ்வைத் தா!

விட்டில்க ளாகிவாழ் வழித்த காலமிங்கு
பட்டென்று பறந்துபோகப் பாரில் – மட்டற்ற
மகிழ்வுபெற் றேயபூகை போக்கிநற் புன்னகையாய்
சுகவாழ்வை யடைந்தோமே சென்று.

காரமுத மாதிரியாய்க் கண்ணமுது சிவந்து
நேரெதிரே நின்றபோதும் நெக்குருகி – யாரும்
வாருமென் றழைக்காத நிலைதாண்டி வந்து
ஊரமர்ந்தோம் உருப்படியாய் உண்மை.

காலிடறிப் போனபோதும் கைதவறி வீழ்ந்தபோதும்
காலியாகி எல்லாமே கரைதெரியா – ஆழியாகி
ஊழிப் பெருக்கினிலே உருண்டலைந்து
உயிர்கொடுத்து
வேலிப் படலையிலே வந்துபெற்றோம் வாழ்வு.

ஆண்டுக் கொருமுறை நீவந்து மென்ன?
கூண்டோடு குலமழியச் செய்துதானே – சென்றாய்.
மீண்டும் நீவரு கின்றாய் மிடுக்கோடு
கொன்றுஎமைக் குலைத்திடாமற் கார்.

வாசலிலே வரவேற்க வந்துள்ளோம் தாயே!
பூசலின்றிப் புதுவாழ்வு வேண்டி – நேசமுடன்
நிந்தனையே நம்பியுள்ளோம் நன்றியுடன் நீயும்
நன்றாக நல்வாழ்வைத் தா.

- சு.க.சிந்துதாசன்.

## பொங்கும் பொங்கல்


*ஊக்கத் தாயுடன் தொண்டுத் தந்தை*
*சேர்க்கை கொண்டால் குழந்தை நலங்கள்*
*ஆக்கத் தொட்டிலில் அளவின்றிப் பொங்கும்*

*திட்ட வதைகளைச் செல்வச் சிறுமழை*
*தொட்டு அணைத்தால் வளங்கள் பலவும்*
*கொட்டிக் குவிந்து செழுமை பொங்கும்!*

*தாய்மொழி அதனுடன் ஆட்சிமுறை இணைந்து*
*ஓயுதல் இன்றிச் செல்வழி கண்டால்*
*பாய்ந்து நன்மைகள் பாரினில் பொங்கும்!*

- கவிஞர் செ.பரமநாதன், மண்டைதீவு.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தைப்பொங்கல் சிறப்பு மலர்

14.01.2010

உதயன்


அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்

MAHARAJ PUMPS




## இதோ ஓர் அரிய செய்தி

உற்பத்தி மற்றும் விநியோகித்தலில் 50 ஆண்டுகளுக்கு மேலான தேசத்தின் நம்பிக்கையை வென்ற வரையறுக்கப்பட்ட த. டிரேட்ஸ்மன் இலங்கை (தனியார்) நிறுவனம் யாழ் மக்களின் நீண்டகால கமத்தொழில் நீர்த் தேவையினையும் மற்றும் அன்றாட வீட்டு நீர்த் தேவையினையும் பூர்த்தி செய்யும் நோக்குடன்

## மகராஜ் நீர் பம்பிகளை

இன்று முதல் யாழ் மண்ணின் அனைத்து இரும்பகங்களிலும் விற்பனைக்கு அறிமுகம் செய்துள்ளது.

மகராஜ் நீர் பம்பியைப் பாவிப்பதினால் நீங்கள் பெறும் பயன்களில் சில

- வார்க்கப்பட்ட இரும்பினால் உருவாக்கப்பட்ட நீர் பம்பிகள்
- பித்தளையினால் செய்யப்பட்ட இம்பிலேயர்
- செரமிக் மற்றும் காபன் தயாரிப்பிலான நீர்த் தடுப்பாக்கி தன்னியக்க ஓவர்லோட் கட்டவுட் சுவிற்ச். உங்களின் அதிகப்படியான மின்சார பாவனையை குறைக்கும்
- குறைந்த சப்தத்துடன் சிங்கிள் பேஸ் மின்சாரத்தில் இயங்கும் நீர் பம்ப்
- வரையறையற்ற உத்தரவாதம்
- 24 மணிநேர பராமரிப்புச் சேவை மற்றும் இலகுவாக உதிரிப்பாகங்கள் பெற்று கொள்ளும் வசதி
- உயர்தரத்திலான நீர் பம்பிகள் நீண்ட கால பாவனையைக் கொண்டது

The TRADESMANN 1956
www.tradesmann.com

வரையறுக்கப்பட்ட த. டிரேட்ஸ்மன் இலங்கை (தனியார்) நிறுவனம்.
இல 40, பொருப்பன பெரி வீதி, இரத்மலானை, இலங்கை.
வாடிக்கையாளர் சேவை: +94 11 5565657,8 பக்ஸ்: +94 11 5565605
தொலைநகல்: telemarketing@tradesmann.com
வெப்தளம்: www.tradesmann.com



PRODIGY
Blood Glucose Monitoring System

## உங்கள் குருதியில் எந்த அளவு சீனி இருக்கின்றது ?



உங்கள் குருதியில் சீனியின் அளவை கணித்துக்கொள்ள அறிமுகமாகின்றது ப்ரொடிஜி ஓட்டோகோட் மற்றும் ப்ரொடிஜி பொக்கட்

மிக நுட்பமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இவை குருதியிலுள்ள குளுக்கோசின் அளவை துல்லியமாக கணிக்கக்கூடியது. கோடிங் அவசியமில்லை என்பதால் எவ்வித சிரமுமின்றி இலகுவாக பயன்படுத்தலாம். சட்டைப்பைக்குள் அடக்கக்கூடியது. முடிவுகளை மிக துல்லியமாக கணப்பொழுதில் தெரிந்துகொள்ள முடியும்.

### கோடிங் அவசியமில்லை

- விரைவாகவும் துல்லியமாகவும் கணிக்கலாம்
- சட்டைப் பைக்குள் அடக்கக்கூடியது
- ஒட்டோ கோட் மூலம் பரிசோதனை முடிவுகளை கேட்க முடியும்
- ஆயுட்கால உத்தரவாதம்
- USB போர்ட் வசதி கொண்டது
- 7,14,28 நாட்களுக்கான சராசரி முடிவுகளை பெறலாம்
- 10, 25, 50 Strips கொண்ட பக்கற்றுகளில் பெறலாம்

அமெரிக்காவின் FDA அமைப்பின் அங்கீகாரம் பெற்றது

கேளுங்கள்!



PRODIGY AutoCode

PRODIGY Pocket

Living Well with Diabetes

விபரங்களுக்கு அழையுங்கள் 0777 427827
எல்லா முன்னணி பாமசிகளிலும் கிடைக்கும்

மேலதிக விபரங்களுக்கு: www.prodigymeter.com

Emar Pharma (Pvt) Ltd.,
No 23, Anderson Road, Kalubowila, Dehiwela. Tel: 2810913/4 Fax: 2768475 Email: emar79@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org